DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1406 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 17, 2023

# WOMEN EMPOWERED SOCIAL CLUB அமைப்பு நடத்திய சர்வதேச பெண்கள் தின விழாவில் இரண்டு பெண் ஆளுமைகளுக்கு விருதுகள்

ஒன்றாரியோ மாகாணத்தில் திருமதி கவிதா செந்தில் அவர்கள் தலைமையில் இயங்கிவரும் **WOMEN EMPOWERED SOCIAL CLUB** பெண்களுக்கான அமைப்பு நடத்திய சர்வதேச பெண்கள் தினக் கொண்டாட்டம் கடந்த 11ம் திகதி சனிக்கிழமையன்று மாலை மார்க்கம் நகரில் அமைந்துள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

மேற்படி விழாவில் கனடாவில் சேவை மனப்பான்மையோடு பல நிறுவனங்களில் பணியாற்றிவரும் கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்களுக்கும் தனது என்பது வயதிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இணைந்து முதுமானிப் பட்டத்தைப் பெற்ற திருமதி யோகரத்தினம் செல்லையா ஆகிய இருவருக்கும் ஆளுமை விருதுகள் வழங்கப்பெற்றன.

(உள்ளே தொடர்ச்சி 17ம் பக்கத்தில்)





# யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் ஆனையிறவுக்கு அருகே இலங்கையின் மிக உயரமான நடராஜர் சிலை

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்...

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் ஆனையிறவுக்கு அருகே, கண்டி வீதியில் தட்டுவன்கொட்டிச் சந்தியில் ஒரு நடராஜர் சிலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கரைசிப்பிரதேச சபையின் ஒழுங்கமைப்பில் புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியோடு 27 அடி உயரமான அந்தச் சிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.இலங்கைத்தீவில் உள்ள மிக உயரமான நடராஜர் சிலை அதுவென்று கூறலாம்.



2009க்கு பின் ஆனையிறவுப் பிரதேசம் யுத்த வெற்றிவாதத்தின் உல்லாசத் தலங்களில் ஒன்றாக மாற்றப்பட்டிருக்கிறது.

(உள்ளே 14ம் பக்கத்தில் தொடர்ச்சி)

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance, First Mortgage, Second Mortgage, Commercial Mortgage, Equity Loan
Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service
Mobile: 416.710.9150

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI


HONOURING OUR HEROES
A COVID-19 COMMEMORATION CONCERT & FAIR!
பல்சுவை கலை நிகழ்வு!
Hosted by
FRONTLINE COMMUNITY CENTRE
March 25th & 26th, 2023
10 am - 10 pm
MARKHAM FAIRGROUNDS
10801 McCowan Rd, Markham, ON L3P 3J3
அனுமதி இலவசம்!
Media Partner
east FM 102.7
Mathusha Menon
Jessica Judes
Sinmaye Sivakumar
Prabha Balakrishnan
Rock Star
V. M. Mahalingam
Sutrapi Yohanathan
Thass Sivapathasuntharam
Sabaratnam Sabaeshkumar
Nitshika Suvaminathan
Sivasundaram Muralitharan
Anesha Loganathan
Rishi Sri
I, The Mountain
Rose Jones
Basement Reels
Wayne Madder
BoardTree
பேரிடர்க்கால அதியுயர் சேவையாளர் மதிப்பளிப்பு!
உள்ளூர் கலைஞர்களின் திரையிசை ஆடல்கள், யோகா,
வில்லுப்பாட்டு, நகைச்சுவை கதம்பம், வணிக உணவு சாவடிகள்!
MUSIC ACCOMPANIMENT BY
RA Rhythms
SEVENOTES
FRONTLINE COMMUNITY CENTRE
3031 Markham Rd, Unit #27,
Scarborough, ON M1X 1L9
events@fcccanada.org
www.fcccanada.org
416-840-4425
Funded by the Government of Canada
Canada
KALAVIYAM VOICE ACADEMY
AERO COURIER
Fast & Secure World Wide Service
Nallur Kumaran Inc.
yugam radio
SAI'S BOUTIQUE
STYLE CINE DANCE COMPANY
SAI SWARALAYA
NILA SURIYAH
COLLECTIONS
Mary's Bridal Creation
Sapphire Banquet & Catering
SHIVA
(647) 406-4868
(123) 325-4569
Laxy Fancy
JSAREES
KAILASA CANADA
SUTHARSAN SELLAR
416-567-9991
HOMELIFE
PRIMA DANCE SCHOOL
EST. 2011
pchs
Leading With Conviction And Courage
Mama & Mami's
KITCHEN
UTHAYAN உதயன்
TNO
THE NEIGHBOURHOOD ORGANIZATION
WORLD PARKINSON'S PROGRAM
Canadian Blood Services
BLOOD
PLASMA
STEM CELLS
ORGANS
& TISSUES
Hearing Solutions

## உதயன் கதிரோட்டம்

# ராஜபக்சாக்களைத் தொடர்ந்து இலங்கையை அழிவுப் பாதையில் அழைத்துச் செல்லும் ரணிலை அகற்றுவதற்கான வழி எது?

இலங்கை என்னும் அழகிய மாங்கனித் தீவை வீழ்ச்சிக்குள் கொண்டு சென்றதற்கு அந்த நாட்டில் தொடர்ச்சியாக ஆட்சி பீடத்தில் மாறி மாறி அமர்ந்து வந்த அரசியல்வாதிகளே என்றால் அது உண்மைக்கு முரணானது என்று கூற முடியாது.

இவ்வாறான நிலையில் ராஜபக்சா சகோதரர்கள் நாட்டின் வளத்தை திட்டமிட்டு சூறையாடியதை அவதானித்து வந்த பொருளாதாரம் தெரிந்த அரசியல் போராட்டத்தின் தலைமைகள் மக்களை சரியான வழியில் ஒன்றுதிரட்டி ஜனாதிபதியாக இருந்த கோட்டாபாய இராஜபக்சாவை நாட்டை விட்டு விரட்டியடித்தனர்.

ஆனால் தந்திரமாக ஜனாதிபதி பதவியைக் ‘திருடிக்’ கொண்ட ரணில் என்னும் சதிகாரர் முன்னர் பதவியில் இருந்த ராஜபக்சாக்களின் “நிழலாக நான் இருப்பேன்’ என்று இரகசிய ஒப்பந்தம் செய்து ஆட்சியில் தொடர்ந்து அமர்ந்த வண்ணம் எண்ணிக்கையற்ற அரசியல் சலுகைகளையும் சுகபோகங்களையும் அனுபவித்து வருகின்றார்.

இந்த நிலையில் அவரையும் அவரது சகாக்களையும் ஆட்சி பீடத்திலிருந்து அகற்றிவிட விடாப்பிடியாகப் போராடி வரும் பல்கலைக் கழக மாணவர்கள். தொழிற்சங்க வாதிகள் மற்றும் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் என இலட்சக் கணக்கானோர் தொடர்ச்சியாக குரல் எழுப்பி வந்தும். புதவி ஆசை கொண்ட ஜனாதிபதி அதிலிருந்து விலகிக் கொள்ள விருப்பம் இல்லாமல் தொடர்ந்து போராட்டக்காரர்களை அடக்கும் வகையில் படையினரை ஈடுபடுத்தி வருகின்றார் என்பதை நேரடியாகவே பார்க்கக் கூடியதாக உள்ளது.

இவ்வாறான நிலையில் போராட்டக்காரர்களைத் தாக்குதல் நடத்தி அடக்க முயலும் ரணில் - ராஜபக்ச நிழல் அரசை மக்கள் ஒன்றிணைந்து ஓட ஓட விரட்டியடிக்க வேண்டும் என முன்னிலை சோலிசக் கட்சியின் பிரசார செயலாளரும் தொடர்ச்சியாக அரசாங்கத்தின் ஏமாற்றுத் தனத்தை விமர்சனம் செய்து வருபவருமான துமிந்த நாகமுவ வலியுறுத்தினார்.

நேற்றைய முன்தினம் புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ”டொலர் விலை குறைந்துள்ள போதிலும் மக்களின் வாழ்க்கையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. பொருட்களின் விலைகள் குறையவில்லை. இதற்கு பின்னால் ஏமாற்றுத் தனம் ஏதோ உள்ளது போன்று தெரிகின்றது. செயற்கையாக பொருளாதார உயர்வு ஒன்று ஏற்படுவது போன்ற மாயையை ஏற்படுத்த ரணிலும் அவரது சகாக்களான அதிகாரிகளும் செயற்பட்டு வருகின்றனர்.

அத்துடன் 32 வீதமான மக்கள் உண்ண உணவின்றி உள்ளனர். கடந்த வாரங்களில் குடும்பம் குடும்பமாகப் பல தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எல்லாம் வறுமை, கடன் காரணமாக இடம்பெற்றவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து அரசாங்கத்தை விமர்சனம் செய்து வருகின்றார்’ வாழ வழியில்லாமல் அவர்கள் இவ்வாறு மக்கள்தற்கொலை செய்கின்றனர். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு ஏற்ப மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையை இலாப மீட்டும் சபையாக மாற்றி அதை விற்பதே இதன் நோக்கம். உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திப்போடுவதை நாம் எதிர்க்கின்றோம். அந்த உரிமையைக் கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினால் அதன் மீது தாக்குதல் நடத்துகின்றது அரசு. அந்தத் தாக்குதலில் இதுவரை மூவர் பலியாகியுள்ளனர் எ எனவும் தெரிவித்துள்ளார்.

இவரது கூற்றிலிருந்து ஒன்று தெளிவாக விளங்குகின்றது. தென்னிலங்கை சிங்கள மக்கள் ரணிலையும் சேர்த்து நாட்டை நாசமாக்கிய அனைவரையும் விரட்டியடிக்கத் தயாராகிவிட்டனர். அதற்காக தகுந்த ஆயதமாக தேர்தலுக்காக காத்திருக்கின்றார்கள்.

எனவே தமிழர் பகுதிகளிலும் அரசுக்கும் ரணிலுக்கும் அவரது போலியான ஆட்சிக்கும் எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறவேண்டும்.

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சினது, கனடாவுக்கான பிரதிநிதி ஒருவர் நியமனம்

இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சினது, கனடாவுக்கான நாட்டின் பிரதிநிதியாக கனடாவாழ் தமிழ் அன்பர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி வெளியாகியுள்ளது.



இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின், கனடாவுக்கான நாட்டின் பிரதிநிதியாக கனடாவைச்சேர்ந்த அனுபவமிக்க இளம் வர்த்தகரான திரு. ஆனந்தம் இரத்தினகுமார் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டார் என்ற செய்தியானது கனடாவிலும் இலங்கையிலும் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பரவியுள்ளது

மேற்குறித்த விடயம் தொடர்பாக 15-03-2023 புதன் அன்று கொழும்பில் அமைந்துள்ள முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் செயலகத்தில் மேற்படி விசேட நியமனம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. குறித்த நியமனத்தை முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ டிலும். எஸ். அமுனுகம அவர்கள் வழங்கிவைத்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது மேற்படி விசேட நியமனத்தைப்பெற்றுக்கொண்ட கனேடிய வர்த்தகர் திரு.ஆனந்தம் இரத்தினகுமார் தனது இந்த நியமனத்தினூடாக தாம் செயற்படுத்தவுள்ள திட்டங்கள் தொடர்பாக ஊடக அறிக்கை ஒன்றை தமிழில் வெளியிட்டுள்ளார். அதில் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும் பொருளாதார மந்த நிலைக்கான காரணங்களை அறிந்து அதற்கேற்ப வடக்கு கிழக்கு மலையகம் என அனைத்துப் பகுதிகளில் பொருளாதார மேம்பாடு காண செயலாற்றுவேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**மணமகன் தேவை**

கனடா **Toronto** இல் கணக்காளராக பணியாற்றும் 30 வயதுடைய **5’1”** உயரமுள்ள கத்தோலிக்க பெண்ணுக்கு பொருத்தமான மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

**தொடர்புகளுக்கு:**
94 (77) 603 4886

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
**416-706-8160**

**Sapphire Banquet & Catering**

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Engagement Party
- Family Get-together
- Graduation Party
- Religious Ceremonies
- Wedding Showers
- and more...

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

**Handyman Wanted**

Handyman with experience needed for Renovation company in Toronto. Salary negotiable.

Contact: Thambi
OODAM MAINTENANCE WORK

Call:
(416) 464-1938

**CLEANING STAFF WANTED**

House Cleaning Staff Wanted

Day Shift Only.
(No Evenings Or Weekends)

Call:
(905) 4726042

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கன்னியாகுமரிமாவட்டத்தில் கைப்பெண்ணை மின்கம்பத்தில் கட்டி வைத்து தாக்கிய கயவர்கள் கைது



கன்னியாகுமரி மாவட்டம் அருமனையை அடுத்த மேல்புறம் வட்டவிளை, குளவாய்கால் விளையைச் சேர்ந்தவர் தொபியாஸ். இவருடைய மனைவி கலா (வயது 35). கணவர் இறந்த பின்னர் தனது தாயுடன் வசித்து வருகிறார். பம்மத்தில் மசாஜ் சென்டர் நடத்தி வருகிறார்.

இவரை மேல்புறம் சந்திப்பு பகுதியில் உள்ள ஆட்டோ டிரைவர்கள் சிலர் கேலி கிண்டல் செய்து வந்தனர். இதை கலா கண்டித்தார்.

இதில் ஆத்திரம் அடைந்த டிரைவர்கள் சிலர் சேர்ந்து கலாவை அங்குள்ள மின் கம்பத்தில் கட்டி வைத்து சரமாரியாக தாக்கினர்.



இதைப்பார்த்த சிலர், வீடியோ எடுத்து அருமனை போலீசாருக்கு அனுப்பி வைத்தனர். வீடியோ பார்த்த போலீசார் அதிர்ச்சி அடைந்தனர்.

உடனடியாக சம்பவ இடத்துக்கு சென்று கலாவை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இதுகுறித்து விசாரணை நடத்தி, பாகோடு புத்தன் வீடு பகுதியைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் சஜி (47), பாகோடு முற்றத்து விளை பகுதியை சேர்ந்த வினோத் (44), டெம்போ டிரைவர் பிபின், ஆட்டோ டிரைவர் விஜயகாந்த் (37) ஆட்டோ டிரைவர் அரவிந்த் ஆகிய 5 பேர் மீது வழக்கு பதிவு செய்தனர். இதில் விஜயகாந்த், சசி, வினோத் ஆகிய 3 பேரை கைது செய்தனர். மேலும் 2 பேரை தேடி வருகிறார்கள்.

கலாவை கட்டி வைத்து அடிக்கும் காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரல் ஆகி உள்ளன. இந்த சம்பவம் தொடர்பாக ஏடிஎஸ்பி விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. மகளிர் அமைப்புகளும் சம்பவ இடத்துக்கு சென்று விசாரித்தனர். பெண்ணை கம்பத்தில் கட்டி வைத்து தாக்கியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய 5 பேரில் 3 பேர் மீது ஏற்கனவே பல்வேறு வழக்குகள் உள்ளன.

# பாண்டியன்குளம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்



- ஈழமகன் முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களுக்கெதிராக நட்டாங்கண்டல் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தார்கள்.

வீட்டில் இருந்த வயோதிபர் ஒருவரை கைது செய்து அழைத்து வந்துள்ளதாகவும், குறித்த வீட்டில் மணல் இருந்ததாகவும் வீட்டின் உரிமையாளர் மன்னாருக்கு சென்றிருந்த சந்தர்ப்பத்தில் அவர் இல்லாத பட்சத்தில் அங்கு வீட்டின் காவலுக்காக இருந்த உரிமையாளரின் தந்தை 68 வயது முதியவரை பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களை கைது செய்யாது பொலிஸார் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த அப்பாவிகளை கைது செய்வதாகவும் தெரிவித்த மக்கள், பொலிஸார் சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுக்க ஊக்கமளிப்பதாகவும், அப்பாவிகளை பொலிஸார் பழிவாங்குவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொலிசாரால் குறித்த வீட்டில் இருந்து ஏற்றப்பட்ட மணலும் இதுவரை



போலிஸ் நிலையத்தில் கொண்டுவரப்படவில்லை என்றும், உரியவரை கைது செய்யாமல் அப்பாவிகள் கைது செய்யப்படுவதாகவும் தெரிவித்த அவர்கள்.

கூலிக்கு ஆடு மேய்த்த முதியவரை கைது செய்தமையை கண்டிக்கின்றோம், உடன் விடுதலை செய், நடவடிக்கைக்குரியவரை கைது செய், சம்மந்தம் இல்லாதவரை விடுதலை செய் போன்ற சுலோகங்களை ஏந்தி போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

இதே வேளை கடந்த 25-03-2022 அன்று அனுமதிபத்திர விதிமுறைகளை மீறி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் மணலுடன் இரண்டு உழவு இயந்திரங்கள் நட்டாங்கண்டல் பொலிசாரால் கையகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அன்று இரவே 10 மணியளவில் இரு உழவு இயந்திரங்களும் மின்சாரத்தை இடைநிறுத்தி வெளியில் விடப்பட்டிருந்ததாகவும் அவர்கள் மேலும் தெரிவித்திருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிவித்த பொலிசார் அனுமதியற்ற முறையில் மணல் யாட் வைத்திருந்ததாக 68 வயதுடைய ஒருவரை கைது செய்துள்ளாதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வீட்டில் வைத்திருந்த மணலினை ஏற்றுவதற்கு பொலிசாருக்கு யார் அனுமதி கொடுத்தது, அத்துமீறி மணல் ஏற்றி செல்பவர்களை வேடிக்கைபார்க்கும் போலீசார் தம்மீது மட்டும் அதுவும் மணல் ஏற்றும்போது கைது செய்யப்பட்டாலும் பரவாயில்லை, அராஜக போலீசார் என்று கூக்குரலிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுட்டனர்.

இதே வேளை கைதான வயோதிபரை பார்வையிட சென்ற இளைஞரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தகாத வார்த்தைகளை பிரயோகித்து அடிக்க வந்ததாகவும், வெளியில் செல்லுமாறும் விரட்டியதாகவும் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் போலீசார் அச்சுறுத்தும் விதமாக தமது தொலைபேசிகளில் காணொளி பதிவை செய்துகொண்டிருந்தனர்.

# தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை நீந்தி சாதனை படைத்த பெங்களூரைச் சேர்ந்த ஏழு பேர்





- மன்னார் நிருபர் (14-03-2023)

தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை 10 மணி நேரம் 45 நிமிடங்களில் 7 நீச்சல் வீர, வீராங்கனைகள் ஒரே நேரத்தில் நீந்தி சாதனை படைத்தனர்.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் உள்ளது திறந்த நீர் நீச்சல் அறக்கட்டளை. இதில் பெங்களூரைச் சேர்ந்த, பிரசாந்த் ராஜண்ணா, ராஜசேகர் துபரஹள்ளி, ஜெயப்பிரகாஷ் முனியல் பாய், அஜத் அஞ்சனப்பா ஆகிய நான்கு நீச்சல் வீரர்கள், சுமா ராவ், சிவரஞ்சனி கிருஷ்ணமூர்த்தி, மஞ்சரி சாவ்ச்சாரியா ஆகிய மூன்று நீச்சல் வீராங்கனைகள் என பயிற்சி பெற்ற 7 பேரும் இலங்கையிலுள்ள தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு வரையிலும் உள்ள சுமார் 30 கி.மீ தொலைவிலான பாக் ஜலசந்தி கடற்பரப்பினை நீந்தி கடப்பதற்காக இந்திய வெளியுறவுத்துறை, இலங்கை தூதரகம் மற்றும் பாதுகாப்பு துறை அமைச்சகத்திற்கு அனுமதி கோரியிருந்தனர்.

இந்திய-இலங்கை இரு நாட்டு அனுமதியும் கிடைத்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ராமேஸ்வரம் மீன்பிடி இறங்கு தளத்திலிருந்து இரண்டு படகுகளில் தங்கள் நீச்சல் பயிற்சியாளர் சுஜேத்தா தேப் பர்மன் தலைமையில் மீனவர்கள் உள்ளிட்ட 16 பேர் கொண்ட குழுவினர் இலங்கை தலைமன்னார் சென்றனர்.

தலைமன்னாரிலிருந்து திங்கட்கிழமை (13) அதிகாலை 5 மணிக்கு கடலில் குதித்து நீந்த தொடங்கிய 7 பேரும் மாலை 3.45 மணி அளவில் (10 மணி நேரம் 45 நிமிடங்களில் நீந்தி) தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியை வந்தடைந்தார்.

நீந்தி சாதனை படைத்தவர்களை சுங்கத்துறை, மரைன் போலீசார், சுற்றுலாப் பயணிகள், பக்தர்கள் அரிச்சல்முனையில் வரவேற்றனர்.

இதற்கு முன்னதாக தலைமன்னார், தனுஷ்கோடி இடையிலான பாக் ஜலசந்தி கடற்பகுதியை 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தேனியைச் சேர்ந்த ஆர். ஜெய் ஜஸ்வந்த் தனது 10 வயதிலும், 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மும்பையைச் சேர்ந்த ஜியா ராய் என்ற ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட சிறுமி உள்ளிட்ட சிலர் குறைந்த வயதுகளில் நீந்தி நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வெளி நாடுகளுக்கு அனுப்புவதாக பண மோசடி செய்துவிட்டு அகதிகள் போர்வையில் மண்டபத்தில் பதுங்கியுள்ள அகதியை தேடி சென்ற இலங்கை நபர்

# இலங்கையில் வெளிநாட்டு வேலைக்கு அனுப்புவதாக கூறி 23 பேரிடம் தலா ரூ 6 லட்சம் பணம் வாங்கிக் கொண்டு தமிழகத்துக்கு அகதியாக தப்பி சென்ற இலங்கையர்

- மன்னார் நிருபர் (13-03-2023)

இலங்கை திருகோணமலை வெருகல் பகுதியைச் சேர்ந்த ஜெயக்குமார் என்பவர் உட்பட 23 பேர் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கிருந்து வெளிநாடுகளுக்கு சென்று பிழைக்கலாம் என அதே பகுதியைச் சேர்ந்த ஜனார்த்தனன் என்பவரிடம் தலா ஆறு லட்சம் வீதம் 23 பேர் பணம் கொடுத்து தங்களை எப்படியாவது ருமேனியா, ஆஸ்திரேலியா, கனடா நாட்டுக்கு வேலைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

23 பேரிடம் தலா ரூ 6 லட்சம் வீதம் பெற்றுக் கொண்ட ஜனார்த்தனன் இவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பாமல் அவர் அங்கிருந்து பொதுமக்களிடம் பெற்ற பணத்துடன் சட்டவிரோதமாக தமிழகத்திற்கு அகதியாக படகு மூலம் தப்பித்து தனுஷ்கோடிக்கு சென்று தற்போது மண்டபம் அகதிகள் முகாமில் அகதியாக தங்கி இருக்கிறார்.

இலங்கையில் லட்சக்கணக்கில் மோசடி செய்துவிட்டு அங்கிருந்து கள்ளத்தோணியில் தப்பி அகதியாக இந்தியாவுக்கு சென்று மண்டபம் அகதிகள் முகாமில் தங்கி இருக்கும் ஜனார்த்தனன் மீது நடவடிக்கை எடுத்து தங்கள் பணத்தை பெற்று தர வேண்டும் என்று கூறி இலங்கையில் பணம் கொடுத்து ஏமாந்த ஜெயக்குமார் என்பவர் விமானம் மூலம் இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு சென்று மண்டபம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

ஜெயக்குமார் அளித்த புகார் மீது போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் திங்கட்கிழமை (13) ராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரை நேரில் சந்தித்து புகார் அளித்தார்.

இலங்கையில் குற்றச் செயல்கள் புரிந்து விட்டு அகதிகள் போர்வையில் தமிழகத்துக்கு தப்பி வருபவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதால் போலீசார் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏ-9 வீதியில் பாடசாலை மாணவர்களை ஏற்றாது செல்லும் பேருந்துகள் — மனித உரிமைகள் ஆணைக்குழு தலையீடு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏ_9 வீதியில் உள்ள பனிக்கன்குளம் கிழவன்குளம் கிராமங்களின் பாடசாலை மாணவர்களை பேருந்துகள் ஏற்றாமல் செல்கின்ற விடயம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை போக்குவரத்து சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

குறித்த விடயம் ஊடகங்களில் வெளிவந்ததும் அடிப்படையில் 1996/21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டம் பிரிவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையாக இந்த விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்டு குறித்த கடிதத்தை அனுப்பியுள்ளது.

குறித்த கடிதத்தில்,

பிரதான பிராந்திய முகாமையாளர். இலங்கை போக்குவரத்துச் சபை, வடக்கு வலயம் கோண்டாவில்

முறைப்பாட்டிலக்கம் - HRC/JA/SuoMoto/003/2023

(1996/21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டம் பிரிவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணை)

"பேருந்துகள் ஏற்றாது செல்வதனால் வீதியில் அந்தரிக்கும் மாணவர்கள்" எனும் தலைப்பில் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயமானது 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றது.

குறித்த செய்திகளில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மாங்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் பனிக்கன்குளம் மற்றும் கிழவன் குளம் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களை A-9 வீதியில் பயணிக்கும் பேருந்துகள் ஏற்றாது சென்றதால் மாணவர்கள் பரீட்சைக்குச் செல்ல முடியாத நிலைமை தோன்றியுள்ளது என்றும் பரீட்சை நடைபெற்ற நாளான நேற்று முன்தினம் மாணவர்கள் தரிப்பிடத்தில் காத்திருந்தும் காலை 8.12 மணிவரை எந்தப் பேருந்துகளும் மாணவர்களை ஏற்றவில்லை. பின்னர் மாங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் தரிப்பிடத்துக்கு விரைந்த பொலிஸார் அரச பேருந்து வருவதை அவதானித்து பேருந்தை மறித்த போது நடத்துநருக்கும் பொலிஸாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்ட பின்னரே மாணவர்களை ஏற்றிச் சென்றதுடன், மாணவர்களுக்கு பருவகாலச் சிட்டை பெறுமாறு இ. போ.ச அதிகாரிகளால் ஆலோசனை வழங்கப்பட்டதன் பிரகாரம் சிட்டை பெற்றும் எந்தவித முன்னேற்றமும் இல்லை என்றும் அதன் பின்னரே தம்மை பேருந்துகள் ஏற்றாமல் செல்வது அதிகரித்துள்ளது என்றும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அதிகாரிகள் பலருக்குத் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை அத்தோடு வீதியை மறித்து போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.


ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA
01, 3rd Cross Street, Jaffna | 021 – 2222021 | hrcjaffna@sltnet.lk | 2023.03.15

பிரதான பிராந்திய முகாமையாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை,
வடக்கு வலயம்
கோண்டாவில்

முறைப்பாட்டிலக்கம் - HRC/JA/SuoMoto/003/2023

(1996/21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டம் பிரிவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணை)

நீதி மன்றுக்கும் கொண்டு செல்லப்பட்டு வடமாகாண போக்குவரத்துப் பிரிவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லையெனில் A-9 வீதியை மூடிப் போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளதாக குறித்த பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டள்ளது.

மேற்படி பத்திரிகையில் தெரிவித்த சம்பவம் மட்டுமன்றி ஏனைய போக்குவரத்துப் பாதையிலும் இவ்வறான சம்பவங்கள் இடம்பெறுவது பத்திரிக்கைகள் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் ஆணைக்குழுவினால் அவதனிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த குறித்த சம்பவங்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுத்து தங்களின் சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் உரிய அறிவுறுத்தல்களை வழங்கி ஆணைக்குழுவிற்கு அறிக்கை ஒன்றினை உடன் சமர்ப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். எனவும்

இவ்விடயமானது, 1996 ஆம் ஆண்டு 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் 18 (C) இன் பிரகாரம் தேவைப்படுத்தப்படுகின்றது. எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரதி தலைவர் வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, வடக்கு மாகாணம் அவர்களுக்கும் தனியார் போக்குவரத்து சாரதி மற்றும் நடத்துநர்களுக்கும் உரிய அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற தொழிற்சங்க போராட்டத்தில் முல்லை மாவட்ட ஊழியர்கள் இணைவு

நாடளாவிய ரீதியில் பல தொழிற்சாலைகள் இணைந்து இன்று மாபெரும் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டனர் அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பல தொழிற் சங்க பிரதிநிதிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வைத்தியசாலை வைத்தியர்கள் ஊழியர்கள் பணி பகிஸ்கரிப்பு காரணமாக மாவட்டத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் வெளி நோயாளர் பிரிவுகள் இயங்கவில்லை அத்தியாவசியமான அவசர சேவை பிரிவு மட்டுமே இயங்குகிறது இதனால் நே-ாயாளிகள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

இதேவேளை பாடசாலைகளில் ஆசிரியர்கள் சமூகமளிக்காததால் பாடசாலைகள் இயகக முடியாத நிலை ஏற்பட்டது இதேவேளை பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகை மிக மிகக் குறைவான அளவில் காணப்பட்டது.

வங்கி ஊழியர்கள் பகிஸ்கரிப்பு காரணமாக வங்கி சேவைகள் இடம்பெறவில்லை.

புகையிரத ஊழியர்கள் விடுமுறை இரத்து செய்யப்பட்டதன் காரணமாக புகையிரத சேவை இடம்பெற்று வருகிற அதேவேளை அரச மற்றும் தனியார் பேருந்து சேவைகள் வழமை போன்று இயங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# சுய தொழில் முயற்சியாளர்கள் சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள் – கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மன்னார் மாவட்ட உதவி பணிப்பாளர்

**- மன்னார் நிருபர் (16-03-2023)**

சுய தொழில் முயற்சியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு முன்னெடுக்கும் சுயதொழில் பயிற்சிகளில் பங்கு கொள்ளுகின்றவர்கள் தமது இலக்கை உரிய முறையில் அடைந்து கொள்ள வேண்டும் என இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மன்னார் மாவட்ட உதவி பணிப்பாளர் ஜே.எம்.ஏ.லெம்பேட் தெரிவித்தார்.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனமும்,மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையும் இணைந்து ஏற்பாடு செய்த சவர்க்காரம் மற்றும் சலவைத்தூள் சார்ந்த உற்பத்தி சார் பயிற்சி நெறியின் 2 ஆம் கட்டமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வியாழக்கிழமை (16) மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறுகிய காலத்தில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்துடன் தொடர்பை ஏற்படுத்தி மாவட்டத்தில் உள்ள சுய தொழில் முயற்சியாளர்களின் சுயதொழில் நடவடிக்கைகளை மேம்படுத்தவும் சுய தொழில் ஊக்குவிப்பு மேம்படுத்த வேண்டும் என்ற உயரிய



சிந்தனைக்கு அமைவாக ஆரம்பத்தில் விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்தி இருந்தோம்.

அதன் 2 ஆம் கட்டமாக கைத்தொழில் ஒன்றை உருவாக்கி அதனுடாக எமது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு முதல் கட்டமாக சவர்க்காரம் மற்றும் சலவைத்தூள் சார்ந்த உற்பத்தி சார் பயிற்சி நெறியை முன்னெடுத்து வருகிறோம்.




இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு நான்கு நாட்கள் குறித்த பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

எனவே உங்களின் சுய தொழில் முயற்சிகளை மேம்படுத்த கிடைத்த சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

எதிர் காலத்தில் சிறந்த சுய தொழில் முயற்சியாளர் அல்லது வளவாளராக வர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் உங்களுக்கு சகல விதமான ஆலோசனைகள் வழங்கப்படும். குறிப்பாக உற்பத்தி, உற்பத்தியின் பின் பொதியிடல், சந்தைப்படுத்தல், பதிவு செய்தல் ஆகியவை தொடர்பில் சிந்திக்கத் தேவையில்லை.

எமது அலுவலகர்கள் ஊடக உங்களுக்கு வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படும். எனவே கலந்து கொண்டுள்ள அனைத்து பயிற்சியாளர்களும் உரிய முறையில் உங்கள் சுய தொழில் முயற்சிகளை முன்னெடுத்து பயனடைந்து கொள்ளுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த சுய தொழில் உற்பத்தி சார் பயிற்சி நெறியின் போது மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# மனோ சாட்சி
# மனம் திறக்கிறார் மனோ கணேசன்

## (கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர் - அத்தியாயம் 7)



## “ராஜபக்சவையும், பொன்சேகாவையும், வேட்பாளர்களாக மோத விட்ட ரணில்”

• 2009ல் யுத்த வெற்றி ஆரவாரங்கள் அடங்க, மஹிந்த, கோடாபய, பொன்சேகா ஆகிய, மூன்று ஹீரோக்களில் “முதல் ஹீரோ யார்?” என்ற கேள்வி சிங்கள மக்கள் மத்தியில் எழுந்தது.

• அந்நேரம் மஹிந்தவை எதிர்த்து ரணில் போட்டியிட்டிருந்தால், பத்து இலட்சம் வாக்குகளை கூட பெற்றிருக்க முடியாது.

• எனது கேள்வி, “சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராக நிறுத்துவதில் தமிழ் மக்களுக்கான நிகழ்ச்சி நிரல் என்ன? என்பதாகும்.

• இன்னொரு சுவாரசிய விஷயத்தையும் அனோமா பொன்சேகா சொன்னார். அதை இங்கே எழுத முடியாது. யாரும் நேரில் கேட்டால் சொல்லலாம்.

• கொள்ளுப்பிட்டி 5ம் ஒழுங்கையில், ரணிலின் வீட்டின் பின் கதவால் நடந்து, நாம் அடுத்த வீதிக்கு வந்து, அந்த மழைபெய்யும் இரவில் இரகசிய பயணம் சென்றோம்.

• இந்த திகில் சினிமா படத்துக்கு திரைக்கதை, இயக்கம் மங்கள சமரவீர.

---

**காலகட்டம்: 2009ல் யுத்தம் முடிய மஹிந்த, கோட்டா, பொன்சேகா மூவரையும் சிங்கள பெரும் தேசியவாதம் ஆஹா, ஓஹோ, என கொண்டாடிய ஆரவார காலம். 2010ம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தல் வேளை நெருங்குகிறது.**

---

2009 ஆம் ஆண்டு கடும் யுத்தம் முடிவடைந்த, சூட்டோடு, ஜனாதிபதி தேர்தலை, நடத்தி முடிசூடா மன்னராகிவிட, மஹிந்த ராஜபக்ச தீர்மானித்தார்.

“மன்னா, மன்னாதி மன்னா” என அவரை போற்றி, பிரபல சிங்கள பாடகர்கள் பாடிய பாடல்கள் நாடு முழுக்க எதிரொலித்தன.



“எவராலும் வெல்லவே முடியாது” என்று இருந்த புலிகளை வென்று விட்டோம் என்ற பிரமிப்பில் சிங்கள மக்கள் மஹிந்தவின் பின்னால் திரண்டனர்.

மஹிந்தவை எதிர்த்து ரணில் போட்டியிட்டால் பத்து இலட்சம் வாக்குகளை கூட பெற்றிருக்க முடியாது.

அது நமக்கும் தெரியும். ரணிலுக்கும் தெரியும்.

ஐதேக பிரதி தலைவர் கரு ஜயசூரியவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்க ரணில் தயாரில்லை. அவர் வெற்றி பெற்றால் ஐதேகவும் அவருடன் போய் விடுமென ரணிலுக்கு பயம். ஆகவே கருவுக்கு “நோ”. ரணிலை எதிர்த்து எவரும் கேள்வி கேட்கவும் தயாரில்லை. எனவே பொது வேட்பாளர் தேடல்.

அப்போ எதிரணியில் பிரதானமாக நான்கு கட்சி தலைவர்கள் இருந்தோம். ரணில் விக்கிரமசிங்க, மங்கள சமரவீர, நான் மற்றும் ரவுப் ஹக்கீம்.

தேர்தலின் போது இன்னமும் வேறு பல கட்சிகள் வந்து சேர்ந்தன. ஆனால், ஆரம்பம் நாம்தான். ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி (அப்போது தமிழ் முற்போக்கு கூட்டணி இருக்கவில்லை.!), ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி (ம). கடைசியாக சொன்னது மங்களவின் கட்சி.

2009 யுத்தம் முடிந்த பிறகு வெற்றி விழாவில் நாயகர்களாக மஹிந்த, கோடாபய, பொன்சேகா, மூவரையும் சிங்கள பெரும் தேசியவாதம் தூக்கி வைத்து கொண்டாடிய, ஆரவாரம் அடங்கியதும், இம் மூவரில் “முதல் ஹீரோ யார்?” என்ற கேள்வி எழுந்தது.

“தான் முந்திவிடுவேன்” என்று அஞ்சியே, ராஜபக்சர்கள், போர் முடிந்ததும் தன்னை ஒதுக்கினார்கள் என, பொன்சேகா கூறினார்.

ராஜபக்சர்கள் - பொன்சேகா இடையிலான பனிப்போரை பயன்படுத்த எதிரணிக்குள்ளே பேச்சை மங்கள ஆரம்பித்தார்.

கொழும்பு கேம்பிரிட்ச் டெரஸில் அமைந்திருந்த எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தில் தொடர்ச்சியாக ரணில், மங்கள, ரவுப் மற்றும் நானும் கூடி இவ்விவகாரம் தொடர்பில் தொடர்ந்து கலந்துரையாடினோம்.

ஒருநாள் ரவுப் ஹக்கீமின் கொள்ளுபிட்டி ஐஸ்கிரீம் இல்லத்துக்கு எம்மை பார்க்க ரகசியமாக சரத் பொன்சேகாவின் தூதுவர்கள் வந்தார்கள்.

ஒருவர், பொன்சேகாவின் மனைவி அனோமா. அடுத்தவர் பொன்சேகாவின் அப்போதைய சகபாடி சில்வா. (அவர்தான் இன்றைய ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியலில் பாராளுமன்றம் வந்து, 20ம் திருத்த வாக்கெடுப்பின் போது அரசு பக்கம் தாவிய டயனா கமகேயின் கணவர்).



பொன்சேகாவுக்கு தமிழ், முஸ்லிம் வாக்குகள் அவசியம் என்றும், அந்த வழிகாட்ட வேண்டும் என்றும் பொன்சேகாவின் தூதுவர்கள் கேட்டார்கள்.

இடையில் ஒரு குட்டிக்கதை.

சரத் பொன்சேகாவை பொது வேட்பாளர் ஆக்கும் தீர்மானம் பரிசீலிக்கப்படும் பொழுது அதை முதலில் எதிரணியில் பகிரங்கமாக எதிர்த்தது நான்தான். எனக்கு ஞாபகமிருக்கிறது.

எனது எதிர்ப்பை கண்ட மகிந்த அரசு குதூகலமானது. ஏனெனில் பொன்சேகா தனக்கு எதிராக போட்டியிட முடியுமா என மஹிந்த பலத்த அதிர்ச்சியடைந்திருந்தார்.

அரச ஊடகங்கள் டெயிலி நிவ்ஸ், சிலுமின, தினகரன், அரச தொலைகாட்சிகள் “மனோ எதிர்கட்சிகளின் பானையை உடைத்து கனவை கலைத்துவிட்டார்!” என்று எனது எதிர்ப்புக்கு கூடிய பிரச்சாரம் கொடுத்தன. தமிழ் ஊடகங்களும் எனது செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்க, தமிழர் மத்தியிலும் “ஏன், சரத் பொன்சேகா?” என்ற கேள்வி மெல்ல எழுந்தது.

எனது கேள்வி, “பொன்சேகாவை பொது வேட்பாளராக்குவதில், தமிழ் மக்களுக்கான நிகழ்ச்சி நிரல் என்ன?” என்பதாகும். இதற்கு பதில் இல்லாமல் பொது வேட்பாளர் தீர்மானத்திற்கு இணங்க மறுத்தேன்.

இந்நாளில் “ரவுப் ஹக்கீமின் வீட்டுக்கு போங்கள். முக்கியமான நண்பர்கள் உங்களை சந்திக்க வருகிறார்கள்” என ரணிலிடமிருந்து திடீர் செய்தி வர, அங்கு போனேன்.

எனது எதிர்ப்பு பெரிதானால், ஒட்டு மொத்த தமிழ் கட்சிகளும், அப்படியே சிந்திக்க தொடங்கினால், “பொன்சேகா திட்டம்” தோல்வியடையும் என்பதால் அச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டதாக பின்னாளில் அறிந்தேன். நண்பர் ரவுப்பின் வீட்டில் நிகழ்ந்ததால், ரவுப்பும் இந்த சந்திப்பு திட்டத்தில் பங்காளி எனவும் அறிந்தேன்.

சரி விஷயத்துக்கு வருவோம்.

கோதாபயவும், பொன்சேகாவும் ஒன்றாகவே படித்ததாகவும், ஆரம்பம் முதல் அவர்களுக்கிடையில் முரண்பாட்டு போட்டிகள் இருந்ததாகவும், அது இப்போது முற்றி விட்டதாகவும், அனோமா எமக்கு சொன்னார்.

இன்னொரு சுவாரசிய விஷயத்தையும் அனோமா சொன்னார். அதை இங்கே எழுத முடியாது. யாரும் நேரில் கேட்டால் சொல்லலாம்.

எப்படியோ, பொது வேட்பாளராக, பொன்சேகா தரப்பின் ஆர்வத்தை அன்று அறிந்தேன். இவர்கள் ஏன் எம்மை பார்க்க வருகிறார்கள்?

சில நாட்களில், அந்த சுவாரசியமான சம்பவம் நடந்தது.

ஒருநாள் மாலை 7 மணி அளவில் கேம்பிரிட்ச் டெரஸ் எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தில் பேசிக்கொண்டிருந்த போது, ரணில் திடீரென எழுந்து “வாருங்கள்! ஒரு பயணம் செல்வோம்” என்று என்னையும், மங்களவையும், ரவுப் ஹக்கீமையும் அழைத்தார்.

கேம்பிரிட்ச் டெரசிற்கு அருகாமையிலேயே இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் 5ம் ஒழுங்கை இல்லத்திற்கு, (அதுதான் அரகல கிளர்ச்சியில் தற்போது எரிக்கப்பட்டது..!) நாம் சென்றோம்.

எங்கள் பாதுகாவல் அதிகாரிகளும், வாகனங்களும் ரணிலின் வீட்டுக்கு முன்னாள் நிற்க, நாம் உள்ளே சென்றோம். மழையிரவு.

ரணில் தனது வீட்டின், பின் வாசல் வழியாக எம்மை அழைத்து சென்றார். அங்கு ரணிலின் சகோதரரின் வீடு. அந்த வீட்டுக்குள்ளாகவும் நடந்து, அந்த வீட்டின் முன் வாசல் வழியாக, நாம் அடுத்த வீதிக்கு வந்தோம்.

அங்கு இரண்டு வாகனங்கள் தயாராக இருந்தன. ஒரு வாகனத்தில் ரணிலும், மங்களவும், அடுத்த வாகனத்தில் நானும், ஹக்கீமும் ஏறிக்கொண்டோம்.

இது எதுவும் ரணில் வீட்டின் முன்னால் நின்ற எமது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தெரியாது.

அந்த மழை நேர இரவில் ஒரு மணித்தியாலம் பயணித்து கொழும்பு நகரிற்கு தென்கிழக்கே இருக்கக்கூடிய ஒரு பிரதேசத்தில் ஒரு வீட்டுக்கு சென்றோம்.

வீட்டுக்காரர்கள் எவரும் வந்து எங்களை வரவேற்றதாக ஞாபகம் இல்லை. “திறந்திருந்த வீட்டுக்குள் ஏதோ நுழைவதை போல்”, முன்கூட்டி ஏற்பாடு செய்த முறையில் அவ்வீட்டின் மேல் மாடியிலே சென்றமர்ந்தோம்.

ஏதோ திகில் சினிமா படம் மாதிரி இருந்தது. படத்துக்கு திரைக்கதை, இயக்கம் மங்கள சமரவீரதான் என்றும் தெரிந்தது.

ஒரு பத்து நிமிசத்தில், அந்த வீட்டு வளவிற்குள் ஒரு வாகனம் சத்தம் கேட்டது. சில நிமிடங்களில் நாமிருந்த இடத்திற்கு, மாடிப்படிகளில் ஏறி ஒருவர் வந்தார். அவர், சரத் பொன்சேகா.

வந்தவர் முகத்திலே ஒரு பதட்டமும், பணிவும் தெரிந்தது. எம்மைகண்டு மிகவும் மரியாதையாக 'Good Evening Sir' என்று சொல்லிக்கொண்டு இராணுவ பாணியில் வந்தமர்ந்தார்.

அன்றைய எதிர் கட்சி தலைவர் ரணிலுக்கு, பொன்சேகா மிகுந்த மரியாதை தந்ததை நான் கண்டேன். பின்னாளில், பொது வேட்பாளராக போட்டியிட்டு தேர்தல் பிரச்சாரம் முடியும் கட்டத்திலே இந்த மரியாதை, தலைகீழானது வேறு விஷயம்.

பொன்சேகாவை நான் அப்பொழுதுதான் முதல் முதலாக கண்டேன். பொது வேட்பாளராக பொன்சேகாவை அங்கீகரிப்பது தொடர்பில் நடைபெற்ற முதல் நேரடி சந்திப்பு அது.

“அனைவரது ஒத்துழைப்பையும் தர முடியுமானால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தாம் தயார்” என சரத் பொன்சேகா எம்மிடம் கூறினார்.

“ஐக்கிய தேசிய கட்சி, ஒரு ஜனாதிபதி வேட்பாளரை முன்னிறுத்தாமல், அந்த கட்சியை சாராத தன்னை பொது வேட்பாளராக ஏற்றுக்கொள்ளுமா?” என மிகவும் அப்பாவித்தனமான கேள்வியை சரத் பொன்சேகா அன்று கேட்டார்.



அது ஏன் அப்பாவிதனமான கேள்வி என்றால், கட்சி தலைவரான தான் போட்டியிட்டு படுதோல்வியடைவதில் இருந்து எப்படி தப்பித்துக்கொள்வது என்று வழிதேடிக்கொண்டு இருந்த ரணிலுக்கு, பாலில் நழுவி விழுந்த பழம்தான், பொன்சேகா.

(தொடர்ச்சி 11 பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பலாலி வடக்கில் மீள் குடியேற்றம் தொடர்பில் றகாமா நிறுவனம் மேற்கொண்ட கள விஜயம்





- மன்னார் நிருபர் (15-03-2023)

யாழ்ப்பாணம் பலாலி பகுதியில் கடந்த மாதம் 03 ஆம் திகதி 108 ஏக்கர் காணிகள் மீள் குடியேற்ற வசதிகளை மேற் கொள்வதற்காக விடுவிக்கப்பட்ட நிலையில் தற்காலிக முகாம்களில் வசித்து வரும் குடும்பங்களின் மீள் குடியேற்றத்துக்கு திட்ட முன்னெடுப்புக்களை யாழ் மாவட்ட செயலகம் மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிலையில் விடுவிக்கப்பட்ட பலாலி பகுதிகளில் உள்ள மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் பார்வையிடும் முகமாகவும் தற்காலிக வீட்டு திட்டங்களை வழங்குவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கும் றகாமா நிறுவனம் மற்றும் நேர்வேயை தளமாகக் கொண்டு இயங்கும் போரூட் நிறுவனம் இணைந்து செவ்வாய்க்கிழமை (14) மாலை கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

தற்காலிக நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் மீள் குடி யேற்றத்தை விரைவுபடுத்தும் முகமாகவும் மீள்குடியேற்ற மக்களின் வாழ்வாதாரம் மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் முகமாகவும் பிரதேச செயலகத்துடன் இணைந்து அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதார உதவிகளை மேற்கொள்வதற்கான மேற்பார்வை விஜயமாக குறித்த விஜயம் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

குறித்த விஜயத்தில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் சிவசிறி, றகாமா நிறுவன பணிப்பாளர் மரிக்கார், நேர்வே போரூட் அமைப்பின் திட்ட அமைப்பாளர் அனா, பலாலி கிரமசேவகர் உட்பட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இம்ரான் உமா சிறந்த பெண் முயற்சியாளருக்கான விருது வழங்கி கௌரவிப்பு






(15-03-2023)

இந்திய துணைத் தூதரகம் மற்றும் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தினம் 2023 நிகழ்வில் சிறந்த பெண் முயற்சியாளர் என்ற விருது வழங்கி மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இம்ரான் உமா கௌரவிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் மத்திய கலாச்சார நிலையத்தில் கடந்த 15-03-2023 அன்று நடைபெற்ற விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி. ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ் இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீமான் ராகேஷ் நட்ராஜ் மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளர். ச.ம. சமன் பந்துலசேன ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் பல்வேறு துறைகளில் சாதித்த பெண்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னாரிலும் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுப்பு: பல்வேறு துறைகள் பாதிப்பு




(15-03-2023)

நாடளாவிய ரீதியில் பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் புதன்கிழமை (15) முன்னெடுக்கப்படும் போராட்டத்தின் காரணமாக நாடு தழுவிய ரீதியில் பல பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் பல பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் காணப்படுவதுடன் பரீட்சை நடவடிக்கைகளும் பிற்போடப்பட்டுள்ளது.

அதே நேரம் இலங்கை ஆசிரியர் தொழிற்சங்க போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட ஆசிரியர்களும் பூரண ஆதரவு வழங்கியிருந்தனர்.

சில பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தந்த நிலையில் ஆசிரியர்கள் பணிக்கு வராமையினால் மாணவர்கள் வீடுகளுக்கு திரும்ப சென்றதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

அதே நேரம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார பணியாளர்களும் இன்றைய தினம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்த நிலையில் அத்தியாவசியமான அவசர சேவை பிரிவு மட்டுமே செயல்பாட்டில் இருந்தது.

வங்கி ஊழியர்கள் பகிஷ்கரிப்பு காரணமாக வங்கி சேவைகள் இடம்பெறவில்லை.

புகையிரத ஊழியர்களின் விடுமுறை ரத்து செய்யப்பட்டதன் காரணமாக புகையிரத சேவை இடம்பெற்று வருகின்றது டன் அரச மற்றும் தனியார் பேருந்து சேவைகள் வழமை போன்று இயங்குகின்ற அமையும் குறிப்பிடத்தக்கது.

# கடந்தவையும் கடப்பவையும் (50)

கனகாலம் பார்க்காத இடங்களை - ஒரு
தரமேனும் பார்த்துவிட வேணுமெனும் ஆவல்

ரேவடியில் இருந்து நேர் வழிதான்
நாலுமிதி மிதிக்க வல்வைச் சந்தி

வீதியோரம் புதுக்கடைகள் பல - புது
மெருகொடு தெரிந்தன அழகாய்

அடுக்கி இருந்த பொருட்கள் விரும்பியதை
எடுத்துக் கொள்ள வசதியாய் இருந்தபோதும்

திடுக்கிடும்படியே விலைகளும் இருந்தன - எனினும்
கணக்கின்றி அள்ள கனபேர் நின்றனர்

சுவிஸ் ஜேர்மன் கனடா என
பல நாட்டுக்காசுகளும் ஒரு நாட்டுக் காசாகி - இப்போ

எங்கு போனாலும் கடைகளில் நிலைமை இப்படித்தான்
அங்குள்ள பெரியவர்கள் புலம்புவதும் இதனால்த்தான்

போர்க்காலச் சூழலிலும் காணாத கடினவாழ்வாம்
உள்ளூர் வாசிகளைக் கணக்கெடுக்கா
இவ்வாழ்வால்

'உண்மையிலே பாவம் தான் - அங்கு
அன்றாடம் உழைப்பவர்கள்'

என்று நாமும் கதைத்துக்கொண்டே செல்லும்போது - வந்தது
முன்னொருகாலம் அதிகநேரம் செலவழித்த அந்த இடம்

குண்டுகளால் சரிந்த கல்வி மன்றமும்
ஒன்றுமே இல்லாத வெறும் தரையாய் - இன்று

கண்முன் தெரிந்திடவே ஒருமுறை - அன்று மாணவரால்
என்நாளும் நிறைந்திருக்கும் மாடிக் கட்டடமும் - அதன்

முன்னாலும் பின்னாலும் நிறைந்து நிற்கும் - மிதி
உந்துகளும் நினைவினிலே வந்துபோக

குறுகிய காலத்துள் எவ்வளவு மாற்றம் - ஆனால்
நெடியகாட்டுப் பிள்ளையார் மாறவில்லை

'பிடித்து வைத்த பிள்ளையார்' என்பதுவும் சரிதான்

அப்போ இருந்ததுபோல் இப்பவும்
அப்பப்ப நடப்பதைப் பார்த்தவாறு இருக்கின்றார் - இப்போதெல்லாம்

சப்பாத்துக் கால்களின் சத்தமில்லை பெருமளவில் - எம்மை
காப்பாத்து என்ற கதறல் இல்லை - அன்றுபோல்

பள்ளிக்குள் போகக் கள்ளப்படுவோரின்
பொல்லாத வேண்டுதலும் இப்போ இல்லை

அவருக்கென்ன அன்னையின் ஆலயத்தில்
திருவிழாத் தொடங்கினாலும் - அவர்

இருக்கும் இடத்திலும் கொண்டாட்டம் களைகட்டும் - நல்ல
செழிப்போடு இருக்கும் பிள்ளையாரை வழியில் நின்று வணங்கிவிட்டு

தொடருகின்றோம்...

(தொடரும்)

-- உமா மோகன் - Montreal- Canada --

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பனங்காட்டு யானை பயணத்தை தொடர்கிறது!

-பானு சுதாஹரன்



காகமிருக்க பனம்பழம் விழுந்தது; பதுங்கி நின்ற யானை பனம்பழம் ருசித்தது; ருசித்தபின் யானை, "உயரத்துப்பழங்களை உருட்டி வீழ்த்தியது நானே, அது நானே!" என வீரப்பிரகடனம் செய்தது பனங்காட்டுப் பாமரரோ பகலிரவாய்ப் பரிதவிப்பில்! பனங்காட்டு யானை பயணத்தை தொடர்கிறது!

கால்களின் பாதுகாப்பிற்குத்தானே காலணிகள். ஆனால் இலங்கையிலோ காலணிகள் நுழைவதற்கேற்ப கால்களை வெட்டுவதே மேன்மையானது; அதுவே அவசியமானதும், சமயோசிதமானதும், அறிவுபூர்வமானதுமாகும் என்ற ஜனாதிபதியின் அழுத்தமான கொள்கையும், அதனடிப்படையிலான முன்னெடுப்புக்களும், IMF இடம் இலங்கை அரசாங்கம் கோரியுள்ள US $2.9 billion EFF (கடன் பொதி) இற்கான IMF இன் நிபந்தனைகளுக்காகத்தான் மக்கள் வாழ்க்கையேயன்றி, மக்கள் வாழ்க்கைக்காக IMF இன் EFF இல்லை என்ற அடிப்படையிலான, இலங்கை ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவுகளும், அமுல்படுத்தல்களும், பொதுமக்களைக் காப்பதற்காகவா இல்லை "பொ.ஜ.பெ"வைக் காப்பதற்காகவா? என்பது குழந்தைகளையும் தெளிவுற வைப்பதான ஒரு நாடகமாகும். இதில், இரண்டாவதே, "இவரது இருப்பிற்கான காப்பு"மாகும் என்பதும் பார்த்துப்புளித்த படமாகும்.

"சீனா, இந்தியா மற்றும் பாரிஸ் கிளப் (Paris Club) உட்பட அனைத்து முக்கிய கடன் வழங்குநர்களிடமிருந்தும் தீர்க்கமான கொள்கை நடவடிக்கைகள் மற்றும் நிதி உத்தரவாதங்களைப் பெறுவதில் இலங்கை அதிகாரிகள் அடைந்துள்ள முன்னேற்றத்தை நான் வரவேற்கிறேன். இலங்கைக்கான, நிதியுதவி (EFF) ற்கான அங்கீகாரம் கோரிய "திட்ட வரையறை"யை சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF), மார்ச் 20 அன்று முன்வைக்க நான் எதிர்பார்க்கிறேன்" என, IMF நிர்வாக இயக்குனர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா கடந்த 3, மார்ச் அன்று கம்பீரமாக அறிவித்திருந்தார். (சட்டம் தன் கடமையைச் செய்தது).

அறிவித்த வேளையில், இலங்கை ஜனாதிபதி, இது தொடர்பான கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளதாக, அவசர அவசரமாக பாராளுமன்றம் விரைந்து, ஏதோ, "கடனற்ற கனவுத்தீவின் சாதனைச் சக்கரவர்த்தி" தானே என்பது போல், வீரப்பிரதாபங்களை விசேட உரையாக விளாசி வைத்தார். (மரித்தவன் மார்பிலே குதிக்குதாம் யானை!).

அண்ணாந்து பார்க்கின்ற விலையுயர்வுகளாலும், வட்டிவீத அதிகரிப்புகளாலும், வகைவகையான வரிகளாலும் (APIT, PAYE), அத்தியாவசிய பொருட்களுக்கான, பொதுமக்களின் "கொள்வனவு சக்தி"யை பலாத்காரமாக பறித்தெடுத்து, சந்தைகளில் கேள்வி குறைந்து நிரம்பல் அதிகரித்து, பணவீக்கம் குறைவடைந்து தளம்பலடைந்து நாடு தொடர்ச்சியாகத் தள்ளாடிக்கொண்டிருக்கின்றது! இங்கு ஸ்திரத்தன்மை என்பது அரசியல், பொருளாதாரம் எதிலுமிருக்கப்போவதில்லை என்பதே தெளிவு!

"தாங்க முடியவில்லை; கொஞ்சம் தணிக்க முடியாதா?" என்று அரசிடம் இரந்து பேசும் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கெல்லாம், "IMF இன் நிபந்தனை; EFF ஏ நிரந்தரம்" என்ற தாரக மாத்திரமொன்றே தொழிற்சங்கங்களின் பேச்சுக்களுக்கு மொத்தமாகப் பூட்டுப்போட்டுவிட, ஜனாதிபதியிடமிருந்த துருப்புச் சீட்டாகியது!

பாடசாலைப்பொருட்களை ச.தொ.ச ஊடாக மலிவு விலையில் கொடுப்பதற்கு நடவடிக்கையெடுப்பதாக அரசாங்கம் கூறி இருந்தாலும் இதுவரை இதுதொடர்பில் எந்த அறிகுறியுமில்லை. அத்துமீறிய விலையுயர்வுகளால் மாணவரின் பாடசாலை வரவு ஒழுங்கீனமடைந்திருப்பது ஒருபுறம்.

க.பொ.த உயர்தரப்பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு செயற்பாடுகளுக்கு வேண்டப்படுகின்ற சுமார் 19,000 ஆசிரியர்களில், 10,000 பேர் மாத்திரமே விண்ணப்பித்துள்ளதாகவும், நடப்பு விலைவாசி சுமைகளுக்கு ஈடு கொடுத்து மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நிர்ணயித்துள்ள, நாளுக்கு ரூ.2000/- போதாது; போக்குவரத்து செலவு அதிகரித்துள்ள நிலையில், நாளொன்றுக்கு ரூ.3,000/- ஆயினும் வழங்கப்பட்டாலே முடியும் என, ஆசிரியர்கள் தயக்கம் காட்டுவதாக இலங்கை ஆசிரியர் தொழிற்சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறுகின்றார்.

நெல் உற்பத்தியாளர்களில் 10% இனரே அரசு கூறிய அந்த, 1 கிலோ ரூ.100/- ற்கு நெல்லை விற்க முடிந்தவர்கள். ஏனைய 90% மானோர் ரூ.50-60 இற்கே விற்க முடிந்ததால், 90% நெற்செய்கையாளர்கள், வீட்டிலுள்ள நகைகளை விற்று, கிணறு வெட்டி பூதத்துடன் வாழ வேண்டியதாயிற்று. பனங்காட்டு யானை அறியுமா விவசாயியின் வேதனை??

குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மாரின் போசஷாக்கின்மை எச்சரிக்கைகளை "உலக சுகாதார ஸ்தாபனம்" இடையறாது உறுதிப்படுத்தி வருவது ஒருபுறம்; உணவுக் குறைப்பு மறுபுறம்!

வெந்து நோகின்ற "வரி"களை அறவிடுவதை மட்டுப்படுத்தி, வேளாண்மையை ஊக்குவித்து, வெவ்வேறு உற்பத்திகளை உண்டாக்குகின்ற வழிவகைகளை உரிய துறைத்தலைவர்களுடன் உரையாற்றி கலந்து தெளிந்து; விளைந்து வரும் விளைச்சலிலே விதம் விதமாய் வாழவைக்கலாமல்லவா நம் நாட்டுத் தலைவன், விலைமதிப்புள்ள தன் பிரஜைகளை?!

என்ன இல்லை நம் நாட்டிலே?? அள்ளித்தந்த பூமி அன்னையாய் ஆதரிக்கிறாள் அலைசூழும் இந்த அழகிய தீவினை. பனங்காட்டு யானைக்கு என்று புரியும், நிலந்தாட்ட நம் நித்திலங்களையெல்லாம்??!

200 மில்லியன் ரூபா செலவில் சுதந்திரதின விழாவிற்கும், நிகரான ஆடம்பங்களில் கண்டி "ஜனரஜ பெரஹர"விற்கும் நிதி ஒதுக்கீட்டிற்கு நமது நித்தியமைச்சர் (ஜனாதிபதி) கைவசம் நிறைவாக நிதி வைத்துத்தான் இருந்தார். இவ்வாறாக இன்னும் எவ்வளவெல்லாம் மறைத்து வைத்துள்ளாரோ எவ்வெவற்றுக்கோ?! தேர்தலோ தொடர்ச்சியான பிற்போடலில்.

கொந்தளித்த தீவின், உயர்வடைந்து உக்கிரமடைந்த திரட்சியில், கடந்த மார்ச் 15 புதன்கிழமையன்று, இலங்கையின் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், வங்கி ஊழியர்கள் தொழிற்சங்கம், பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கம், நில அளவையாளர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளனம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், குடியகல்வு வரவுத் திணைக்களம், ரயில்வே ஊழியர் தொழிற்சங்கம், நீர் வழங்கல் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் கூட்டிணைப்பு, தாதியர் தொழிற்சங்கம், ஆசிரியர் அதிபர் சேவைகள் தொழிற்சங்க சம்மேளனம், ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க சம்மேளனம் என "தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம்" வரையாக, இலங்கைத் தீவே வீதியில் இறங்கிப் போராடியது! அமைதி வழிப்போராட்டத்தில் நாடு ஸ்தம்பிதமடைந்தது!!

ஆயினும், அத்தியாவசிய மருத்துவ சேவைகள் தடையின்றித் தொடர்கின்றன. குழந்தைகள், சிறுவர், மகப்பேறு மற்றும் புற்றுநோய் மருத்துவ மனைகளின் மருத்துவ சேவைகள் நிறுத்தப்பட மாட்டாது எனவும் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

அமைதிப்போராட்டங்களை ஒடுக்க ஆண்டாண்டுகளாய் காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகளைக் கையிலெடுத்தது அரசு (படைகளும், பொலிஸ் படையும்)! இதனை முற்றாக நிராகரித்தார் பொலிஸ்மா அதிபர். "சமூகம் அமைதிக்கான மையத்தின் குழு"வொன்று ஆய்வு செய்து காலாவதியானது உண்மையென்றது.

கொழும்பு பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் உட்பட இருவர் கண்ணீர்ப்புகை (இரசாயனக்) குண்டுகளால் ஸ்வாசம் பாதிக்கபட்டு மரணித்ததும் நாடறிந்தது!

மேற்படி மையத்தின் குழுவின் ஆய்வில் மேலும்:

** கண்ணீர்ப்புகைக்குண்டுகள் இரசாயன ஆயுதங்களாகும்.

** இவை CN gas, மற்றும் CG gas என்ற 2 வகை பயள மூலம் உற்பத்தியாகுபவை.

** இவற்றில் CG gas அதிக பாதிப்புகளை ஏற்படுத்த வல்லது.

** இவை நீண்ட கால நோய்த்தாக்கம் மற்றும் பாரிய பக்க விளைவுகளுக்கும் வழிவகுப்பன.

** CN gas பாவனையின் போது, கண்களின் மென்மையான செல்களில் நுழைந்து தாக்கத்தை ஏற்படுத்தும் தன்மை கொண்டது.

** CG Gas அதிகளவில் வெளியேறும் பட்சத்தில் அவை, ஸ்வாசப் பாதிப்புகளை ஏற்படுத்துவன.

** "சர்வதேச ஆயுத பிரகடன"த்தின் பிரகாரம், இவை தடைசெய்யப்பட்டவைகளாகும். என்பவையும் அறிக்கையிடப்பட்டுள்ளன.



ஆனாலும் யானையை அகற்றி, பானையில் புசிக்க ஒரு பூனைக்கும் தெரிந்திருக்கவில்லையே என்பதும் துரதிர்ஷ்டமே.

வரி நீக்கம், சக்தி மீறிய விலைவாசி குறைப்பு என்பவை அரசினால் பரிசீலனை செய்யப்பட்டு, நியாயமான தீர்வு காணப்படும்வரை போராட்டம் தொடரும் என்பதே தொழிற்சங்கங்களின் தீர்மானம்.

எதுவாயினும், "நாயகம்" இழந்தும், ஜனங்கள், எந்த பலவீனங்களிலும், தமது சகிப்பு சக்தியை மிக அதிகமாகக் கையாண்டே செயல்பட்டு வருகிறார்கள்!

கடந்த 15 மார்ச் அன்று நாடளாவிய போராட்டத்தின் பின்னர், 16 மார்ச் முதல், வடகீழ், வடமேல், வடமத்தி, சப்ரகமுவ, ஊவா ஆகிய 5 மாகாணங்களின் அரச வைத் திய அதிகாரிகள் தமது போராட்டங்களை இடை நிறுத்துவதாகவும் தெற்கு, கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களில் இவர்களின் பணிப்புறக்கணிப்பு ஆரம்பிக்கப்படும் எனவும் அறிவித்திருந்தது.

மார்ச் 15 அன்றைய நாடுதழுவிய போராட்டங்களிலும் கூட, அவசிய மருத்துவ சேவைகள், ஆங்காங்கே வங்கிகள், அவசர சேவைகளில் ஊழியர்களுக்கான குறுந்தூர ரயில்சேவைகள், அவசிய தொலைத்தொடர்பு என இன்னோரன்ன அவசர சேவைகள் வழங்கப்பட்டவண்ணமே தான் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், வேங்கை வெறிகொள்ளும்வரை விடாது தொடர்ந்தால், ஆங்கே அமராது! அடக்கும் வரை!!

**உதயனின் பிரத்தியேகச் செய்தி**

# விநாயகர் விமர்சனம்

## சிலுக்கு சிங்காரியிடம் சிக்கியவர்களின் சரித்திரம்–1

### (கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 7)

**- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி**




**த**லைப்பைப் படித்துவிட்டு விநாயகர் சினிமா விமர்சனம் செய்வதற்காக எ(ஹெ)லி ஏறிச் சென்றதால் தான் கடந்த வாரம் காணாமல் போய்விட்டதாக நீங்கள் நினைத்துக்கொண்டால் அதற்கு நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

அதே போன்று விமர்சனம் எழுதும் விநாயகரையும் சிலுக்கையும் உங்கள் கற்பனைக் குதிரையை ஓடவிட்டு நீங்கள் ஏதாவது கணக்குப் போட்டால் அதற்கு நான் பொறுப்பில்லை.

ஆனால், இந்த சிலுக்கு அந்தக்கால ரசிகர்களை உலுக்கு உலுக்கென்று உலுக்கி உன்மத்தம் பிடிக்கவைத்து பொன் மேனி உருகுதே என்று உருக்கியதாகவும் சிலுக்கு (சில்க்) கடித்த ஆப்பிள் ஒரு இலட்சம் ரூபா வரை ஏலம் போனதாகவும் ஆனபடியால் கதைப்பது கவனம் என்று டாடி கூத்தாடிய பிரான் காதில் வந்து சொன்னார். எனக்கு அதெல்லாம் தெரியாது. நான் சொல்ல வந்தது அந்த சிலுக்கு இல்லை இது வேற சிலுக்கு.

சீனா என்ற சிலுக்கு சிங்காரி பட்டுப்பாதையை (Silk Route) கட்டிவைத்து மேற்குலகுக்கு சிலுக்கு (Silk) விற்ற சீனாவே நமது சிவப்புக் கம்பளக் கதாநாயகி.

1992 வரை கம்யூனிச சிவப்புப் புடைவை போர்த்தி ஏராளமான குழந்தைகளைப் பராமரிக்கும் வீட்டுப்பெண்ணாக இருந்தவள் திடீரென மாறி மொடர்ன் பெண்ணாக உலகை வலம் வரத் தொடங்கினாள். இப்போது ஐக்கிய அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக பலம் வாய்ந்த பொருளாதாரமாகவும் உலகின் முதன்மைத் தொழிற்சாலையாகவும் அசுர வளர்ச்சியடைந்து அமெரிக்காவுக்கே டஃப் கொடுக்கிறாள்.

ஆனானப்பட்ட அமெரிக்காவோ, ஐரோப்பாவோ ஆயிரம் ஆயிரம் பொருட்களைத் தயாரித்தாலும், சிலுக்கு சீனாவிடமிருந்து சிறிய ஸ்க்ரூ (screw) வரவில்லை என்றால் டப்பா டான்ஸாடிவிடும். குண்டூசி தொடங்கி கணினி பாகங்கள் வரை சீனாவில் குடிசைத் தொழில்.




அனுமன் எரித்த இலங்கை பொருளாதாரத் தீயிலும் எரிந்து வெந்து கொண்டிருக்க இந்த சிலுக்கு சிங்காரி வழங்கிய வணிகக் கடன்களே முக்கிய காரணம் என விமர்சிப்பவர்களையும் இங்கே காணமுடிகிறது. ராஜபக்ச கூட்டம் சிலுக்கின் பிரதான வாடிக்கையாளர்களில் முன்னணியில் இருப்பவர்கள். அவர்கள் காசடிக்க வசதியாக மாகம்புரைத் துறைமுகத்தையும் மத்தளை விமான நிலையத்தையும், தொலைத் தொடர்புக் கோபுரத்தையும் அகலப் பாதைகளையும் அமைக்க வணிகக் கடன் கொடுத்து அந்தக் காசை தமக்கும் ராஜபக்சர்களுக்கும் தவிர வேறெங்கும் செல்லாதவாறு அந்த வெள்ளை யானைகளை அவர்களே கட்டிக்கொடுத்து இலங்கையில் இருக்கும் ஒவ்வொருவரையும் கடனாளியாக்கியதும் இதே சிலுக்கு தான்.

கடனை மீளச் செலுத்த முடியாமல் வங்குரோத்து அடைந்து விட்டோம் என்று கடந்த வருட ஆரம்பத்தில் இலங்கை அறிவித்து ஐ எம் எஃப் இடம் சென்று விரிவுபடுத்தப்பட்ட நிதிவசதியின் ((Extended Fund Facility -EFF)) கீழ் 2.9 பில்லியன் டொலர்களைக் கடனாகப் பெறும் நோக்கில் ஐ எம் எஃப் இன் ஆளணிமட்ட இணக்கப்பாட்டை எட்டிய பின்னர் கடன்களை மீளச் செலுத்துவது பற்றிய நிதி உறுதிப்பாட்டை ((financial assurance)) கடன் கொடுத்தவர்களிடமிருந்து பெற்றால் மட்டுமே ஐ எம் எஃப் இடமிருந்து கடனைப்பெறமுடியும் என்ற நிலை வந்த போது இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளும் பாரீஸ் கிளப் (Paris Club) நாடுகளும் இலங்கைக்கு சாதகமான சமிக்ஞைகளை வழங்கிய போதிலும் கடந்த சில தினங்களுக்கு முன்வரையிலும் இலங்கைக்கு கடனைத் திருப்பிச் செலுத்துவதை இரண்டு வருடங்கள் தாமதித்து ஆரம்பிக்க சலுகை வழங்குவதாக மட்டுமே அறிவிக்கப்பட்டது.

நாங்கள் ஏன் மேற்குலகம் எதிர்பார்க்கும் நிதி உறுதிப்பாட்டை வழங்கவேண்டும் என்ற முரண்பாட்டிலேயே சீனா இருந்தது. இதனால் கடந்த வருடமே முடிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய ஐ எம் எஃப் நிதியுதவி ஒப்பந்தம் மாதக்கணக்கில் தாமதமாகியது. இலங்கையோ நிதி உறுதிப்பாட்டை தருவியா இல்லை தரமாட்டியா என்று கெஞ்சாத குறையாக கேட்டுக் கொண்டே இருந்தது. அதாவது அந்த சில்க் உச்சத்தில் இருந்தபோது பெரிய பெரிய தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், நடிகர்கள் எல்லாம் அவரது கால்ஷீட் கிடைக்குமா கிடைக்காதா என்று ஏங்கி தவித்த காலகட்டத்தைப் போன்றே இந்த சிலுக்கு சீனா செய்தது.

ஒரு வழியாக கடந்த சில நாட்களுக்கு முன்பு இலங்கையின் பிரதான இருபக்க கடன் வழங்குநர்களிடமிருந்து தேவையாக நிதி உறுதிப்பாட்டைப் பெற்றிருப்பதாக ஐ எம் எஃப் இன் தலைவியும் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்குப் பொறுப்பான இயக்குநரும் உறுதிப்படுத்தினர்.

அதன் அடிப்படையிலேயே மார்ச் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கடந்த செப்டெம்பர் மாதம் எட்டப்பட்ட பணிக்குழாத்தினர் மட்டத்திலான இணக்கப்பாட்டின் அடிப்படையில் இலங்கைக்கு 2.9 பில்லியன் கடனுதவி குறித்து தீர்மானிக்கப்படுமெனத் தெரிகிறது. மாதக்கணக்கில் பிகு பண்ணிக் கொண்டிருந்த சிலுக்கு திடீரென முடிவை மாற்றி இலங்கையைத் தடவிக் கொடுத்ததன் தாற்பரியமென்ன என்பது பற்றிச் சரியாகத் தெரியவில்லை.




ஆனால் சிலுக்கு சீனா இலங்கையை இவ்வாறு தடவிக் கொடுத்தால், சிலுக்கிடம் கடன் பெற்றுள்ள ஏனைய நாடுகளும் அவ்வாறு தடவச் சொல்லிக் கேட்கலாம் என்ற அச்சமும் தடவத் தாமதமானதற்குக் காரணமாக அமையலாம். (இது தொடர்பில் விரிவாக அடுத்த வாரம் எழுதவுள்ளேன்) மறுபுறம் அமெரிக்காவின் பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த மிக உயர்மட்ட அதிகாரிகளை ஏற்றிய இரு பாரிய விமானங்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்து சென்றிருக்கின்றன.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்காவின் துருப்பினரை அழைத்துச் சென்ற விமானங்கள் இவைதான் என ஒரு செய்தி கூறியது. அதே போல இப்போது சிறந்த வணிக நிறுவனங்களின் பட்டியலை வெளியிடும் போர்ப்ஸ் சஞ்சிகையின் (Forbes Global 500) வரிசைப்படுத்தலில் 5வது இடத்தில் உள்ள சீனாவின் Sinopec நிறுவனத்தினதும் அதே பட்டியலில் 152வது இடத்தில் உள்ள China Merchant நிறுவனத்தினதும் பிரதிநிதிகள் இலங்கையில் தங்களது முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராய இங்கு வந்துள்ளனர். பெற்றோலியம் இரசாயனம் வர்த்தகம் கைத்தொழில் பேட்டைகள் மற்றும் துறைமுக நடவடிக்கைகள் போன்ற துறைகளில் கலனம் செலுத்தியுள்ளதாகத் தெரிகிறது. பெற்றோலியத் துறையில் அம்பாந்தோட்டையில் பாரிய முதலீட்டை மேற்கொள்ள பச்சைக் கொடிகாட்டப்பட்டுள்ளதாக உள்நாட்டுச் செய்திகள் கூறுகின்றன.

சிலுக்கின் (சில்கின்) தடவலில் பல அர்த்தங்கள் பொதிந்துள்ளன என்பதை நாம் அறிவோம்.

இப்போது சிலுக்கு சீனா இலங்கையைத் தடவிக் கொடுப்பதற்கும் சில தொடர்புகள் உள்ளன என்பதை மறுக்க முடியாது. அதேபோல உள்ளூராட்சித் தேர்தல்களைக் கட்டாயம் நடத்தவேண்டும் என அமெரிக்கத் தூதுவர் கூறினாலும் கூட அதனை வெளிப்படையாகவே நிராகரிக்கும் ரணிலின் அண்மைக்கால ஜனநாயக விரோத நடவடிக்கைகள் அமெரிக்காவின் கடைக்கண் பார்வையின்றி நடைபெற முடியாது. ஆகவே உலகின் இருபெரும் வல்லரசுகளின் போட்டாபோட்டியில் மீனுக்கு வாலும் பாம்புக்கு தலையும் காட்ட வேண்டிய நிலையில் இலங்கை இருப்பது தெரிகிறது.

இந்த நடிகர் இல்லையென்றால் அந்த நடிகர் என்பதைப் போல இலங்கை சிலுக்கு சீனாவை தடவுவதற்கு பக்கத்தில் வைத்துக்கொண்டு, அமெரிக்காவிற்கு கண்ணாமூச்சி காட்டுகிறது என்ற கருத்தும் உலவுகிறது. அதில் ஓரளவிற்கு உண்மையும் இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது. இது ஒருபுறமிருக்க கடந்த இருவாரங்களாக இலங்கையின் ரூபா சிறிது ஏற்றம் கண்டது பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அது மீண்டும் இறங்கு முகமாகவே உள்ளது. ஆனால் இலங்கை ரூபா வலுப்பெறுவதாக ஏற்படுத்தப்பட்ட தோற்றம் பொருளாதாரத்தில் கேள்வி மற்றும் நிரம்பல் ஆகிய இரண்டு விடயங்கள் பற்றி அறிந்தவர்களுக்கு அது ஆச்சரியமான ஒன்றாகத் தெரியவில்லை. அது வேண்டுமென்றே உருவாக்கப்பட்டதென்று நன்றாக விளங்கியிருக்கும். இலங்கையின் நாணய மாற்றுச் சந்தையென்பது இலங்கையில் உள்ள வங்கிகளுக்கிடையிலான சந்தையாகவே (interbank currency matket) உள்ளது. அதாவது ஒவ்வொரு வங்கியும் ஒவ்வொரு நாளும் வாங்கி விற்கும் டொலர்களின் அளவிலேயே அதன் விலை தீர்மானிக்கப்படும். இப்போது இலங்கையில் டொலர் உள்வருகை அதிகரித்துள்ளதுடன் அதன் வெளிச் செல்கை குறைந்துள்ளதால் அதன் விலை குறைந்துள்ளது. இது ஒரு தற்காலிக நிலைமை மாத்திரமே. கடந்த பல மாதங்களாக இலங்கையின் இறக்குமதிகள் மிகக் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதாரம் மிகப்பெரிய வீழ்ச்சியை கடந்த வருடத்தில் சந்தித்துள்ளது. இது இவ்வருடத்திலும் தொடரும் என்பது உறுதியாகியுள்ளது.

ஆகவே சுருங்கியுள்ள ஒரு பொருளாதாரத்தில் டொலருக்கான தேவை குறையும் என்பது பொதுவான ஒரு விடயம். அத்தோடு இலங்கை நிதியில் வங்குரோத்து நிலையை அறிவித்த பின்னர் கடன்களை டொலரில் மீளச் செலுத்துவது குறைந்து விட்டது. இப்போது மத்தியவங்கி அறிவித்துள்ள சில நடவடிக்கைகள் வங்கிகளில் டொலர் கையிருப்புகளை அதிகரித்துள்ளது. முன்னர் ஹவாலா உண்டியல் போன்ற முறைசாராத துறைகள் ஊடாக இலங்கைக்குள் டொலர் அனுப்பப்பட்ட நிலை டொலரின் பெறுமதி 360 - 370 ரூபா மட்டத்தைத் தொட்டவுடன் குறைந்து போய்விட்டது. சிலுக்கு சீனா பொருளாதார மீட்சிக்கு பச்சைக்கொடி காட்டிவிட்டது எனவே, நாட்டின் பொருளாதாரம் மேம்படும் என்பதற்கான அறிகுறியாகவே ரூபா வலுப்பெறுகிறது என்ற மாயத்தோன்ற்றம் உருவாக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல, பொருளாதார மீட்சி விரைவாகவும் காத்திரமாகவும் முன்னெடுக்கப்படுவதாகவும், எனவே முதலீடுகள் "கொட்டோ கொட்டென்று கொட்டும், நாம் கோணியில் கட்டோ கட்டென்று கட்டுவோம்" என்றும் பன்னாட்டு சமூகத்திற்கு படம் காட்டப்பட்டது.

ஆகவே இப்போது ரூபாவின் பெறுமதி அதிகரிக்கக் காரணம் பொருளாதார மீட்சியோ விரிவாக்கமோ பொருளாதாரம் நல்ல நிலைக்கு மாறத் தொடங்கியமையினால் ஏற்பட்ட ஒன்றோ அல்ல. மாறாக அவ்வாறு பொருளாதாரம் நல்ல நிலைக்குத் திரும்புகிறது. ஜனாதிபதி சாதித்துக் காட்டிவிட்டார் அவரது கொள்கைகள் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தி விட்டன என்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதற்கான அரசியல் தேவை இப்போது ஏற்பட்டுள்ளமையினால் வலிந்து காட்டப்பட்ட ஒரு "செப்படி வித்தை" என்பதே யதார்த்தம்.

மந்திரத்தில் மாங்காய் காய்த்தாலும் காய்க்குமே, ஆனால் சிலுக்கு சீனாவிடம் கடன் வாங்கியவர்களோ அல்லது சிலுக்கின் தடவலில் சுகம் கண்டவர்களோ பின்னாளில் சின்னாபின்னமானதே வரலாறு. உடனே நமது "காம்ரேடுகள்" ஐயோ ஐயோ என்று மேலும் கீழும் குதிப்பார்கள். இப்படி குதித்த பலர் இன்று கப்சிப் ஆகிவிட்டனர்.

சிலுக்கு சீனாவிடம் சிக்கி, மூழ்கி முத்தெடுக்க விழைந்தவர்கள் எல்லாம் என்று மூச்சுத்திணறி மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திணறுகின்றனர்.

பலர் சாதாரண கோழி முட்டையைக் கூட சந்தையில் விற்க முடியாமல் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

சிலுக்கு சிங்காரியிடம் சிக்கியவர்களின் சரித்திரம்...அடுத்த வாரம் தொடரும்.



(7 பக்கத் தொடர்ச்சி)

# மனோ சாட்சி

அதை சரத் அவ்வேளையில் புரிந்து கொண்டிருக்கவில்லை.

எனினும் ரணில் அவ்வேளையில், கட்சியின் செயற்குழுவை கூட்டி ஆலோசிப்பதாக அவசரப்படாமல் அமைதியாக கூறினார்.

அதையடுத்து என்பக்கம் திரும்பி, “யுத்தத்தை வரலாற்றிடம் ஒப்படைத்துவிட்டு என்னுடன் பயணம் செய்ய தமிழ் மக்கள் தயாராகுவார்களா?” என சரத் பொன்சேகா கேட்டார்.

“தமிழ் மக்களை பொறுத்தவரையில் இன்று எல்லோருமே ஒன்றுதான். உங்களில் ஒருவர்தான் ஜனாதிபதியாக போகின்றீர்கள். அவரைவிட நீங்கள் சிறந்தவர் என்று உங்களால் நிரூபிக்க முடியுமானால், தமிழ் மக்கள் உடன்படலாம்.” என்று நானும் அவரிடம் அமைதியாக கூறினேன்.

இன்று யோசித்து பார்த்தால், அதைவிட பொருத்தமான ஒரு பதிலை நான் அவருக்கு அன்று கூறி இருக்க முடியாது என தோன்றுகிறது.

சிறிது நேரம் பேசி விட்டு, பொன்சேகா போனார்.

அவர் போய் அரை மணி கழித்து, நாம் கிளம்பி, ரணிலின் சகோதரர் வீட்டுக்கு வந்து இறங்கி, அவர் வீட்டுக்குள்ளே நடந்து, ரணிலின் வீட்டு பின் வாசல் வழியாக உள்நுழைந்து, முன் வாசல் வழியாக வெளியே வந்தோம்.

அவ்வளவு நேரமும் ரணிலின் வீட்டுக்குள்ளேதான் நாம் பேச்சுவார்த்தையில் இருக்கிறோம் என அப்பாவியாக நினைத்துக்கொண்டு, எமது பாதுகாவல் அதிகாரிகள், ரணில் வீட்டுக்கு முன் காத்திருந்தார்கள். எமது வாகனங்களில் ஏறி வீடுகளுக்கு போனோம்.

அடுத்த நாள், பொன்சேகா எமது பொது வேட்பாளர் என்று முடிவு செய்தோம்.

பின்குறிப்பு:

மகிந்த அந்த தேர்தலில் 57% வாக்குகளுடன்தான் வெற்றி பெற்றார். ஆனால், அவரது பெரும் எதிரி, சந்திரிக்கா 1995ல் பெற்ற 60 விகிதத்துக்கும் மேற்பட்ட வெற்றியை மகிந்த பெறவில்லை. அவர் எதிர்பார்த்த பெரும் வெற்றி கிடைக்காததால் அவர் மகிழ்ச்சியடையவில்லை. தேர்தல் பிரச்சாரத்தின் போது இடையில், வெள்ளை கொடி ஏந்தி வந்த புலிகளை பற்றி ஏதோ, வாயை விட்டதினாலும் (இந்த “வாய்” விவகாரம் பொன்சேகாவின் நிரந்தர நோய்..!), ரணிலின் முழு ஒத்துழைப்பு கிடைக்காததினாலும், பொன்சேகா தோல்வியடைந்ததார். எனினும் பொன்சேகா கணிசமான 4 மில்லியன் வாக்குகளை பெற்றார். ரணில் போட்டியிட்டு இருந்தால், இதில் ஒரு 2 மில்லியன் வாக்குகள் மகிந்தவுக்கு போய் இருக்கும். இதுதான் எனது எதிர்பார்ப்பு. போர் வெற்றியில், பேரினவாதமும், இராணுவவாதமும் சேர்ந்த பெரும் போதையில் இருந்த தென்னிலங்கை பெரும் வெற்றி பெற்றிருந்தால், இலங்கையில் அமைதி என்றுமே திரும்ப முடியாத நிலைமை ஏற்பட்டு, தமிழர் இதைவிட பெருந்துன்பத்தில் விழுந்திருப்போம் என்பது என் அரசியல் கணிப்பு. எனவே அந்த “பேரினவாதத்தையும், இராணுவவாதத்தையும்” ஏறக்குறைய சரிபாதியாக பிரிக்க உதவினோம் என்ற திருப்தி எனக்குள் ஏற்பட்டது.


உங்கள் திறமைக்கு அதிஷ்டம் காத்திருக்கிறது

வெல்லுங்கள் 1,50,000 ரூபாய்கள்!



எழுத்தாளர் ‘குரு அரவிந்தன் வாசகர் வட்டம்’
நடத்தும் உலகளாவிய திறனாய்வுப் போட்டி - 2023



தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் | - 30,000. |
| இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | - 25,000. |
| மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | - 20,000. |
| நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | - 15,000. |
| ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | - 10,000. |
| 10 பாராட்டுப் பரிசுகள் இலங்கை ரூபாய்கள் தலா | - 5,000. |

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1500 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது. மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விபரங்களோடு அனுப்பவேண்டும்.

உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 31.03.2023

போட்டி முடிவுகள் 2023 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல் : kurufanclub@gmail.com இணையம் : kurunovelstory.blogspot.com

<https://canadiantamilsliterature.blogspot.com/>

இந்த அறிவிப்பினை உங்களின் முகநூல் பக்கத்திலும் பகிரிக்குழுக்களிலும்; (whatsapp) பகிர்ந்து உதவுங்கள்.

நன்றி!

சுலோச்சனா அருண்,
செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.



THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# கருத்துக்கணிப்பு சொல்லும் கதை: ரணில்–ராஜபக்சவுக்கு எதிர்காலம் உள்ளதா?

**- சிவா பரமேஸ்வரன்**




இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் தேர்தல் காலங்களில் மட்டுமின்றி அடிக்கடி நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நிலை குறித்து மக்கள் கருத்துக் கணிப்புகள் நடைபெறும். அது பொதுவாக நாட்டு மக்களின் உணர்வுகளை (Mood of the Nation) பிரதிபலிக்கின்றன என்று கூறப்படும்.

அதில் மாறுபட்ட கருத்துக்கள், ஏற்றத்தாழ்வுகள், புள்ளிவீத விகிதாசாரங்களை எப்படி கருத்துருவாக மாற்றுவது; அப்படி மாற்றப்பட்ட கருத்துரு என்ன செய்தியை சொல்கிறது என்பதில் பல கேள்விகள் உண்டு. எனினும் அதன் முடிவை அரசியல்வாதிகள், பொதுமக்கள், பொருளாதார வல்லுநர்கள் போன்ற அனைத்து தரப்பினரும் பொதுவாக ஒரு அளவுகோலாக ஏற்றுக்கொள்வார்கள்.

பல நேரங்களில் இந்த கருத்துக்கணிப்புகள் தவறாகவும் சென்று "மக்களின் எண்ணங்களிற்கு" மாறாகவும் முடிவுகள் வந்துள்ளன.


முதலில் இந்த கருத்துக்கணிப்புகள் எப்படி நடைபெறுகின்றன, யாரால் நடத்தப்படுகிறது, ஏன் நடத்தப்படுகிறது என்று சில அடிப்படை கேள்விகளை புரிந்துகொள்ள வேண்டும்.

சுமார் 30 ஆண்டுகளாக அப்படியான கருத்துக்கணிப்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது ஒரு அமைப்பில் அதை அலசும் குழுவில் இருந்த அனுபவம் எனக்குள்ளது என்ற அடிப்படையில் சில எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

இந்த பீடிகை இப்போது எதற்கு என்ற கேள்வி உங்கள் மனதில் எழுவதில் நியாயமுள்ளது. அதை நான் அறியவும் செய்வேன்.

அதற்கான காரணமும் உள்ளது. அண்மையில் இலங்கையின் முன்னணி ஆங்கில தினசரியான "டெய்லி மிறர்" ஒரு கருத்துக்கணிப்பை வெளியிட்டது. அதன் சாராமசங்களைப் பார்ப்பதற்கு முன்னர் கருத்துக்கணிப்புகளின் நோக்கம், செய்யப்படும் விதம் ஆகியவை குறித்து சில தகவல்களை பகிர்ந்து கொள்கிறேன்.

கருத்துக்கணிப்புகள் "ஒரு உள்நோக்கம் கொண்டவை" என்று பொதுவான ஒரு கருத்து உண்டு. அதற்கான அடிப்படைக் காரணம் அது எந்த காலத்தில் செய்யப்படுகிறது, யாரால் செய்யப்படுகிறது, அதற்கு ஏதாவது பின்புலம் உள்ளதா என்று பல பரிமாணங்கள் உள்ளன. அனைத்திலும் முக்கியமாக ஏன் - எப்போது என்ற இரு விஷயங்கள் எப்போதுமே தொக்கி நிற்கும்.



இந்த கருத்துக்கணிப்புகளில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது எவ்வளவு பேரிடம் கருத்துக் கேட்கப்படுகிறது என்பதாகும். அதாவது ஆங்கிலத்தில் 'Sample size' என்று கூறப்படும் விஷயம். அதை முடிவு செய்வது மிகவும் முக்கியமானது மற்றும் சிக்கலானது. அது எந்தளவிற்கு கவனமாக பிரிக்கப்பட்டு கையாளப்படுகிறதோ அந்தளவிற்கு அதன் துல்லியத்தன்மை இருக்கும். அப்படி பிரிக்கும் போது பல காரணிகள் உள்வாங்கப்படும் அல்லது உள்வாங்கப்பட வேண்டும். அதில் கிராமம்/நகர்புறம், ஆண்/பெண், படித்தவர்/படிக்காதவர் (அதாவது கல்வித் தகுதி) சமூக - பொருளாதார சூழல், வாழ்வியல் சூழல், வயது வரம்பு போன்ற காரணிகள் முக்கியப் பங்கு வகிக்கும். ஆங்கிலத்தில் சொல்வதானால்: Rural/Urban, Male/Female, literate/illiterate, socio-economic status (income based), living conditions, age group etc.,

அவ்வகையில் பலவகையான காரணிகளை மக்கள் கருத்தறியும் கருத்துக்கணிப்பில் உள்வாங்கும் போது அது பரந்துபட்ட அளவில் மக்களின் கருத்தைப் பிரதிபலிப்பதாகக் கருதலாம் அல்லது அவ்வாறே கருதப்படுகிறது.

டிஜிட்டல் உலகிற்கு முந்தைய காலத்தில் கருத்துக்கணிப்பை நடத்துபவர்கள் பல கேள்விகள் கொண்ட ஒரு வினாத்தாளை மக்களிடையே எடுத்துச் சென்று அவர்களின் பதில்களை அதில் குறிக்கச் சொல்லி அல்லது அவர்கள் கூற இவர்கள் (சரியாக?) குறித்துக்கொள்ள பின்னர் அனைத்து படிவங்களும் ஆராயப்பட்டு அதிலுள்ள தகவல்கள் தனித்தனியாகப் பிரித்து பகுப்பாய்வு செய்யப்பட்டு இவர்கள் இப்படியாகத்தான் நினைக்கிறார்கள், எனவே முடிவு இப்படியானதாக உள்ளது என்று விளக்கி வியாக்கானம் அளித்து அதை வெளியிடுவார்கள். இதில் நேர்மை என்ற மிக முக்கியமான காரணி பல நேரங்களில் காற்றில் பறக்கவிடப்படும். தேவையானவற்றை, மக்கள் பெயரில் தாம் விரும்புவதை கணிப்பு என்ற பெயரில் வெளியிடுகிறார்கள் என்ற விமர்சனம் எப்போதும் இருந்துள்ளது, இனியும் இருக்கும்.

உதாரணமாக ஒரு விடயத்தைப் பார்ப்போம். நான் ஊடகத்துறையில் இருப்பதால் எந்த ஊடகம் முதலிடத்திலுள்ளது என்ற கருத்துக்கணிப்பு ஒன்று நடத்தப்படுமாயின், அதில் ஒரு நிறுவனம் தாமே நாட்டின் முன்னணி ஊடகம், அதிக மக்களால் பார்க்கப்படுகிறது அல்லது வாசிக்கப்படுகிறது என்று பறைசாற்றிக்கொள்ளும். ஆனால் அவர்களின் விளம்பரத்தின் கீழே மிகவும் பொடியான எழுத்துக்களில், பூதக்கண்ணாடி வைத்துக்கூட வாசிக்க இயலாத அளவில் சில தகவல்களைத் தெரிவித்திருப்பார்கள். அதை சிரமப்பட்டு படித்தால், அவர்கள் கூறியுள்ளது தவிடுபொடியாகிவிடும். ஏனென்றால், அவர்கள் தாமே முதலானவர்கள் என்று கூறியுள்ளது எப்படியிருக்கும் என்றால், நகரங்களில், ஆண்கள் மத்தியில், பட்டதாரிகளிடம், 35 வயதிற்கு உட்பட்டவர்களில், மாதம் சுமார் 2000 டொலர் சம்பாதிப்பவர்கள், சொந்த வீடு மற்றும் வாகனம் வைத்துள்ளவர்கள், ஒரேயொரு குழந்தை உள்ளவர், நாளொன்றிற்கு 10 நிமிட அளவில் செய்திகளைப் பார்ப்பவர்கள்/வாசிப்பவர்கள் என்று ஏகப்பட்ட காரணிகளின் அடிப்படையில் முதலிடத்தில் உள்ளதாக கூறுவார்கள். ஆனால் கருத்துக் கேட்கப்பட்டவர்களில் (Sample size) இந்த அனைத்து தகுதிகளின் அடிப்படையில் எவ்வளவு பேர் இருந்தனர் என்பது தான் இதில் மறைந்துள்ள முக்கியமான விஷயம்.




அரசியல் தொடர்பிலான கருத்துக்கணிப்புகளிற்கும் இது பொருந்தும்.

சரி...இப்போது டெய்லி மிறரின் அண்மைய கருத்துக்கணிப்பிற்கு வருவோம். அந்த கருத்துக்கணிப்பில் பல துணைக் கேள்விகளிற்கு அப்பாற்பட்டு பிரதானமாக ஒரு கேள்வி முன்வைக்கப்பட்டிருந்தது.

"இலங்கையை இன்றைய நிலையிலிருந்து மீட்டெடுத்து, நிலைத்திருக்க கூடிய வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்செல்ல எந்த அரசியல் கட்சித் தலைவரிடம் அதற்கான பார்வையும் திறமையும் உள்ளது"?

இந்த கேள்விக்கு நான்கு தெரிவுகளை அவர்கள் அளித்திருந்தனர்.

ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுர குமார திஸ ாநாயக்க மற்றும் இவர்களில் யாரும் இல்லை என்பதே அந்த நான்கு தெரிவுகள்.

இதற்கான பதில்களின் அடிப்படையில், அதிகபட்சமாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச 45.3% ஆதரவுடனும், அடுத்து தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க 35% ஆதரவுடனும் நாட்டை மீட்டெடுத்து நிலைத்திருக்க கூடிய வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்வார்கள் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இவர்கள் இருவருக்கும் அடுத்தபடியாக கேள்விப் பட்டியலில் இருந்த ரணிலைவிட யாரும் இல்லை என்பதற்கான ஆதரவே 19.3% உள்ளது என்று அந்த கருத்துக்கணிப்பு கூறுகிறது.

டெய்லி மிறர் நடத்திய இந்த கருத்துக்கணிப்பிலிருந்து இரண்டு விஷயங்கள் வெளிப்படுகின்றன. முதலாவதாக நாட்டின் தலைமைத்துவம், வழிநடத்திச் செல்லக் கூடிய தகுதி, பலவிதமான நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நாட்டை மீட்டெடுப்பதில் ஆகிய தலைவர்கள் பட்டியலில் ராஜபக்சக்கள் யாரும் இல்லை. "போர் நாயகன், வெற்றி வேந்தன், நாட்டை மீட்டெடுக்க மீட்பர், சிங்களவர்களின் நம்பிக்கை நட்சத்திரம்" என்று போற்றி புகழப்பட்ட மகிந்த ராஜபக்ச மீட்பர்கள் பட்டியல் இடம்பெறும் நிலையில் கூட இல்லை. அதாவது பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் கூட ராஜபக்சக்களிற்கு ஆதரவு இல்லை. அதுமட்டுமின்றி அவர்களின் அரசியல் சகாப்தம் முடிந்துவிட்டது என்பதாகவே அந்த கருத்துக்கணிப்பு கூறுகிறது என்று புரிந்துகொள்ள முடிகிறது. ஒரு காலத்தில் அசைக்க முடியாக இருந்த சக்தியாக இருந்த மகிந்த ராஜபக்ச இன்று செல்லாக்காசாகவுள்ளார். போருக்கு பிறகான முதல் ஜனாதிபதி தேர்தலில் கூட அவரால் 57% வாக்குகளையே பெற முடிந்தது. இது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பிரிட்டனில் வின்ஸ்டன் சர்ச்சிலிற்கு ஏற்பட்ட நிலையை நினைவூட்டுகிறது.

இரண்டாம் உலகப்போரில் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் ஹிட்லரின் ஜெர்மனியப் படைகளை அந்தப் போரில் வெற்றிகொண்டதில் அப்போது பிரிட்டனின் பிரதமராக இருந்த சர்ச்சிலிற்கு பெரும் பங்கு இருந்தது. ஆனால் அந்த உலக மகா யுத்தம் முடிந்த பிறகு பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவரது தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி தோல்வியடைந்தது.

சரி, மகிந்தவின் அரசியல் சகாபதம் முடிந்துவிட்டதாகக் கருதினாலும், அவரால் இயக்கப்பட்டு, அவரது மொட்டுக் கட்சியின் ஆதரவில், பின் வாசல் வழியாக ஜனாதிபதியாக வந்து நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் ரணிலின் நிலைமை இன்னும் மோசம். டெய்லி மிறரின் இந்த கருத்துக்கணிப்பு ரணிலிற்கும் நாட்டில் இனி எதிர்காலம் இல்லை என்பதை கூறுகிறது. அதாவது அவரது அரசியல் வாழ்வும் அஸ்தமனமாகிறது என்பதாகவே கருத்துக்கணிப்பை புரிந்துகொள்ள முடியும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவரது கோட்டை என்று அவராகவே கூறிக்கொள்ளும் கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் அவரால் வெல்ல முடியவில்லை. பிறகு விகிதாசார முறையிலுள்ள ஒரு குறைபாட்டின் விளைவாக அவரது கட்சிக்கு தேசியப் பட்டியலில் ஒரேயொரு ஆசனம் கிடைக்க, அதை ஆறு மாத காலம் நிரப்பாமல் வைத்திருந்து அதை தனதாக்கிக் கொண்டவர்தான் "நரி" ரணில்.

முதல் நாள் வரை "அரகலய" போராட்டத்திற்கு ஆதரவளித்த அவர், ஆட்சிக்கு வந்த 24 மணி நேரங்களிற்குள் அவர்களை கோத்தாபயவை விட மோசமாக கையாண்டு பாதுகாப்பு படைகளைக் கொண்டு அடித்து நொறுக்கி ஒடுக்கியது வரலாறு. அதுமட்டுமின்றி ரணில் பொதுவாகவே சொல்வதொன்று செய்வதொன்று என்பதாகவே அரசியல் நடத்தி வந்தார். இப்போது அவரும் தனது அரசியல் வாழ்வின் கடைசி அத்தியாயத்தில் இருக்கிறார், 10% மக்களின் ஆதரவு கூட அவருக்கு இல்லை என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

அப்படியென்றால் போட்டியில் முன்னணியிலுள்ள சஜித் பிரேமதாச அல்லது அநுர குமார திஸாநாயக்க நாட்டை மீட்டு கட்டியெழுப்பி விடுவார்களா என்றால் அதிலும் பல கேள்விகள் உள்ளன. போட்டியில் இருப்பவர்களில் மக்கள் ஆதரவு யாருக்கு கூடுதலாக உள்ளது என்பதைத் தான் கருத்துக்கணிப்பு காட்டுகிறதே தவிர, அவர்கள் இருவரும் ஆகச்சிறந்தவர்கள் என்பதற்கு எந்த சான்றும் இல்லை.

இந்த கருத்துக்கணிப்பில் மற்றொரு முக்கியமான விஷயத்தையும் கவனிக்க வேண்டியுள்ளது. நாட்டின் எதிர்காலம் குறித்து சிறுபான்மை மக்கள் - அதிலும் குறிப்பாக தமிழ் மக்களின் கருத்து என்ன என்ற கேள்விக்கான பதில் இருப்பதாகத் தெரியவில்லை. நடைபெற்ற இந்த கருத்துக்கணிப்பில் தமிழ் மக்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டதா அல்லது அதிலும் அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்களா என்கிற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை. அதே நேரம் இந்த கேள்வி அவர்களிடம் கேட்கப்பட்டிருந்தால் அவர்கள் என்ன பதில் கூறியிருப்பார்கள் என்பதை அறிந்துகொள்ளும் ஆவலும் எனக்கும் உள்ளது. அவர்களது கருத்துக்களும் தெரிய வந்திருந்தால், அவர்கள் நாட்டின் மைய நீரோட்டத்தில் இணைந்துள்ளார்கள், அல்லது இணைய முற்படுகிறார்கள் என்றோ அல்லது இன்னும் அந்நியப்பட்டே இருக்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றும்.



நாட்டை ஆள அடுத்து யார்?

கருத்துக்கணிப்புகளில் எந்த தலைவருக்கு எவ்வளவு சதவீதம் ஆதரவு உள்ளது என்பது-தேர்தலில் அதே வீதத்திலான வாக்குகளாக மாறுமா என்பது மிகபெரும் கேளவி. அதைப் பொருத்துத்தான் மேலேயுள்ள கேள்விக்கு விடை கிடைக்கும்.



# இலங்கையில்: "அரசியல் சுனாமியா"? அல்லது "புள்ளடி புரட்சியா"?

வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

• ரணில் - ராஜபக்ஷ ஆட்சிக்கு தேர்தல் சிவப்பு விளக்கு
• தேர்தல் நடந்தால்? பெரும்பான்மை கேள்விக் குறி?

இலங்கை தற்போது தாச்சியில் இருந்து அடுப்பில் விழுந்த நிலையில் உள்ளது. அடுப்பில் விழுந்த நிலையில் தென்னிலங்கை மக்கள் தமக்கான தலைமையைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

தந்தை செல்வநாயகம் தமிழ் மக்களின் தலை விதியை நிர்ணயிக்கும் பயணத்தில் நம்பிக்கையிழந்த நிலையில் "தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று தெரிவித்தார். அந்த ஒரு நிலைக்கு தென்னிலங்கை இன்று வந்துள்ளது.

இந்த ஒரு பின்னணியில் தென்னிலங்கை தமக்கான தலைமையைத் தேடிக் கொண்டிருக்கின்றது.

• மக்கள் எழுச்சி

ஆட்சி அதிகாரத்தில் ரணில் - ராஜபக்ஜ ஆளும் வர்க்கம். இந்த ஆளும் வர்க்கத்திற்கெதிராக மக்கள் ஓரணியில் நிற்கின்றனர். கடந்த ஆண்டு மக்கள் எழுச்சிகள் எழுந்தன. பொதுமக்களின் வெறுப்பு ஆரம்பத்தில் தலைவர் இல்லாத எதிர்ப்புகளாக வெடித்தது.

நாட்டை திவாலாக்கிய ராஜபக்ச க்களின நிர்வாகத்தை நிறுத்துமாறு மக்கள் கோரினர். வீதியில் இறங்கி போராடினர்.

அவர்களுக்குக் கிடைத்திருப்பது ராஜபக்சக்களின் ஆட்சியின் நீட்சிதான்.

ஆனால் கடந்த ஆண்டு மக்கள் எழுச்சிகளுக்கு வழிவகுத்த அனைத்து அரசியல் - பொருளாதார காரணிகளும் கவனிக்கப்படாமல் உள்ளன.

பொருளாதார முறைகேடு, ஊழல், விரயம், அதிகார துஷ்பிரயோகம், பொருளாதார கஷ்டங்கள், தண்டனையிலிருந்து விலக்களிக்கும்.

கலாச்சாரம், சட்டத்தின் ஆட்சி சரிவு மற்றும் பொது நிதி திருட்டு ஆகியவை அப்படியே மாற்றமின்றி தொடர்கின்றன.

நாட்டின் திவால்நிலைக்கு மக்கள்தான் காரணம் எனப் பேசுகிறார்கள்!

• பிளவுபட்டு நிற்கும் எதிர்க்கட்சிகள்

SJB, JVP தலைமையிலான NPP, SLFP மற்றும் SLPP அதிருப்திக் குழுக்கள் என எதிர்க் கட்சி வரிசையில் நிற்பவர்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக ஒன்றுடன் ஒன்று போரிட்டுக் கொண்டிருக்கின்றன. ராஜபக்ச - விக்ரமசிங்க ஆட்சிக்கு, பிளவுபட்டு நிற்கும் எதிர்க்கட்சியினரின் நிலைப்பாடு சாதகமாக உள்ளது.

• இன்னொரு "அரகலயாவை" நோக்கிய காத்திருப்பு.

மக்களின் கோபத்தை எவ்வாறு தத்தமது அரசியல் நலன்களுக்காக அறுவடை செய்து கொள்வது என்பதில்தான் தென்னிலங்கை அரசியல் சக்திகள் முனைப்புக் காட்டுகின்றன. பொது எதிரிக்கு எதிரான கூட்டுச் செயற்பாட்டை தென்னிலங்கையின் அரசியல் களத்தில் காண முடியாதிருக்கின்றது. பொது மக்களைப்போன்று தென்னிலங்கை அரசியல் சக்திகளும் இன்னொரு "அரகலயாவை" ஆவலுடன் எதிர்பார்த்துக் காய்களை நகர்த்துவதாகவே உள்ளது.

இந்த போராட்டத்தின் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து அகற்றுவதற்கு வழிவகுத்த மக்கள் சக்தியின் போராட்டத்திற்கு நிகராக எதையும் SJB அல்லது JVP அல்லது முன்னிலை சோசலிஸ்ட் கட்சி (FSP) அல்லது வேறு எந்த எதிர்க்கட்சியாலும் செய்ய முடியவில்லை.

• ஜேவிபியும் சஜித் அணியும் பிரிந்து நின்று அறுவடைக்குக் காத்திருக்கின்றன.

எஸ்.ஜே.பி தலைவர் சஜித் பிரேமதாசவும், ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸ ாநாயக்கவும் ஒன்றுபட்டால், வீழ்வோம், பிரிந்தால் தாங்கள் நிலைத்து நிற்கலாம் என்ற மாயையில் உழைக்கின்றனர். அவர்களின் அரசியல் சண்டைகள் SLPP மற்றும் UNP க்கு மகிழ்ச்சியை அளிக்கும் வகையில் எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்தியுள்ளன.

• ரணில் விக்ரமசிங்க

ஐ.தே.க. தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க மக்களால் நிராகரிக்கப்பட்ட ராஜபக்ஷக்களையும் அவர்களது அணியினரையும் காப்பாற்றுவதுடன் 2020ல் அவரையும் அவரது கட்சியையும் முற்றிலுமாக நிராகரித்ததற்காக நாட்டைப் பழிவாங்குவதும் தண்டிப்பதும்தான் அவரது நிகழ்ச்சி நிரலின் முதன்மையானதுமாக உள்ளது என்பதே நாட்டு மக்களின் அபிப்பிராயமாக உள்ளது.

• ஐ.தே.க.வுக்கான சவக்குழி

ரணில் விக்ரமசிங்க ஐ.தே.கட்சிக்கான சவப் பெட்டிக்கான இறுதி ஆணியையும் அடித்து விட்டார். ஒரு காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தனது அரசியல் பயணத்தை படுகொலை செய்து விட்டதாக கூறினார். ஆனால் நல்லாட்சி காலத்தில் மீட்டுக் கொண்ட அந்த அரசியல் ஆயுளை அவரே கல்லறைக்கு இழுத்துச் சென்றார் என்பது பதிவுகளாக உள்ளது.

ரணில் விக்ரமசிங்க சிங்கப்பூரின் சிற்பியான லீ குவான் யூ போன்று மேலெழ சந்தர்ப்பம் இருந்தபோதும் ராஜபக்சக்களின் அணியினரைக் காப்பாற்றும் அதேவேளை இலங்கையின் சிங்கள ஆளும் வர்க்கத்தின் மீட்பராக பாத்திரம் ஏற்றுள்ள நிலையில் எதேச்சதிகாரத்தின் எஜமானாக தன்னை உருவகித்துக் கொண்டுள்ளார். மொத்தத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்று ராஜபக்ஷக்களுடன் இணைந்து தனது அரசியல் பயணத்திற்கு மாத்திரமல்ல ஐ.தே.கட்சியின் அரசியல் பயணத்திற்கும் முடிவுரை எழுதிக் கொண்டிருக்கின்றார்.

• தேர்தல் வெற்றி கானல் நீரே!

ஐ.தே.கவோ அல்லது ராஜபக்ஷக்களோ முறையான தேர்தல் மூலம் மீண்டெழுவது கானல் நீராகும். எனவேதான் SLPP-UNP கூட்டணி, தேர்தல்களை இழக்க நேரிடும் என்ற அச்சத்தில் தேர்தலை தாமதப்படுத்தும் முயற்சியில் உள்ளது.

உள்ளூராட்சி, மாகாண அல்லது தேசியத் தேர்தல் எதுவாக இருந்தாலும் அது விக்கிரமசிங்க - ராஜபக்சே ஆட்சிக்கு பேரழிவை ஏற்படுத்தும் என்பதை அனைவரும் குறிப்பாக பெரும்பாலான பதவியில் இருப்பவர்கள் அறிவார்கள்.

• ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தல்

தேர்தலை கண்டு அஞ்சி நாசவேலையில் ஈடுபடும் அரசாங்கத்தை விட ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் எதுவும் இல்லை.

நிதி பற்றாக்குறையைக் காரணம் காட்டி தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டாலோ அல்லது தேர்தல் இரத்துச் செய்யப்பட்டாலோ எதிர்காலத்தில் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலோ அல்லது பொதுத் தேர்தல்களோ நடைபெறுவதற்கான வாய்ப்புக்களும் மறுக்கப்படலாம்.

• நாடாளுமன்ற சிறப்புரிமைபற்றி போசுகின்றனர்.

தற்போது தேர்தலை ஒத்திவைப்பதற்காக நீதிமன்ற தீர்ப்பினை சவாலுக்குற்படுத்தும்வகையில் நாடாளுமன்ற சிறப்புரிமைபற்றி போசுகின்றனர். மொத்தத்தில் அதிகார போதையில் இருக்கும் அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் அதிகாரத்துவ அடியாட்களின் கைகள் ஓங்கியுள்ளன.

தற்போதைய நிலையில் நீதி மன்றம் சில தீர்வுகளை வழங்கும் நிலையில் உள்ளது. ஆனால் ஒட்டு மொத்த தீர்வுக்கும் உடனடியாக தீர்வினை வழங்கும் நிலையில் நீதி மன்றங்களில் தங்கி நிற்பதானது நீண்ட கால காத்திருப்புகளுடன் தொடர்புடையது.

எனவேதான் ரணில் - ராஜபக்ஷ ஆளும்தரப்பு மக்களை வீதியில் நாளாந்தம் இறங்க வைத்துள்ளதுடன் அவர்களை பொலிஸ் நிலையங்களுக்கும் நீதிமன்றங்களுக்குமாக அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றது.

• பொலிசார் தடைகளைப் பெற்று தடுத்து வருகின்றனர்.

மக்கள் வீதியில் இறங்கிப் போராட முடியாதவகையில் நீதிமன்றங்களுக்கூடாக பொலிசார் தொடர்ச்சியாக தடைகளைப் பெற்று போராட்டங்களை தடுத்து வருகின்றனர்.

மேலும் எதிர்க்கட்சிகள் தங்கள் அரசியல் வேறுபாடுகளைமறந்து ஆத்திரமடைந்த பொதுமக்களுக்கு நம்பிக்கையுடனும் தேர்தலை அகற்றுவதற்கான அரசாங்கத்தின் திட்டத்தை தகர்த்தெறிய வேண்டும்.

• தேர்தல் நடந்தால்? பெரும்பான்மை கேள்விக் குறி?

இப்போது தேர்தல் நடத்தப்பட்டால், ஜனதா விமுக்தி பெரமுனா (ஜேவிபி) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (என்பிபி) வெற்றிபெற வாய்ப்புள்ளது. எவ்வாறாயினும், எந்தவொரு அரசியல் கட்சியும் பெரும்பான்மையைப் பெற முடியாது என்று உள்ளூர் குழுவின் கருத்துக் கணிப்பு தெரிவிக்கிறது.

இலங்கையின் சுகாதாரக் கொள்கைக்கான நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பின்படி ஜே.வி.பி (32%) மற்றும் சமகி ஜன பலவேகய (SJB) (31%) மக்களின் ஆதரவைப் பெறும் நிலையில் உள்ளதாக வெளிப்படுத்துகின்றன. UNP 9% உடன் பின்தங்கியுள்ளது, மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) 8%க்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

வரலாற்று ரீதியாக, ஜே.வி.பியின் பேரணிகளுக்குள் ஈர்க்கப்பட்ட பாரிய கூட்டங்கள் வாக்குகளாக மாற்றப்படவில்லை. ஏனெனில் அந்த பேரணிகள் நாட்டின் மூலை முடுக்கிலிருந்து கட்சி தொண்டர்களை ஒன்றுதிரட்டியதால் உருவாகிய கூட்டங்களாகவே அமைந்தன. ஆனால் இன்றைய சூழ்நிலையில் மக்கள் ஆதரவாக வாக்களிக்கும் மன நிலைக்கு திரும்பியுள்ளதாகவே கள நிலவரம் காட்டி நிற்கின்றது.

இருப்பினும் இந்த முறை பொது மக்களின் மனநிலை UNP, SLPP மற்றும் SLFP (இது 1% உடன் அடிமட்டத்தில் நலிந்துள்ளது) ஆகியவைவற்றுக்கு எதிரான அலை உருவாகியுள்ளது.

SJB மக்களின் இந்த மனமாற்றத்தை வென்றெடுக்கத் தவறியுள்ளது. 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில், சஜித் பிரேமதாச 42% மக்கள் வாக்குகளைப் பெற்றபோது இருந்த அதன் மக்கள் ஆதரவு தற்போது குறைந்துள்ளது.

• மக்கள் புள்ளடிக்குள் புரட்சி செய்ய காத்திருக்கின்றனர்.

இன்னும், நாடு வாக்களிப்பதற்கு முன்பு நிறைய நடக்கலாம் வாக்காளர்கள் மனநிலை ஊசலாடுகிறார்கள். முடிவெடுக்காத வாக்காளர்கள் முடிவு செய்வார்கள். இருப்பினும், முந்தைய வழமையான வாக்களிக்கும் முறைக்கு மக்கள் திரும்புவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஏனெனில் தென்னிலங்கை மக்கள் புள்ளடிக்குள் புரட்சி செய்ய காத்திருக்கின்றனர். இதுவே ரணில் - ராஜபக்ஷ அணியினரைக் கிலி கொள்ளச் செய்துள்ளது.

• களியாட்ட கிரிக்கட்

இந்த ஒரு நிலையிலும் நாட்டை இன்னொரு எரிமலையின் மீது தூக்கி நிறுத்தியுள்ள ஆட்சியாளர்கள் களியாட்ட கிரிக்கட் விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். நாடு மாத்திரமல்ல உண்மையில் அவர்களும் எரிமலையின் மீதே அமர்ந்துள்ளனர் என்பதை மறந்துவிட்டனர்போலும்.

• மற்றொரு சுனாமி

பொதுமக்களின் கோபத்தின் மற்றொரு சுனாமி உருவாகுவதற்கான அறிகுறிகள் மறைந்துவிட்டதாக எண்ணி ஆளும்தரப்பினர் களியாட்ட கிரிக்கட் விளையாட்டில் ஈடுபடலாம். ஆனால் இலங்கையின் பொருளாதார நெருக்கடி ஒரு அநாதையாக நிற்கும்வரை அதற்கு எவரும் பொறுப்பேற்று தீர்வு காணாதவரை மக்களின் கோபமோ எழுச்சியோ அடங்கியதாக அர்த்தப்படாது. அது இன்னொரு சுனாமியாக மீண்டும் மேல் எழும்பும். மேலும் அது முழு நாட்டையும் குழப்பத்தில் மூழ்கடிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

Email : vathevaraj@gmail.com
15th March 2023



# இலங்கையின் மிக உயரமான நடராஜர் சிலை

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் ஆனையிறவுக்கு அருகே, கண்டி வீதியில் தட்டுவன்கொட்டிச் சந்தியில் ஒரு நடராஜர் சிலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கரைசிப்பிரதேச சபையின் ஒழுங்கமைப்பில் புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியோடு 27 அடி உயரமான அந்தச் சிலை உருவா க்கப்பட்டிருக்கிறது.இலங்கைத்தீவில் உள்ள மிக உயரமான நடராஜர் சிலை அதுவென்று கூறலாம்.

2009க்கு பின் ஆனையிறவுப் பிரதேசம் யுத்த வெற்றிவாதத்தின் உல்லாசத் தலங்களில் ஒன்றாக மாற்றப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் பண்பாட்டு தலைநகரமாகிய கவர்ச்சிமிகு யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் எவரும் முதலில் ஆனையிறவில் அமைக்கப்பட்டிருக்கும் இரண்டு யுத்த வெற்றி வளாகங்களைக் கடந்துதான் உள்ளேவர வேண்டும்.அதாவது யுத்த வெற்றி உங்களை வரவேற்கிறது என்று பொருள்.இது எங்களால் வெற்றி கொள்ளப்பட்ட நிலம் என்று பொருள்.

யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் பொழுது குடா நாட்டின் கழுத்துப் பகுதியில் முதலில் தென்படுவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தோல்வியுற்ற படை நடவடிக்கை ஒன்றின்போது பயன்படுத்தப்பட்ட உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஒரு கவச வாகனம். அதற்கருகில் அந்தக் கவச வாகனத்தை தடுத்து நிறுத்திய படை வீரர் ஒருவரின் நினைவுச் சின்னம். அதோடு சேர்த்து ஒரு விருந்தகம். அதைச் சற்றுத் தாண்டிச் சென்றால் வலது பக்கத்தில் கடலேரியின் பின்னணியில் பிரம்மாண்டமான ஒரு யுத்த வெற்றிச்சின்னம் உண்டு.இலங்கைத்தீவை இரண்டு கைகள் ஏந்தியிருப்பது போன்ற அந்த யுத்த வெற்றிச் சின்னந்தான் யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் வெளியாட்களை வரவேற்கின்றது. அதாவது யுத்த வெற்றி உங்களை வரவேற்கிறது என்று பொருள்.இவ்வாறு கடனேரியின் உப்புக் காற்றில் எப்பொழுதும் யுத்த வெற்றி வாடை வீசும் ஒரு பிரதேசத்தில், தமிழ் மக்களின் வழிபாட்டுருக்களில் ஒன்றாகிய நடராஜர் சிலையை நிறுவியமை என்பது அரசியல் அர்த்தத்தில் கவனிக்கப்பட வேண்டியது.

அச்சிலையின் அழகியல் அம்சங்கள் குறித்தும் அது பார்த்த உடனேயே கையெடுத்துக் கும்பிடக்கூடிய ஒரு சிலையாக இருக்கிறதா இல்லையா என்பதைக் குறித்தும் பின்னர் தனியாக ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறேன். இன்று இக்கட்டுரையில் நான் கூறவருவது அச் சிலைக்குப் பின்னால் இருக்கும் பிரதேச பிராந்திய மற்றும் கட்சி அரசியலைப் பற்றி.

நாவற்குழிச் சந்தியை போலவே ஆனையிறவிலும் அதாவது யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் தமிழ் மக்களை அடையாளப்படுத்தும் கட்டுமானங்கள் அவசியம்.அரசாங்கம் அதைத் திட்டமிட்டு யுத்தவெற்றி வாசலாகக் கட்டியெழுப்பி வைத்திருக்கிறது.தமிழ்மக்கள் அதனை ஒரு மரபுரிமை வாசலாக மாற்ற வேண்டும்.அந்த அடிப்படையில் சிந்தித்து கரைச்சி பிரதேச சபை முடிவெடுத்திருந்திருந்தால் அது வரவேற்கத்தக்கதே.

நாவற்குழியில் ஒரு புத்த விகாரை கட்டியெழுப்பப்பட்டு வரும் ஒரு சூழலில் சிவபூமி அறக்கட்டளையின் அருங்காட்சியகமும் திருவாசக அரண்மனையும் கட்டப்பட்டிருப்பது போல ஆனையிறவிலும் யுத்தவெற்றி வாசலை எதிர்நோக்கி ஒரு மரபுரிமை வாசலை சிருஷ்டிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு.

ஆனால் அந்த மரபுரிமைக் கட்டமைப்பானது எப்படி அமைய வேண்டும்?அது சிங்கள பௌத்த சின்னங்களுக்கு எதிராக சைவச் சின்னங்களை முன் நிறுத்தும் ஒன்றாக அமைய வேண்டுமா? அல்லது தமிழ்த் தேசியத்தின் மதப் பல்வகைமையை பிரதிபலிக்கும் ஒன்றாக அமைய வேண்டுமா? சிவபூமி அறக்கட்டளை ஒரு சமய நிறுவனம். அது தான் போற்றும் ஒரு சமயத்தை முன்னிறுத்தும்.ஆனால் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அப்படிச் சிந்திக்கத் தேவையில்லை.

தேசியவாதத்தின் உள்ளடக்கம் ஜனநாயகமாக இருக்க வேண்டும் என்று மேற்கத்திய அறிஞர்கள் கூறுவார்கள். அதாவது ஜனநாயக அடிச்சட்டத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக் கட்ட வேண்டும்.இதை இன்னும் ஆழமாக சொன்னால், ஒருவர் மற்றவருக்கு சமம் என்ற அடிப்படையில் மக்களைத் திரட்டவேண்டும்.இதை இன்னும் நடைமுறை வார்த்தைகளில் சொன்னால், ஒரு மதம் இன்னொரு மதத்திற்கு சமம் ஒரு பிரதேசம் இன்னொரு பிரதேசத்துக்கு சமம் யாரும் பிரதேச ரீதியாகவோ சாதி ரீதியாகவோ மத ரீதியாகவோ ஒருவர் மற்றவருக்கு மேலானவரும் அல்ல் கீழானவரும் அல்ல என்ற அடித்தளத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக்கட்ட வேண்டும்.எனவே தேசியவாதம் எனப்படுவது மதப்பல்வகைமையின் மீதே கட்டியெழுப்பப்பட வேண்டும்.மத மேலாண்மையின் மீது அல்ல.இந்த அடிப்படையில் சிந்தித்து தமிழ்மக்கள் தமது மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்கவும் முன்நிறுத்தவும் வேண்டும்.

ஒவ்வொரு மதப்பிரிவும் அதனதன் மதச் சின்னங்களை முன்னிறுத்துவதில் தவறில்லை. அது அந்த மதத்தின் கூட்டுரிமை. ஆனால் ஒரு மதம் இன்னொரு மதத்தை அவமதிக்கும் போது அல்லது அந்த மதச் சின்னங்களை அழிக்கும் போது அல்லது ஒரு மதத்தின் மேலாண்மையை நிறுவ முற்படும் போதுதான் பிரச்சினை வருகிறது.

அண்மை ஆண்டுகளாக தாயகத்திலும் புலம்பெயர்ந்த பரப்பிலும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் இந்திய மத்திய அரசை அணுகுவதற்கு மதத்தை ஒரு வாகனமாக பயன்படுத்த முயற்சிப்பது தெரிகிறது.இதில் சில தமிழ் அரசியல்வாதிகளும் அடங்குவர்.இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் மதசார்பு நிலைப்பாட்டைப் பின்பற்றி அதன்மூலம் இந்திய மத்திய அரசாங்கத்தை அணுக முடியுமா என்று மேற்படி தரப்புக்கள் சிந்திக்கின்றன.பாரதிய ஜனதா அரசாங்கமானது இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்று.எனவே ஈழத் தமிழர்கள் அந்த அரசாங்கத்தைத்தான் அணுக வேண்டும்.ஆனால் அதன் பொருள் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் பாரதிய ஜனதா பின்பற்றும் அதே நிகழ்ச்சி நிரலை ஈழத் தமிழர்களும் பின்பற்ற வேண்டும் என்றில்லை.

இப்பிராந்தியம் இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துட் காணப்படுகிறது.இந்தியாவை மீறி எந்த ஒரு வெளிச்சக்தியும் ஈழத் தமிழர்களுக்கு ஒரு தீர்வைத் தரமுடியாது. இப்பிராந்திய யதார்த்தத்துக்கூடாக சிந்திக்கும்போது ஈழத்தமிழர்கள் பாரதிய ஜனதா அரசாங்கத்தைத்தான் அணுக வேண்டும்.ஆனால் அதன் பொருள் தமிழ் தேசியத்தின் மதப்பல்வமையை பலியிட வேண்டும் என்பதல்ல.

ஈழத்தமிழர்களின் நவீன அரசியல் எனப்படுவது மதப்பல்வகமையின் மீதே கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. பெருமளவு இந்துக்களைக் கொண்ட ஈழத் தமிழ்ச் சமூகத்தில் முதலில் தோன்றிய இளையோர் அமைப்பாகிய யாழ்ப்பாண வாலிபர் முன்னணியை உருவாக்கியது ஒரு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவராகிய கன்ரி பேரின்பநாயகந்தான்.

தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டபோது, அதன் கால்கோல் விழா 1949ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ஆம் திகதி மாவட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றலில் சீல ஸ்ரீ துரைசாமிக் குருக்களின் ஆசியுடன் இடம் பெற்றது.இதுதொடர்பான தகவல்களை தமிழரசுக் கட்சியின் வெள்ளி விழா மலரில் காணலாம். அக்கட்சியின் தலைவராகிய செல்வநாயகம் ஒரு புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர்.செல்வநாயகத்தை ஈழத்தமிழர்கள் தந்தை என்றும் ஈழத்துக் காந்தி என்றும் அழைத்தார்கள். தந்தை செல்வா இறந்தபோது அவருடைய உடல் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்யப்படவில்லை. இந்து முறைப்படி வேட்டி அணிவிக்கப்பட்டு,தகனம் செய்யப்பட்டது.தன்னைத் தலைவராக தெரிந்தெடுத்து,தந்தை என்று அழைத்த பெரும்பான்மை இந்து வாக்காளர்களை கௌரவிப்பதற்காக செல்வநாயகம் அவ்வாறு கேட்டுக் கொண்டதாக கருதப்படுகிறது.

எனவே ஈழத்தமிழர்களின் நவீன அரசியலானது மதப் பல்வகமையின் மீதுதான் கட்டியெழுப்பப்பட்டது.அதை இப்பொழுது ஒரு மதத்துக்கு மட்டும் உரியதாக குறுக்கக் கூடாது. குறிப்பாக நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது திருச்சபைகளுக்கும் ஆறுமுகநாவலர் போன்ற மதப் பெரியார்கள் மற்றும் இந்துபோர்ட் போன்ற இந்து அறக்கட்டளைகளுக்கும் இடையிலான போட்டியின் திரண்ட விளைவுதான்.ஆனால் அந்தப் போட்டியானது மத விரோதமாக,மோதலாக மாறவில்லை.

ஆனால்,2009க்குப் பின் எந்த ஒரு மதத் தலைவரும் துணிந்து கதையாத ஒரு வெற்றிடத்தில், ஒற்றைக் குரலாக ஒலித்த ஆயர் ராயப்பு ஜோசப் அவர்களுடைய அதே மறைமாவட்டத்தில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான முரண்பாடு தூக்கலாகத் தெரிவது துரதிஷ்டவசமானது. தமிழ்த் தேசியத்தை மதப்பல்வகைமையின் மீது கட்டியெழுப்ப விரும்பும் எல்லாச் சக்திகளும் அந்த முரண்பாட்டைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

தென்னாடுடைய சிவனார் ஆனையிறவின் உப்புவெளியில் ஆட வேண்டும்.அவர் அடியார்களின் அன்புக்கே ஆடுபவர். அரசியல் பஜனைகளுக்கு ஆடுபவரல்ல..


12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் அனைவருக்கும் ஆதரவு உள்ளது.
உங்கள் பிள்ளைக்கு உதவித்தொகையாக $250 வரை பெற்றுக் கொள்ளுங்கள்
மார்ச் 31க்குள் இணையத்தளத்தில் விண்ணப்பிக்கவும்.
ontario.ca/CatchUpPayments
Ontario
இதற்குரிய கட்டணம் ஒன்ராறியோ அரசாங்கத்தால் செலுத்தப்பட்டுள்ளது


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Residential
* Commercial
* Building Permits
Contact: Siva
416-706-8160


மகுடம் MAHUDAM 2023
KOKUVIL HINDU COLLEGE O.S.A. CANADA
ESTD 1994
2300 PHARMACY AVE, SCARBOROUGH, ON M1W 1H8
MARCH 25TH 2023 SATURDAY 5:00PM
மாபெரும் இன்னிசை, நடன நிகழ்வுகள்
SINGERS
Punya
Mahisha
Hariharasudhan
Ananthan
DANCE PERFORMER'S
IRUDAYA DANCE COMPANY
ABINAYALAYA NATYALAYAM &
SRI ABIRAMY DANCE ACADEMY
Mega Tunes
MC
Prasanth
&
Sai Janani
KOKUVIL HINDU COLLEGE OSA CANADA
For tickets please contact
Ravi Kana - 416 725 7284, Maithily - 416 388 3935
Nageswaran - 647 609 5392
COMMUNITY
CHRISTEEN SEEVARATNAM
S.P.IMPORTERS
MAPLE
HIDE AUTO CENTRE
JAPANESE CAR SPECIALIST
Hideo Baba / Yuvan
416-288-9711
15 Crockford Blvd. Unit#9
Scarborough, ON M1L 4J9
yuvant@hotmail.com
OPTIMART
WINNERS LOTTO CENTRE
Anthony & Associates PC
10 Milner Business Court, Suite 505
Toronto ON M1B 3C6
Tel: 416.800.0752
Fax: 416.800.0753
HOMELIFE
SCARSVIEW
NEW OCEAN
INDRAN SWEET
BUY, SELL & LEASE
Brooklin Pub & Lounge
PARTY PERFECTION FOR PRIVATE EVENTS
RAJA MAHENDRAN
416 315 9397
RE/MAX
Selva Vettyvel
416.568.4301
Rishani Vettyvel
416.261.1544
905.844.7485
RANJANI THIRU LAW
SINDI FINANCIAL
TEMPLE OF SAREES
Reliable
416 301 1733

# INTERNATIONAL WOMEN'S DAY CELEBRATION HOSTED BY WOMEN EMPOWERED SOCIAL CLUB IN MARKHAM

## WOMEN EMPOWERED SOCIAL CLUB அமைப்பு நடத்திய சர்வதேச பெண்கள் தினக் கொண்டாட்டம்

கனடாவில் ஒன்றாரியோ மாகாணத்தில் திருமதி கவிதா செந்தில் அவர்கள் தலைமையில் இயங்கிவரும் **WOMEN EMPOWERED SOCIAL CLUB** பெண்களுக்கான அமைப்பு நடத்திய சரவதேச பெண்கள் தினக் கொண்டாட்டம் கடந்த 11ம் திகதி சனிக்கிழமையன்று மாலை மார்க்கம் நகரில் அமைந்துள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.

பெண்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் உரையாற்றுவதற்கான கனடாவின் தேசிய ஊடகவியலாளராப் பணியாற்றும் மஞ்சுளா செல்வராஜா அவர்களும் பிரதான பேச்சாளராக தமிழகத்திலிருந்து சட்டத்தரணியும் திரைப்படம் மற்றும் சின்னத்திரை நாடகங்கள் ஆகியவற்றில் தனது நடிப்பாற்றலை வெளிக்காட்டி வருபவரும் பட்டிமன்றப் பேச்சாளருமான சந்தியா ஆகியோர் அழைக்கப்பெற்றிருந்தனர்.

நிகழ்ச்சித் தொகுப்பாளராக "அக்னி" இசைக்குழு புகழ் சில்வியா பிரான்சிஸ் அவர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தார்.

முதலில் நிறுவனர் உரையாற்றிய திருமதி கவிதா செந்தில் தனது உரையில் இந்த அமைப்பான நிறுவப்பட்டதற்கான காரணங்களையும் தனது விருப்பங்களையும் சிந்தனைகளையும் எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் மற்றும் உரைகள் ஆகியன இடம்பெற்றன. மண்டபம் நிறைந்த விழாவாக அமைந்த இந்த சரவதேச பெண்கள் தினக் கொண்டாடடம் அங்கு கூடியிருந்த பார்வையாளர்களையும் சிறப்பு விருந்தினர்களையும் வர்த்தகப் பிரமுகர்களையும் பரவசத்தில் ஆழ்த்தியது என்றால் அது மிகையாகாது.

மேற்படி விழாவில் கனடாவில் சேவை மனப்பான்மையோடு பல நிறுவனங்களில் பணியாற்றிவரும் கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்களுக்கும் தனது என்பது வயதிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இணைந்து முதுமானிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட திருமதி யோகரத்தினம் செல்லையா ஆகிய இருவருக்கும் ஆளுமை விருதுகள் வழங்கப்பெற்றன. மேற்படி விருதுகளை அங்கு கலந்து கொண்ட மத்திய அரசின் அமைச்சர் திருமதி ஹெலேனா ஜெக் மற்றும் மார்க்கம் மாநகரசபை மேயர் பிராங்க் ஸ்கெப்பட்டி ஆகியோர் வழங்கினார்கள்.

தொடர்ந்தும் பல கௌரவங்கள் இடம்பெற்றன.

பின்னர் இராப்போசன விருந்தோடு இந்த விழா நிறைவுற்றது.
















# மரண அறிவித்தல்

தோற்றம்:
15 - 03 - 1938



மறைவு:
16 - 03 - 2023

# திரு. வைரமுத்து விநாயகமூர்த்தி

**(கோண்டாவில் கிழக்கு மற்றும் நவக்கிரி)**

**யாழ். கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், நவக்கிரி, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து விநாயகமூர்த்தி அவர்கள் 16-03-2023 வியாழக்கிழமை அன்று காலமானார்.**

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து, ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம், கனகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும்,
அன்னபூரணம் அவர்களின் பாசமுள்ள கணவரும்,
நிமல்ராஜ், விமலராணி, காலஞ்சென்ற ஆனந்தராஜா, வசந்தராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும்,
ஜெயக்குமாரி, ரவீந்திரன், மேகலா, காலஞ்சென்ற சிவசாந்தினி, ஜெயலட்சுமி, சரோஜினி, வனஜா, பவகோபிதன், டக்சிகா, காலஞ்சென்ற தூயலிங்கம், குணபாலலிங்கம், ராஜேந்திரன், கலாநிதி, யுகாநந்தி, யுகதர்ஷினி ஆகியோரின் அன்பு மாமனாரும்,
துசியந்தன், துசியா, உஷாந்தன், நிஜந்தன், ஆகியோரின் பெரியப்பாவும்
காலஞ்சென்ற சிவபாக்கியம், கமலாதேவி (இலங்கை), துரைராஜா (இலங்கை) ஆகியோரின் அண்ணாவும்,
காலஞ்சென்ற கோபாலசிங்கம், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, காலஞ்சென்ற செல்வராணி, தானையா, இராசம்மா, இராசமலர் ஆகியோரின் மைத்துனரும்,
மகேஸ்வரி, சிவஞானமூர்த்தி ஆகியோரின் சகலனும்
சஞ்ஜீவன், அபினா, ஆருணி, பிரவீனா, நிவேதன், நிஷானி, அதித்திரி, அதித்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் *19-03-2023* ஞாயிற்றுக்கிழமை மாலை *5* மணி முதல் இரவு *9* மணி வரையும் *20-03-2023* திங்கட்கிழமை காலை *11:30* மணி முதல் பி.ப. *12:30* மணி வரை 8911 Woodbine Avenue, Markham, ON இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, *20-03-2023* திங்கட்கிழமை பி.ப. *12:30* மணி முதல் *2:30* மணி வரை கிரியைகள் நடைபெற்ற, பின்னர் 12492 Woodbine Avenue, Gormley, ON இல் அமைந்துள்ள Highland Hills Funeral Home & Cemetery இல் தகனம் செய்யப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:
நிமால் (கனடா): (416) 888-1128
சாந்தி (கனடா): (647) 289-6545
வசந்த் (கனடா): (647) 885-3012



# இலங்கையில் கேலிக்கூத்தாகும் தேர்தல் நடைமுறை

- நடராசா லோகதயாளன்

இலங்கையில் அரசியல் - சமூக - பொருளாதார பிரச்சனைகளும் அதன் நெருக்கடிகளும் தொடரும் நிலையில், உள்ளூராட்சி தொடங்கி ஜனாதிபதி தேர்தல் வரையிலான பேச்சு அன்றாடம் விவாதிக்கப்படும் விஷயமாக மாறியுள்ளது.

புதிய தேர்தல் ஒன்றின் மூலமாக, புதிய ஆட்சியாளர்களோ அல்லது இப்போதைய ஆட்சியாளர்கள் மக்களின் புதிய ஆணையுடனோ ஆட்சிக்கு வரும் போது மக்கள் நலன் சார்ந்த ஆக்கபூர்வமான மாற்றங்கள் வரலாம் அல்லது வரவேண்டும் என்கிற எதிர்பார்ப்பு அன்றாடம் அதிகரித்து வருகிறது.

நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதி ஆட்சி முறையில், அந்த மாற்றம் ஜனாதிபதி தேர்தல் ஒன்றிலிருந்தே தொடங்க வேண்டும். சரியோ, பிழையோ மக்கள் ஆணையுடன் புதிய ஜனாதிபதியோ அல்லது புதிய ஆணையுடன் பழைய ஜனாதிபதியோ தேர்தல் மூலம் பதவிக்கு வரும் போது, நாட்டின் ஜனநாயகத் தன்மைக்கு? அங்கீகாரம் கிடைக்கலாம்.

உள்ளூராட்சித் தேர்தலிற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டு வேட்பாளர் தயாரான நிலையில், அடிப்படை ஜனநாயக அலகான அந்த தேர்தலே நடைபெறுமா என்று இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. நாட்டில் நிலவிய கடும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களைத் திசை திருப்பவே உள்ளூராட்சித் தேர்தல் என்ற மாயை ஏற்படுத்தப்பட்டது என்ற விமர்சனம் வலுத்து வருகிறது.

ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல் நடைபெறும் என்று இப்போது கூறப்பட்டாலும் அதில் ஆயிரத்தொரு கேள்விகள் உள்ளன.

அதற்கு அடுத்த அரசியல் நிர்வாக அலகான மாகாண சபை தேர்தல்கள் பற்றி பேச்சே இல்லை. மாகாண சபை என்ற வார்த்தையே ஏதோ மோசமான வார்த்தை என்பது போல சரத் வீரசேகர போன்ற "தேச பக்தர்கள்" நடந்துகொள்கின்றனர். அது என்னமோ அவரை போன்ற "நாட்டைக் காக்க வந்த நாயகர்களுக்கு" 13 என்ற வார்த்தையைக் கேட்டாலே காய்ச்சல் வந்துவிடுகிறது.

அரசியல் யாப்பில் சட்டரீதியாக உள்வாங்கப்பட்டுள்ள ஒரு அம்சத்தை நிறைவேற்றுவதற்கே இந்த "தேச பக்தர்களுக்கு" இவ்வளவு புகைச்சல் என்றால், அவர்கள் ஜனநாயகவாதிகளா அல்லது எந்நாட்டிலும் மிகவும் புனிதத்தன்மை வாய்ந்த அரசியல் சாசனத்தை மதித்து நடப்பவர்களா என்ற கேள்வி எழுகிறது.




சரி மாகாண சபைகளிற்கான தேர்தல் பற்றி தான் பேச்சு இல்லை, அடுத்த ஆட்சி அதிகார அலகான நாடாளுமன்றத் தேர்தலையாவது நடத்தி புதிய அவையை தேர்ந்தெடுத்து ஜனநாயக விழுமியங்களை நிலைநாட்டி உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் அங்கீகாரத்தைப் பெற முயல்வார்களா என்றால், அவையில் அங்கம் வகிக்கும் 225 பேரில் பெரும்பான்மையானவர்கள் தேர்தலைச் சந்திக்க தயாராக இல்லை. ஏனென்றால் தேர்தல் நடைபெற்றால் குறைந்தது 100 பேருக்கும் மேற்பட்டவர்கள் முன்னாள் உறுப்பினர்களாகி விடுவார்கள் என்கிற அச்சம் நிலவுகிறது. எனினும் 20ஆவது சட்ட திருத்தத்தின் அடிப்படையில் நான்கரை ஆண்டுகளிற்குப் பிறகு நாடாளுமன்றத்தை கலைக்க வழியுள்ளது. ஆனால் இப்போது பலவீனமான ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்ரமசிங்க அதைச் செய்வதற்கான வாய்ப்பு இல்லை. ஏனென்றால் அவரை ஆட்டிவைக்கும் மொட்டுக்கட்சியும் அதன் உறுப்பினர்களும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை இருந்தால் மட்டுமே தம்மால் நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்க உதவிகளைச் செய்ய முடியும் என்று ஜப்பான் உட்பட உதவி வழங்கும் நாடுகள் தெரிவித்துள்ளன. அந்த ஸ்திரத்தன்மை என்பது நாடாளுமன்றத் தேர்தல் மூலமே கிடைக்கும் என்பதை ஆட்சியாளர்கள் அறிந்தும் அறியாதது போலுள்ளனர். ஆனால் இந்த பாசாங்கு நீண்டகாலம் செல்லாது என்பதையும் அவர்கள் அறிந்திருக்கவே செய்கிறார்கள்.

தற்போதிருக்கும் நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு (2024) ஜனவரி மாதம் வரை உள்ளது. 20ஆவது சட்டத்திருத்தத்தின்படி ஜனாதிபதி விரும்பினால் அதை இந்தாண்டு ஆகஸ்ட் மாதம் கலைத்து புதிய நாடாளுமன்றத் தேர்தலை அறிவிக்கில்லாம்.

நாட்டில் அதிக உட்சபட்ச அதிகார அலகு என்பது ஜனாதிபதி பதவி. அந்த அதிகார பதவியில் உள்ளவர் "வானளாவிய அதிகாரம்" கொண்டவர். அவர் நினைத்தால் நாட்டில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். பயங்கரவாத தடைச் சட்டத்தில் ஒருவரை உள்ளே தள்ளலாம், உள்ளே இருப்பவரை தனது அதிகாரத்தை பயன்படுத்தி விடுதலையும் செய்யலாம். ஜெ ஆர் கொண்டுவந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இன்றளவும் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகி வருகிறது. அந்த பதவியில் இருப்பவர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.



ஜெ ஆர் ஜெயவர்தனவை அடுத்து ரணசிங்க பிரேமதாச நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். அவர் படுகொலை செய்யப்பட்ட பிறகு டி பி விஜேதுங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். ஆனால் அவர் பிரேமதாசவின் கீழ் பிரதமராக இருந்தார். அவர் பிரதமரானதும் காலத்தின் சூழல்களால் தான். லலித் அதுலத்முதலி தேர்தல் காலத்தில் கொலை செய்யப்பட்ட விஜேதுங்க பிரதமரானதே வரலாறு.

எனவே அரசியல் சாசனத்தின்படி பிரதமராக இருந்த டி பி விஜேதுங்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.

அவரை அடுத்து சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்ரிபால சிறிசேன, கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் நேரடியாக மக்கள் மூலம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கோத்தாபய ஜனாதிபதியாக இருந்த காலத்தில், அவரது மூத்த சகோதரர் மகிந்த பிரதமராக நியமிக்கப்பட்டார். அரகலய போராட்டத்தை அடுத்து மகிந்த பதவி விலக, பிரதமர் பதவி வெற்றிடமாக அதற்கு ஆள் தேடும் படலம் தொடங்கியது. மொட்டுக்கட்சியிலிருந்து ஆள் கிடைக்காமல், சஜித்திற்கு தூண்டில் போட அவர் தயக்கம் காட்ட, "நரி" ரணில் தான் தயார் என்று சமிஞ்சை காட்ட, 65 உறுப்பினர்களை வைத்துள்ள சஜித்தைவிட ஒற்றை உறுப்பினராக இருக்கும் ரணிலை ஆட்டிப்படைப்பது சுலபம் என்று ராஜபக்சக்கள் வீசிய வலையில் ரணில் சிக்கி, தார்மீக நெறிகளிற்கு மாறாக பதவி ஆசையை மட்டுமே குறியாக வைத்து பிரதமராக சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

இதேவேளை கோத்தா மீதான வெறுப்புணர்வு அதிகரித்து வர அவர் ஆளை விட்டால் போதும் என்ற நிலையில், ஓடி ஒளிந்து நாட்டைவிட்டே வெளியேறினார். பின்னர் சில நாட்கள் நாடு தலையில்லாமல் இருந்தது. சிங்கப்பூரிலிருந்து தனது பதவி விலகல் கடிதத்தை மின்னஞ்சல் மூலம் கோத்தா அனுப்ப, அடுத்த ஜனாதிபதியை நாடாளுமன்றம் தேர்வு செய்யும் நிலை ஏற்பட்டது. அதில் ரணிலிற்கு எதிராக டலஸ் அழகப்பெரும களம் இறங்க, சூத்திரதாரி மகிந்த காய்களை நகர்த்தி தனது அரசியல் எதிரியை ஜனாதிபதி ஆக்கினார் என்பது வரலாறு.

ஆனால் டி பி விஜேதுங்கவிற்கும் ரணில் விக்ரமசிங்கவிற்கும் வித்தியாசம் உள்ளது. அவர் பிரேமதாச பதவிக் காலத்தில் அவருக்கு அடுத்த நிலையில் அதே கட்சியில் இருந்தார். ஆனால் ரணில் நிலைமை அப்படியல்ல. அவருக்கு அதிர்ஷ்டம் அடித்தது அவ்வளவே. ரணில் சட்டரீதியாக நாடாளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியாகத் தேர்வானாலும், அவர் பின் வாசல் வழியாக வந்த ஜனாதிபதி என்பது தான் யதார்த்தம். அதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அதேவேளை தார்மீக ரீதியில் அவர் தன்னை நாட்டின் தலைவராக முன்னிறுத்திக்கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது. ஆனால் சட்டத்திலுள்ள ஓட்டை மறைமுகமாக அவருக்கு சாதகமாகவே உள்ளது.




இப்படியான பின்புலத்தில் அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து விலக வேண்டும், புதிய தேர்தல் மூலம் ஜனாதிபதி ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று பரந்துபட்டளவில் குரல்கள் எழுந்தாலும் அதற்கு சட்டரீதியாக வழியில்லை என்று சட்ட வல்லுநர்கள் கூறுகின்றனர்.

அதாவது ஜனாதிபதித் தேர்தலை 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்கு முன்னர் நடத்துவதற்கான ஏற்பாடுகள் சட்டத்தில் இல்லை என்று துறைசார் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு ஜனவரியில் நடத்துவதற்காகவே உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கப்படுவதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் அரசியல் யாப்பு என்ன சொல்கிறது என்று நாட்டின் சில மூத்த சட்டத்தரணிகளிடம் கருத்துக் கேட்டேன்.

"2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவாகியிருந்தார். அவரது பதவிக் காலம் 5 ஆண்டுகள். ஆனால், அவர் தனது பதவிக் காலத்தின் 4 ஆண்டுகள் முடிவில் அதாவது 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்வதற்கான அறிவிப்பை விடுத்திருக்க முடியும்.

ஆனால் கடந்த ஆண்டு ஏற்பட்ட மக்கள் புரட்சி காரணமாக கோத்தாபய பதவி விலகியமையால் நாடாளுமன்றம் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தது. ரணில் விக்கிரமசிங்க, கோத்தாபயவின் எஞ்சிய பதவிக் காலம்வரை - 2024ஆம் ஆண்டு நவம்பர் வரையில்-பதவியிலிருக்கவேண்டும். எனவே 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியங்கள்".

இந்த ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் எப்போது வேண்டுமானாலும் ஜனாதிபதி தேர்தலை ரணில் விக்ரமசிங்கவால் அறிவிக்க முடியும். ஆனால் அவர் தார்மீக நெறிகளின்படி அப்படிச் செய்வாரா என்பதே கேள்வி.

ஆசியாவில் இலங்கைக்கு உற்ற நட்பு நாடாகவும் சுதந்திரம் அடைந்ததிலிருந்து 70% காலம் இராணுவ ஆட்சி நடைபெற்ற பாகிஸ்தானில் கூட அந்நாட்டு உச்சநீதிமன்றம் மிகவும் முக்கியமான தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளது.



"நிதி நெருக்கடியைச் சுட்டிக்காட்டியோ அல்லது திறைசேரியில் பணம் இல்லை என்று கூறியோ தேர்தலை ஒத்திப்போட முடியாது அதைச் செய்யவும் கூடாது".

ஆனால் இலங்கையில்...

இந்தியா செய்திகள் India News

# யானைகளை பராமரிக்கும் முதுமலை தம்பதி குறித்த "தி எலிபென்ட் விஸ்பர்ஸ்" ஆவண குறும்படத்திற்கு ஆஸ்கர் விருது



யானைகளை பராமரிக்கும் முதுமலை தம்பதி குறித்த "தி எலிபென்ட் விஸ்பர்ஸ்" ஆவண குறும்படத்திற்கு ஆஸ்கர் விருது கிடைத்துள்ளது.

நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்தில் 28 வளர்ப்பு யானைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஊருக்குள் புகுந்து அட்டகாசம் செய்யும் காட்டு யானைகளை பிடித்து கும்கியாக மாற்றி வனத்துறையினர் பராமரித்து வருகின்றனர்.

இதில் தாயைப் பிரிந்து தவிக்கும் குட்டி யானைகளை வனத்துறையினர் மீட்டு முகாமுக்கு கொண்டு வருகின்றனர். தொடர்ந்து பாகன்கள், கால்நடை டாக்டர் கொண்ட மருத்துவ குழு கண்காணிப்பில் குட்டி யானைகள் வளர்க்கப்படுகின்றன. இதில் கடந்த 2017-ம் ஆண்டில் ரகு, 2019-ம் ஆண்டில் பொம்மி குட்டி யானைகள் முகாமுக்கு வந்தன. இவற்றை, பழங்குடியினத்தை சேர்ந்த பொம்மன், அவருடைய மனைவி பெள்ளி ஆகியோர் பராமரித்து வந்தனர்.

இதை மையமாக வைத்து ஊட்டியை சேர்ந்த பெண் இயக்குநர் கார்திகி குன்செல்வெஸ் கடந்த 2019-ம் ஆண்டு தி எலிபெண்ட் விஸ்பர்ஸ் என்ற பெயரில் ஆவணப்படம் ஒன்றை உருவாக்கினார்.

இந்த நிலையில், லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற ஆஸ்கர் விருது வழங்கும் விழாவில் யானைகளை பராமரிக்கும் முதுமலை தம்பதி குறித்த ஆவண குறும்படமான "தி எலிபெண்ட் விஸ்பர்ஸ்" ஆஸ்கர் விருதை வென்றது.

இந்த ஆவண குறும்படத்தை இயக்கிய கார்திகி குன்செல்வெஸ், தயாரிப்பாளர் குனெட் மொன்கோ ஆஸ்கர் விருதை நேரில் பெற்றுக்கொண்டனர்.

சினிமா

# பாகுபலி கதாநாயகன் பிரபாஸ் மருத்துவமனையில் அனுமதி



தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகராக இருப்பவர் பிரபாஸ். இவர் ராஜமவுலி இயக்கத்தில் நடித்த பாகுபலி திரைப்படத்தின் மூலம் உலகம் முழுவதும் பிரபலமானார். இந்த படத்தை தொடர்ந்து நடிகர் பிரபாஸ் கேஜிஎப் இயக்குனர் பிரசாந்த் நீல் இயக்கத்தில் சலார் என்ற திரைப்படத்தில் நடித்து வருகிறார். அதன் பிறகு ஆதிப்ருஷ் மற்றும் ப்ராஜெக்ட் கே போன்ற திரைப்படங்களிலும் பிரபாஸ் நடித்து வருகிறார்.

இந்நிலையில் நடிகர் பிரபாஸ் தற்போது உடல்நலக் குறைவின் காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக ஒரு தகவல் வெளிவந்துள்ளது. இதற்கு முன்னதாக சலார் படப்பிடிப்பின் போது பிரபாஸுக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் ஷூட்டிங்கை கேன்சல் செய்துவிட்டு வெளிநாட்டுக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளார். இந்நிலையில் மீண்டும் நடிகர் பிரபாஸுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. இவர் தற்போது வெளிநாட்டில் சிகிச்சை பெற்று வருவதாக கூறப்படுகிறது. மேலும் நடிகர் பிரபாஸ் ஓய்வில்லாமல் தொடர்ந்து படங்களில் நடித்து வருவதால் அவருக்கு உடல்நல குறைவு ஏற்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது.

# சிறந்த பாடலுக்கான ஆஸ்கர் விருதை வென்றது "நாட்டு நாட்டு" பாடல்



95வது ஆஸ்கர் விருது வழங்கும் விழாவில் சிறந்த பாடல் பிரிவில் ஆர்.ஆர்.ஆர் படத்தின் நாட்டு நாட்டு பாடல் கைப்பற்றியுள்ளது. உலக சினிமாவின் உயரிய விருதாகக் கருதப்படும் ஆஸ்கர் விருது வழங்கும் விழா அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது. மொத்தம் 24 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படும் நிலையில் இதில் இந்தியாவில் இருந்து 3 பிரிவுகளில் படங்கள் போட்டியிட்டது.

அதன்படி சிறந்த பாடல் பிரிவில் ஆர்.ஆர்.ஆர் படத்தில் இடம் பெற்ற நாட்டு நாட்டு பாடலும், ஆவணப்படம் பிரிவில் The Elephant Whisperers படமும், Documentary Feature Film பிரிவில் All That Breathes படமும் போட்டியிட்டது. இதில் All That Breathes படத்திற்கு ஆஸ்கர் விருது கிடைக்கவில்லை. இதனைத் தொடர்ந்து மீதமுள்ள 2 பிரிவுகளில் ஆஸ்கர் விருது கிடைக்கும் என ரசிகர்கள் எதிர்பார்த்து காத்திருந்தனர். இதில் The Elephant Whisperers படம் ஆஸ்கர் விருதை கைப்பற்றியது. இதனைத் தொடர்ந்து சிறந்த பாடலுக்கான பிரிவில் நாட்டு நாட்டு பாடலுக்கு ஆஸ்கர் விருது கிடைத்துள்ளது. இதற்கான விருதை பாடலாசிரியர் சந்திரபோஸும், இசையமைப்பாளர் கீரவாணியும் பெற்றுக் கொண்டனர்.

முன்னதாக இப்பாடல் விழா மேடையில் நடன கலைஞர்களால் நிகழ்த்தி காட்டப்பட்டது. பாடல் முடிந்தவுடன் விழாவிற்கு வந்த அனைத்து பிரபலங்களும் எழுந்து நின்று கரவொலி எழுப்பி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். விருதைப் பெற்றதும் மேடையில் பேசிய கீரவாணி, ஆர்.ஆர்.ஆர். படத்தின் இயக்குநர் ராஜமௌலிக்கு நன்றி கூறினார். மேலும் கார்பெண்டர்ஸ் என்ற அமெரிக்க இசைக்குழுவின் பாடல்களை கேட்டுத்தான் நான் வளர்ந்தேன். இந்த வெற்றி என்னை புகழின் உச்சிக்கு கொண்டு சென்றுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானுக்குப் பிறகு இந்திய சினிமாவில் ஆஸ்கர் விருது வென்ற 2வது இசையமைப்பாளர் என்ற பெருமையை கீரவாணி பெற்றுள்ளார். கடந்த 2009 ஆம் ஆண்டு ஏ.ஆர். ரஹ்மான் ஸ்லம்டாக் மில்லியனர் படத்துக்காக 2 ஆஸ்கர் விருதுகளை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்தாண்டு இந்திய திரையுலகின் பிரமாண்ட இயக்குநர் என அழைக்கப்படும் எஸ்.எஸ்.ராஜமௌலி இயக்கத்தில் ஆர்.ஆர்.ஆர். படம் வெளியாகியிருந்தது. இந்த படத்தில் ராம்சரண், ஜூனியர் என்.டி.ஆர்., அஜய் தேவ்கன், ஆலியா பட், ஸ்ரேயா, சமுத்திரக்கனி உள்ளிட்ட பலரும் நடித்திருந்தனர். கீரவாணி இசையமைத்த இப்படத்தில் "நாட்டு நாட்டு" பாடலின் காட்சியமைப்பு ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. மேலும் சமீபத்தில் கோல்டன் குளோப் விருதையும் நாட்டு நாட்டு பாடல் வென்றது குறிப்பிடத்தக்கது.

## வழியெங்கும் வைரங்கள் - 4

***** ***** ***** ***** *****

கவிஞர் தியாரு

ஒருசிறகே கிடைத்தாலும்
ஒருவானம் நானளப்பேன்!
ஒருவிண்மீன் கிடைத்தாலும்
ஒருகோடி நான்படைப்பேன்!
ஒருதிசையே வாய்த்தாலும்
திசைநான்கும் நானிருப்பேன்!
ஒருநொடியே தந்தாலும்
நூறுகவி நான்கொடுப்பேன்!

பெருங்கோடை என்றாலும்
பனிவாடை நான்காண்பேன்!
தெருக்கல்லாய் போட்டாலும்
திருச்சிலையாய் நானெழுவேன்!
துரும்பெடுத்துக் கொடுத்தாலும்
தேர்செய்து நான்தருவேன்!
ஒருவாழ்வைப் பெருவாழ்வாய்க்
கொண்டாடி நான்மகிழ்வேன்!



# WOMEN'S DAY CELEBRATION HOSTED BY CANADIAN WOMEN COUNCIL

# கனடிய பெண்கள் கழகத்தினர் நடத்திய சர்வதேச பெண்கள் தினக் கொண்டாட்ட நிகழ்வு





ரொறன்ரோ மாநகரில் சிறப்பாக இயங்கிவரும் கனடிய பெண்கள் கழகத்தினர் நடத்திய சர்வதேச பெண்கள் தினக் கொண்டாட்ட நிகழ்வு கடந்த சனிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது.
ஈற்றொபிக்கோ நகரில் கிப்ளிங் நகர சன சமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

சிறுவர் சிறுமியர்கள் மற்றும் மூத்தோர்கள் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சிகளும் உரைகளும் இடம்பெற்றன.
சிறப்பு விருந்தினராக பவதாரணியின் பாரதி கலைக்கூடத்தின் நிறுவனரும் அதிபருமான மதிவாசன் சீனிவாசகம் அவர்கள் கலந்து சிறப்புரையாற்றினார். அத்துடன் கலை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்த பலருக்கு சான்றிதழ்களை வழங்கினார்.





உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களும் அங்கு வாழ்த்துரை வழங்கினார்.
விழாவிற்கான ஏற்பாடுகளை வசந்தா ரோஹினிதேவி கருப்பையா தனது தொண்டர்களோடு சேர்ந்து ஏற்பாடு செய்திருந்தார்.

**The Chief Guest of this International Women's Day Celebration was Councilor Vincent Crisanti from Ward-1 Etobicoke and he delivered his speech.**



இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.
(செய்தியும் படங்களும்:- சத்தியன்)



# சிங்கள — பவுத்தம் ஒரு சிறிலங்காவின் தேசிய அரசும்

- லூசியன் அருள்ப்பிரகாசம்

எங்கள் மரபணுப் பொதுமைகள்

பேராசிரியர் காமினி தென்னக்கோன் மற்றும் பிறரால் நடத்தப்பட்ட மரபணு **(DNA)** ஆய்வுகள் மூலம் இது **(The Island** 2019 பெப்ரவரி தேதியிட்ட அவரது கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது) எண்பிக்கப்பட்டுள்ளது. சிங்களவர் மற்றும் இலங்கைத் தமிழர்களை ஒப்பிடுகின்ற பெரும்பாலான மரபணு ஆய்வுகள் அதிகளவு மரபணு வேறுபாட்டைக் காட்டவில்லை. இது இரு மக்கள்தொகைகளும் தீவுக்குச் சொந்தமான ஒரு பொதுவான வம்சாவளியைக் கொண்டுள்ளன என்பதைக் காட்டுகிறது. மேலும், "மரபணுக் கலவை பற்றிய ஆய்வில், வடகிழக்கு இந்தியாவின் வங்காள மக்களுடன் (25.41**%**) ஒப்பிடும்போது தென்னிந்தியாவின் தமிழர்களிடமிருந்து (69.86**%**) இலங்கை சிங்களவர் அதிக பங்களிப்பைப் பெற்றுள்ளனர். இதிலிருந்து மூன்று முடிவுகள் வெளிப்படுகின்றன.
முதலாவதாக, சிங்களவர்களும் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்றும் பெரும்பாலானவர்கள் திராவிட வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் (69.8**%**). இரண்டாவதாக, இலங்கைத் தமிழர்கள் இலங்கையில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர் - ஏனெனில், இந்த ஆய்வின்படி, இலங்கைத் தமிழர்கள் இந்தியத் தமிழர்களை விட சிங்கள மக்களுடன் நெருங்கிய மரபணு தொடர்பைக் காட்டியுள்ளனர். மூன்றாவதாக, இலங்கைத் தமிழர்கள் மரபணு ரீதியாக சிங்களவர்களைப் போலவே இலங்கையர்களாக உள்ளனர். இலங்கைத் தமிழர்களை தென்னிந்தியத் தமிழர்களுடன் அரசியல் உள்நோக்கத்துடன் பிணைப்பது இந்த உண்மையை மாற்ற முடியாது.

மேற்கூறிய மரபணு ஆய்வுகளின் முடிவுகள் (இலங்கையில் பிறந்த) மானுடவியலாளர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்கா பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் **(Princeton University (USA)** மானுடவியல் பேராசிரியர் கணநாத் ஒபேசேகரா கூறுகிறார்: கிமு 500 க்கு முந்தைய பழமையான குடியேற்றவாசிகளைத் தவிர, இலங்கையில் அடுத்து வந்த குடியேற்றவாசிகள் அனைவரும் தென்னிந்தியாவிலிருந்து வந்தனர், பெரும்பாலும் தமிழ்நாடு, ஒரிசா மற்றும் கேரளாவிலிருந்து வந்தவர்கள். இவர்கள் விரைவாக சிங்களவர்களாக மாறினர். உண்மையில், சிங்கள மக்களிடையே மிகக் கடுமையாக தமிழ் எதிர்ப்புக் குரல் எழுப்பிய சாதியினர் தென்னிந்தியாவிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பிந்தைய காலத்தில் புலம்பெயர்ந்தவர்கள் ஆவர்.
இதற்கு நேர்மாறாக, யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குக் கடற்கரையில் உள்ள தமிழர்கள் குறைந்தது இலங்கையில் கிபி பத்தாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரை இருந்துள்ளனர். இதே கருத்தை அமெரிக்கா வேர்ஜினியா பல்கலைக்கழகத்தின்

**(University of Virginia (USA),** மானுடவியல் பேராசிரியர் செனிவரத்தினவும் எதிரொலிக்கிறார்.
இதை விடவும் மேலே சென்று அவர் கூறியதாவது: பரந்த கண்ணோட்டத்தில், துணைக் கண்டத்தில் உள்ள மக்களின் இன- குடிப்பரம்பலைப் பார்த்தால், சிங்களர்கள் தென்னிந்தியாவின் பிற இன மற்றும் மொழிக் குழுக்களைப் போலவே சிங்களவர்களும் பலவகையான தமிழர்கள் என்பது மிகவும் வெளிப்படையானது ................ குறிப்பாக, பவுத்தம் வடக்கில் இருந்து மறைந்த பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் தென்னிந்தியாவில் தான் பவுத்த மதம் உயிர் பிழைத்திருந்தது என்ற உண்மையை சிங்கள பவுத்தர்கள் மறந்துவிட்டது வியக்கத்தக்கது" **(The Island, Jan 2014)** என்றார்.
இலங்கையில் உள்ள பல தமிழர்கள் குறைந்தது கிபி 500 வரை பவுத்தர்களாக இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய ஆய்வுகளின் அடிப்படையில், தனிச் சிங்கள பவுத்தர்களால் "தங்கள் நாட்டிற்கு" திரும்பிச் செல்லுமாறு கோரப்பட்ட மூன்று வெவ்வேறு இலங்கை தமிழர்களிடமிருந்து கட்டுரையாளர் அறிந்திருப்பது விந்தையானது. சிங்கள மக்கள் உன்னதமான பவுத்த மதத்தை.்.தத்துவத்தை தழுவிக் கொண்டதன் மூலம் தங்களை வேறுபடுத்திக் கொண்டுள்ளனர். எனினும், நாம் இனம் பற்றி மட்டுமே பேசினால், சிங்கள மக்களும் "தங்கள் நாட்டுக்குத்" திரும்பிச் செல்ல வேண்டும் எனக் கேட்க நேரிடும். சிங்களவர்கள் இந்தத் தீவுக்கு இனம் மற்றும் மதம் சார்ந்த உரிமை கோரல் மகாவம்சத்தின் ஐயத்துக்குரிய உரையில் மட்டுமே உள்ளது. மகாவம்சம் பலரால் மறுக்கப்படுகிறது.

இந்த கட்டுரையின் எஞ்சிய பகுதி
சிறுபான்மையினருக்கு இலங்கையின் பரம்பரை உரிமையை மறுத்துப் பெரும்பான்மை சமூகம் எவ்வாறு இந்த நாட்டைத் தனக்கு மட்டுமே சொந்தமானது என்று கடத்த முயற்சிக்கிறது என்பதைக் காண்பிக்க முயல்கிறது.
இலங்கைத் தமிழர்கள் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக இத்தீவில் வாழ்ந்து வருகின்றனர்.
இதனால் சிறுபான்மையினர் தங்கள் லங்கா பாரம்பரியத்தை மறுக்கிறார்கள். இலங்கை தமிழர்கள் இந்த தீவில் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வருகின்றனர்.
சிங்களவர்கள் தென்னிந்தியாவில் இருந்து பின்னர் சிங்களமயமாக்கப்பட்ட மக்களைக் கொண்டுவந்த அதே குடியேற்றத்தின் ஒரு பகுதியாகத் தெரிகிறது.




நாங்கள் இந்தத் தீவுக்கு யார் முதலில் வந்தார்கள் என்பது பற்றிப் பேசவில்லை. நாம் தீவில் ஏற்கனவே உள்ள இரண்டு சமூகங்கள் / நாடுகள் மற்றும் அவற்றுக்கிடையே உறவு என்னவாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றிப் பேசுகிறோம்.
ஆங்கிலேயர்கள்தான் தமிழர்களை சிங்களவர்களுடன் சேர்த்து ஒரு ஒற்றை ஆட்சி முறைமையின் கீழ் கொண்டுவந்து அனைத்து அரசியல் அதிகாரத்தையும் ஒரு சமூகத்தின் கைகளில் (ஒரேயொரு சமூகத்தின் கைகளில்) ஒப்படைத்தனர். இது உண்மையில் எங்களைப் பிரித்து விட்டது. இலங்கை ஒரு தேசமாக இருந்தது என்ற நம்பிக்கையில் செயற்பட்ட பிரித்தானியர்கள், சிங்கள - பவுத்த பெரும்பான்மையினர் அரசைக் கைப்பற்றுவதற்கு இலகுவான வழியை ஏற்படுத்திக் கொடுத்து, நாடாளுமன்ற அமைப்புடன் இணைந்து ஒற்றையாட்சியின் எல்லைகளை அமைத்தனர். திசாராணி குணசேகர அவர்கள் "சிங்கள-பவுத்தத்தால் நாம் இழந்த நாடு" என்ற தலைப்பில் எழுதிய புதுமையான கட்டுரையில் **(Groundviews, February 7, 2023)** சரியாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். அவர் அனைத்து நாடுகளின் கண்ணோட்டத்திலிருந்தும் எழுதுகிறார், இது மிகவும் அவசியம். நான் சிறுபான்மையினரின் கண்ணோட்டத்தில் இருந்து எழுதுகிறேன். ஆங்கிலேயர்கள் சிறுபான்மையினரை சிங்களவர்கள் போலவே ஒரே கொலனித்துவக் கூண்டில் (ஒற்றையாட்சி அரசு) வைத்துத் தமிழர்களை விடுதலை செய்யாமல் நிரந்தரமாக சிறையில் அடைத்து வைப்பதற்கு அவர்களுக்கு (சிங்களவர்களுக்கு) அதிகாரம் அளித்துள்ளனர்!




இலங்கையின் 5 மாகாணங்கள் - ஒக்தோபர் 01, 1833

சுதந்திரம் மற்றும் ஒரு அரசியல் சித்தாந்தமாக சிங்கள- பவுத்தத்தின் எழுச்சி

ஐரோப்பிய நாடுகளில், 300 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்த இன, மதப் போட்டிகள் போர்கள் மற்றும் இரத்தக்களரிக்குப் பின்னர் தீர்க்கப்பட்டன. அதன் பின்னர் அவை 'தேசிய அரசுகள்' **('nation states')** ஆகத் தோற்றம் பெற்றன. அதன் பிறகு மக்களாட்சி மலர 300 ஆண்டுகள் ஆனது. இலங்கையைப் பொறுத்தவரை, தற்போதுள்ள இன மற்றும் மத வேறுபாட்டுச் சிக்கல்கல்களை மறைப்பது அல்லது புறக்கணிப்பது அல்லது மறந்துவிடுவது என்ற நம்பிக்கையில் காலம் கடத்தப்பட்டது. இதனால் சனநாயகப் போர்வையில் ஒரு "தேச அரசை" பிரகடனப்படுத்தப்பட்டு மக்களாட்சியால் முடிசூட்டப்பட்டது. இலங்கை ஒரு மதச்சார்பற்ற நாடாக இருக்கும், சட்டத்தின் ஆட்சி மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் நாடாக இருக்கும் என்ற திரு. டி.எஸ். சேனாநாயக்காவின் உறுதிமொழியின் பேரில் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. சிங்கள - பவுத்தம் ஒரு அரசியல் சித்தாந்த அடிப்படையில் அந்த உறுதிமொழியைக் கைவிட்டு விட்டது. இது சிங்கள - பவுத்த பெரும்பான்மையினரின் "அரசியலமைப்பு புரட்சிக்கு" சமம் ஆகும். நாடு மதச்சார்பற்ற நாடாக இருக்கும் என்ற அரசின் வாக்குறுதியை மீறி, தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களுக்கும் நாடு சொந்தமானது என்று அழைக்கும் அரசை (சிங்களவர்கள்) கடத்தி விட்டனர். உண்மையில் ஆங்கிலேயர்கள் தமிழர்களை சிங்களவர்களுடன் ஒரே கொலனித்துவச் சிறைச்சாலையில் (ஒற்றையாட்சிக்குள்) அடைத்து, அவர்களை ஆளும் முழு அதிகாரத்தையும் சிங்களவர்களுக்கு வழங்கினர்! சிங்கள மக்கள் நாடாளுமன்றத்தை தங்களது பெரும்பான்மை வாக்குப் பலத்தால் முழுமையாகக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதால் ஒற்றையாட்சி கொலனித்துவச் சிறை ஒருபோதும் திறக்கப்பட மாட்டாது என்பதை உறுதி செய்யும். ஆங்கிலேயர்கள் நமக்கு விட்டுச் சென்ற ஒற்றையாட்சி அரசின் அனுமானத்தைக் கருத்தில் கொண்டுதான் நாம் தொடங்குகிறோம் என்றாலும் நமது சொந்த வரலாறு வேறு விதமாகக் கற்பிக்கிறது.

கொலனித்துவ எல்லைகள் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கின்றன

ஆங்கிலேயர்கள் நமது தற்போதைய எல்லைகளுடன் நம்மை விட்டுச் சென்றார்கள். நாம் அனைவரும் அதை இயல்பாகவே கருதுகிறோம். இருப்பினும் ஒரு காலத்தில், இலங்கை இந்தியாவின் சென்னை மாநிலத்தின் (இன்று தமிழ்நாடு) ஒரு பகுதியாக இருந்தது. ஆங்கிலேயர்கள் எங்களை அப்படியே விட்டுச் சென்றிருந்தால், எங்கள் ஆட்சி மொழி தமிழாகவும், அதே நேரத்தில் இந்தி நமது தேசிய மொழியாகவும் இருந்திருக்கும்! அதைச் சிங்கள மக்கள் யாராவது ஏற்றுக் கொண்டிருப்பார்களா? ஆங்கிலேயர்கள் எங்களிடம் விட்டுச் சென்ற - ஒரு ஒற்றையாட்சி அரசில் இருந்து தொடங்குவோம். எவ்வாறாயினும், சிங்கள - பவுத்த மேலாதிக்கத்தின் எழுச்சியைக் கருத்தில் கொண்டு, தீவுக்கு முதல் குடியேற்றக்காரர்கள் (போர்த்துகீசியர்கள்) வந்தபோது எங்கள் எல்லைகள் அப்படியே இருந்திருந்தால் சிறுபான்மையினர் நிச்சயமாக நன்றாக இருந்திருப்பார்கள். ஏன் எப்போதும் ஆங்கிலேயர் நமக்கு விட்டுச் சென்ற ஒற்றையாட்சி அரசின் எல்லையில் இருந்து தொடங்க வேண்டும் - வேறு வழி இல்லையா?

*(ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்தக் கட்டுரை* ***Colombo Telegraph*** *என்ற இணையதளத்தில் வெளிவந்தது.*

*அதனை* ***https://www.colombotelegraph.com/index.php/sinhala-buddhism-the-nation-state-of-sri-lanka/*** *என்ற இணைய முகவரியில் படித்துக்கொள்ளலாம்.*

*தமிழாக்கம்: கனடா நக்கீரன்)*

# நீ நீயாக இரு

## (சக்தி ஞானம்மா அவர்களின் ஆன்மீகச் சிந்தனையிலிருந்து)

துள்ளி விளையாடி சூட்சுமப் பொருளாகி
உள்ளத்தை இழுக்குதடா கந்தவேல்
காந்த சக்தி ஒன்று இரும்பை இழுப்பதுபோல்
என் இதயத்தை இழுக்குதடா கந்தவேல்.

நீயாக இருக்கவேண்டும் என்றால் நீ சிறு வயதில் செய்த காரியத்தை நடுத்தர வயதில் செய்ய முடியாமல் இருப்பாய். உனது செயல் மாறிக்கொண்டே இருப்பதைக் கொண்டு மாறாத ஒன்றை நிர்ணயிக்கவோ, மதிப்பீடு செய்யவோ இயலாது.

இதனால்தான் மாறாத நீ, உண்மையில் இருந்து மாறுகின்றபொத உன் செயல் பொய் என்ற குறிப்பிடுகின்றொம். இந்தப் பொய்க்கும், உண்மைக்கும் வித்தியாசம் தெரியாமல் அதில் உழலும் போதுதான் நாம் யார் என்கின்ற உண்மையை மறந்து போகின்றோம். இதனால் பொய்யான செயலுக்கு அடையாளம் தேடுகின்றோம். உண்மையான உங்களை மறந்து போகின்றீர்கள். உங்களை முன்னிலைப்படுத்தாமல் அடுத்தவர்களை பின்பற்றுகின்றீர்கள்.

ஆன்மீகம் என்பது உங்களது உள்ளிருப்பை, உண்மையைச் சார்ந்தது. அதனை மையப்படுத்தும்போது நீங்கள் யாரையும் தேட வேண்டியது இல்லை. நீங்கள் நீங்களாகவே இருங்கள். அப்போதுதான் உங்களை ஏற்றுகொள்ள மற்றவர்கள் முன்வருவார்கள். அதனால்தான் தனித்திரு!, வழித்திரு!, உண்மை அதுதான் உத்தமனே!

அமுத மொழி..........

கடமையைகளை சரிவரச் செய்து, உரிமைகளை பெறுவோம்.
அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம் இவற்றை முன்வைத்து பாடுபடுவோம், உயர்வோம்.
சமுதாயத்தின் கட்டுப்பாடுகள், ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்தின் கட்டுப்பாடுகளாக இருக்கவேண்டும்.
தன்னை அறிந்தவனே சிறந்த அறிவாளி!
உனக்கு நிறைய சோதனைகள் வரும். அவற்றை நீ பொறுத்துக்கொள். வெற்றி காண்பாய்.
போலித்தனம் இல்லாமல் உண்மையாக வாழந்து, மடிபவனின் வாழ்க்கை காலத்தால் அழியாதது.
வெற்றியும். தோல்வியும் வாழ்கையில் சகஜம்.
அதனைப் புரிந்து கொண்டு உழைத்தால மனதில் மகிழச்சி இருந்து கொண்டே இருக்கும்.
செல்வந்தர்கள் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தால் அவர்களால் பல லட்சம் ஏழைகளை காப்பாற்ற முடியும்.
நாம் பிறந்த நாட்டையும், தாய் மண்ணையும், தாய் மொழியையும் நேசித்தால் உயர்வு தானே வரும்.

சமுதாய முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் தேவை என்றாலும், அதன் பலன் வறிய மக்களுக்கு கிடைப்பது அவசியம்.
அழுது பலம்புவதை விட்டு அனைத்தையும் இறைவனிடம் ஒப்படையுங்கள். இந்த உலகை ஆயர்பாடியாகி ஆனந்தமாக ஆடிப்பாடுங்கள். அமைதியடைவீர்கள்.
ஒன்று எல்லாவற்றையும் நோக்கி ஓட முடியாது ஆனால் எல்லாம் ஒன்றை நோக்கி ஓட முடியும். அந்த ஒன்றுதான் பரம் பொருள்.
நாம் அனைவரும் அந்த ஒன்றை நோக்கி ஓடுவோம். (நான் என்றில்லாமல்) நாம் ஆன்மீகவாதிகளாக அன்பை விதைப்போம்.
எங்கிருந்தாலும், எந்த நிலையிலிருந்தாலும், அந்த நிலையில் இருந்தவாறு உண்மையோடு இரு. அன்போடு இரு. தர்மத்தை செய்து கொண்டே இரு! அதுதான் இறை வாழ்க்கை!

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077



ALL DEBT SOLUTIONS CRPLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# தமிழகத்தில் இருந்து என்.எல்.சி நிறுவனத்தை வெளியேற்ற வேண்டும்: அன்புமணி ராமதாஸ்



கடலூரை பாலைவனமாக்கி வரும் என்எல்சிக்கு எதிரான போராட்டத்தில் பாமக ஒருபோதும் பின் வாங்காது என்று அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது குறித்து அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், “என்.எல்.சி நிறுவனத்தின் நிலக்கரி சுரங்கங்களும், விரைவில் செயல்படுத்தப்படவிருக்கும் அவற்றின் விரிவாக்கங்களும் கடலூர் மாவட்டத்தின் அழிவுக்கு வழிகோலிக்கொண்டிருக்கும் நிலையில், மேலும் இரு நிலக்கரித் திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

மொத்தம் 66,000 ஏக்கர் பரப்பளவிலான அந்த நிலக்கரி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால் கடலூர் மாவட்டம் அழிந்துவிடும்.மத்திய அரசு புதிதாக செயல்படுத்தத் துடிக்கும் இரு நிலக்கரித் திட்டங்களில் முதன்மையானது சேத்தியாத்தோப்புக்கு கிழக்கே நிலக்கரித் திட்டம், இரண்டாவது... வீராணம் நிலக்கரித் திட்டம் மற்றும் பாளையம் கோட்டை நிலக்கரித் திட்டம் ஆகும். இந்த இரண்டாவது திட்டம் சிதம்பரம், புவனகிரி, காட்டுமன்னார் கோயில் வட்டங்களில் உள்ள 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் செயல்படுத்தப்படவுள்ளது.

மொத்தம் 45,000 ஏக்கரில் இத்திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது. இது குறித்த விவரங்களை கடந்த 29.01.2023ம் நாள் வெளியிட்ட அறிக்கையில் விரிவாக விளக்கியிருந்தேன். அத்துடன் இத்திட்டத்தை மத்திய அரசு கைவிட வேண்டும்; இத்திட்டம் குறித்து ஆய்வு நடத்துவதற்காக அளிக்கப்பட்ட அனுமதியை தமிழக அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தியிருந்தேன்.மற்றொரு திட்டமான சேத்தியாத்தோப்புக்கு கிழக்கே நிலக்கரித் திட்டம் (East of Sethiathope Lignite Block) குறித்த விவரங்கள் இப்போது தான் வெளியாகியுள்ளன. கடலூர் மாவட்டம் புவனகிரி வட்டத்தில் உள்ள அம்பாபுரம், பின்னலூர், மஞ்சக்கொல்லை, தலைக்குளம், நத்தமேடு, வடக்குத்திட்டை, தெற்குத் திட்டை, கிருஷ்ணாபுரம், வண்டுராயன்பட்டு, பூதவராயன்பேட்டை உள்ளிட்ட 20 கிராமங்களில் 21,000 ஏக்கர் பரப்பளவில் இது செயல்படுத்தப்படவுள்ளது. 84.41 சதுர கி.மீ பரப்பளவில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திலிருந்து ஆண்டுக்கு பல லட்சம் டன் நிலக்கரி கிடைக்கும்.

இத்துடன் தஞ்சாவூர் மாவட்டம் மைக்கேல்பட்டி, வடசேரி ஆகிய இடங்களிலும் இரு நிலக்கரி சுரங்கங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இந்த விவரங்களை மக்களவையில் நிலக்கரி அமைச்சர் பிரகலாத் ஜோஷியே உறுதி செய்திருக்கிறார்.சேத்தியாத்தோப்புக்கு கிழக்கே நிலக்கரித் திட்டம் உள்ளிட்ட 3 திட்டங்களுக்குமான ஆய்வுப் பணிகள் ஏற்கனவே ஓரளவு முடிவடைந்து விட்டன. இந்த 3 திட்டங்களும் தனியார் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன. இந்த மூன்று சுரங்கங்களுக்கான ஏலம் கடந்த ஆண்டு நவம்பர் 3ம் தேதி தொடங்கியது. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தான் இந்த ஏலத்தைத் தொடங்கி வைத்தார். ஆனால், அவற்றை ஏலத்தில் எடுப்பதற்கு எந்த நிறுவனமும் முன்வரவில்லை. எனினும், எந்த நேரமும் ஏதேனும் ஓர் நிறுவனம் இவற்றை ஏலத்தில் எடுத்து, நிலக்கரி சுரங்கங்களை அமைக்கும் பணிகளைத் தொடங்கினால், அன்று முதல் கடலூர் மாவட்டத்தின் அழிவு வேகம் அதிகரிக்கத் தொடங்கி விடும்.

கடலூர் மாவட்டத்தில் என்.எல்.சி சுரங்க விரிவாக்கத்திற்காக நிலம் கையகப்படுத்தப்படுவதை எதிர்த்து பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ச்சியான போராட்டத்தை நடத்தி வருகிறது. பா.ம.க. எதற்காக இவ்வளவு தீவிரமாக போராட்டங்களை முன்னெடுக்கிறது? என்பதை பலரும் புரிந்துகொள்ளவில்லை. நிலக்கரி சுரங்க விரிவாக்கம் தடுத்து நிறுத்தப்படாவிட்டால், கடலூர் மாவட்டத்தை யாராலும் காப்பாற்ற முடியாது. நிலக்கரி சுரங்கங்களால் கடலூர் மாவட்டம் எத்தகைய பாதிப்புகளை சந்திக்கும் என்பதை விளக்குகிறேன்.


என்.எல்.சி சுரங்க விரிவாக்கம் மற்றும் மூன்றாவது சுரங்கத்திற்காக கையகப்படுத்தவுள்ள நிலத்தின் பரப்பு 25,000 ஏக்கர். இத்துடன் சேத்தியாத்தோப்புக்கு கிழக்கே நிலக்கரித் திட்டத்திற்காக 21,000 ஏக்கர், வீராணம் நிலக்கரித் திட்டம் மற்றும் பாளையம்கோட்டை நிலக்கரித் திட்டத்திற்காக 45,000 ஏக்கர் என மொத்தம் 91,000 ஏக்கர் பரப்பளவில் அடுத்த சில ஆண்டுகளில் புதிய சுரங்கங்கள் அமைக்கப்பட்டு நிலக்கரி எடுக்கப்படும். நிலக்கரியை பயன்படுத்த புதிய அனல் மின்நிலையங்கள் அமைக்கப்படக்கூடும்.என்.எல்.சி நிறுவனம் தொடங்கப்பட்டது முதல் இன்று வரையிலான 66 ஆண்டுகளில் பயன்பாட்டில் இருந்த, பயன்பாட்டில் உள்ள நிலக்கரி சுரங்கங்களின் மொத்தப்பரப்பு 37,256 ஏக்கர் மட்டும் தான். ஆனால், இந்தப் பரப்பிலிருந்து நிலக்கரி தோண்டி எடுக்கப்பட்டதால் ஏற்பட்ட பாதிப்புகளின் காரணமாக கடலூர் மாவட்டம் வாழத்தகுதியற்ற மாவட்டமாக மாறிவிட்டது.

நிலக்கரி சுரங்கங்களால் ஒட்டுமொத்த கடலூர் மாவட்டமும் பாதிக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்றத்தில் மத்திய அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது.37,256 ஏக்கரில் நிலக்கரி எடுக்கப்பட்டதன் விளைவாக கடலூர் மாவட்டம் கிட்டத்தட்ட அழிவின் விளிம்பிற்கு சென்று விட்ட நிலையில், அதைவிட கிட்டத்தட்ட 3 மடங்கான 91,000 ஏக்கரில் நிலக்கரி சுரங்கங்கள் அமைக்கப்பட்டால் கடலூர் மாவட்டம் என்னவாகும்? என்பதை நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது. என்.எல்.சியும், தனியாரும் போட்டிப்போட்டுக் கொண்டு பூமியை பிளந்து நிலக்கரி வளத்தைக் கொள்ளையடித்தால் கடலூர் மாவட்டம் வெகுவிரைவில் அழிந்து விடும். ஆனால், தமிழக அரசுக்கு அத்தகைய பதற்றமும், கவலையும் கிஞ்சிற்றும் இல்லை.

அதனால் தான் கடலூர் மாவட்டத்திலும், தமிழகத்தின் பிற பகுதிகளிலும் நிலக்கரி வளத்தை கண்டுபிடிப்பதற்கான ஆய்வு நடத்த அனுமதி கோரப்பட்டால், கண்களை மூடிக் கொண்டு அனுமதி வழங்கிக் கொண்டிருக்கிறது. விவசாயிகளின் வாழ்வாதாரம் குறித்து எந்தக் கவலையும்படாமல் அவர்களின் நிலங்களை பறித்து என்.எல்.சிக்கு தாரை வார்த்துக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் பேரழிவுக்கு தமிழக அரசும் துணை போய்க்கொண்டிருக்கிறது.என்.எல்.சியாலும், பிற தனியார் நிறுவனங்களின் நிலக்கரி சுரங்களினாலும் கடலூர் மாவட்டத்திற்கு மட்டுமின்றி, அதை சுற்றியுள்ள மாவட்டங்களுக்கும் மிக மோசமான பாதிப்புகள் ஏற்படும் என்பதை உணர்ந்ததால் தான் என்.எல்.சி நிறுவனத்திற்கு எதிராக தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகிறேன். பாட்டாளி மக்கள் கட்சி மேற்கொண்டிருப்பது மக்களைக் காப்பதற்கான போராட்டம் என்பதை தமிழக அரசு இனியாவது உணர்ந்து கொள்ள வேண்டும்; அதன் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும்.

நிலக்கரி சுரங்கங்கள் அமைப்பதற்காக ஓர் அடி நிலத்தைக் கூட கையகப்படுத்தித் தர மாட்டோம் என்பதை கொள்கை முடிவாக அறிவிக்க வேண்டும். அத்துடன் என்.எல்.சி நிறுவனத்தை தமிழகத்திலிருந்து வெளியேற்றுவதற்கான சட்ட மற்றும் அரசியல் நடவடிக்கைகளை தொடங்க வேண்டும்.கடலூர் மாவட்டத்தை பாலைவனமாக்கி வரும் என்.எல்.சி நிறுவனத்தை வெளியேற்ற வேண்டும் என்ற உன்னத நோக்கத்திற்காக போராட்டங்களைத் தொடங்கியுள்ள பாட்டாளி மக்கள் கட்சி முன்வைத்த காலை ஒருபோதும் பின்வைக்காது. கடலூர் மாவட்ட மக்களையும், மண்ணையும் காப்பதற்கான போரில் எந்த எல்லைக்கும் செல்லவும், எத்தகைய தியாகத்தைச் செய்யவும் பாட்டாளி மக்கள் கட்சி தயங்காது. என்.எல்.சி இல்லாத கடலூர் மாவட்டம் தான் பா.ம.க.வின் நோக்கம். அதை பா.ம.க. அடைந்தே தீரும்.” இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# இனிவரும் தேர்தல்களில் திமுகவை வீழ்த்த ஜெயலலிதா தொண்டர்கள் ஓரணியில் வர வேண்டும்: டிடிவி.தினகரன் வலியுறுத்தல்



அடுத்தாண்டு நடைபெறவுள்ள எம்.பி. தேர்தல் உள்ளிட்ட தேர்தல்களில் திமுகவை வீழ்த்த ஜெயலலிதாவின் உண்மை தொண்டர்கள் ஓரணியில் திரள வேண்டும் என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் தெரிவித்தார்.அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் 6ம் ஆண்டு தொடக்கவிழா நேற்று கொண்டாடப்பட்டது.

இதையொட்டி சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடந்த விழாவில் பங்கேற்க வந்த அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரனுக்கு கட்சி நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.அதையடுத்து கட்சி அலுவலக வளாகத்தில் உள்ள பிரமாண்ட கொடிக் கம்பத்தில் கட்சி கொடியை டிடிவி.தினகரன் ஏற்றிவைத்தார். பின்னர் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா உருவப்படங்களுக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, கட்சி நிர்வாகிகள், தொண்டர்களுக்கு இனிப்பு வழங்கினார்.பின்னர் செய்தியாளர்களிடம் டிடிவி தினகரன் கூறியதாவது: திமுக ஆட்சிக்கு வந்ததும் முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் புகார்களை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைத்து, விசாரித்து அனைவரையும் சிறையில் தள்ளுவோம் என்றனர்.

மாறாக முன்னாள்அமைச்சர்கள் திமுகவுடன் இணக்கமாகச் செல்கின்றனர். பழனிசாமி தலைமையில் அதிமுக பிராந்திய, வட்டாரக் கட்சியாகிவிட்டது. அதிமுக பலவீனமாக இருந்ததால்தான் 20 மாத ஆட்சியில் பொதுமக்களிடம் கெட்ட பெயர் எடுத்துள்ள நிலையிலும் திமுகவால் ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் வெற்றிபெற முடிந்தது.இனிவரும் எம்.பி. தேர்தல் உள்ளிட்ட தேர்தல்களில் திமுகவை வீழ்த்த ஜெயலலிதாவின் உண்மைத் தொண்டர்கள், திமுகவை வீழ்த்த நினைக்கும் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும். பழனிசாமி செய்த துரோகத்துக்கு பதில் சொல்லியாக வேண்டும். அவரை எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆன்மா ஒருபோதும் மன்னிக்காது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# திருநங்கைகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சென்னை போலீஸார் விழிப்புணர்வு ஆலோசனை

திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துநல்வழிப்படுத்தி, நல்ல முறையில் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையச் செய்யவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி போலீஸ் அதிகாரிகளுக்குக் காவல் ஆணையர் சங்கர் ஜிவால் உத்தரவிட்டார்.இதையடுத்து கூடுதல் காவல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்ஹா பல்வேறு திருநங்கை அமைப்புகளான தோழி, சினேகிதி, சகோதரன், நிறங்கள் உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகளைக் காவல் ஆணையர் அலுவலகம் அழைத்து அவர்களுடன் கலந்தாலோசித்தார்.

அப்போது, சென்னை பெருநகரில் வசிக்கும் திருநங்கைகள் குற்றச் செயல்களில் ஈடுபடாமல், நல்ல முறையில்வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவும், சமூகத்தில்சிறந்த அந்தஸ்துடன் திகழவும், திருநங்கைகளுக்கானவாழ்வாதாரம், மாற்றுத் தொழிலுக்கான வேலைவாய்ப்புகள் குறித்தும் அறிவுரைகள் வழங்கப்பட்டன. அனைத்து துறையிலும் சிறந்து விளங்கி வரும் திருநங்கைகளுக்கு அரசுத் துறைகளிலும் வேலை வாய்ப்புக்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறித்து எடுத்துரைக்கப்பட்டது. அதுமட்டும் அல்லாமல் திருநங்கைகள் கல்வியிலும், அனைத்து துறையிலும் சிறந்து விளங்க காவல் துறையினரும், சமூக ஆர்வலர்களும், திருநங்கைகளின் பிரதிநிதிகளும் இணைந்து செயல்பட ஆலோசனைகள் வழங்கப்பட்டன.


24 மணி நேர
தமிழ் வானொலி
24 Hours Tamil Radio
தாளம்
FM 88.9 HD3
Serving GTA & Beyond
416-441-4100
thaalamfmhd
Thaalam FM
www.thaalam.fm
FM 88.9 HD3 அலைவரிசையில் GTA தாண்டியும்
துல்லியமாக ஒலிக்கிறது 24 மணி நேர தமிழ் வானொலி தாளம்.
FM 105.9 அலைவரிசையில் மாலை 6 மணி முதல்
காலை 6 மணி வரை ஒலிக்கிறது தாளம் தமிழ்.
தாளம் தமிழ்
FM 105.9
6:00pm to 6:00am


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோவில்கள் 1040

## செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில் மட்டக்களப்பு

ஈழமெங்கும் கண்ணகி அம்மன் கோயில்கள் காணப்படுகின்றன. இக் கோயில்கள் யாவற்றிலும் ஒரேமாதிரியான சடங்குமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை. நாட்டு வழமை, ஆதிதொட்டுக் கடைப்பிடிக்கப்படும் பாரம்பரிய விதிமுறைகள் இவற்றின் அடிப்படையிலேயே கண்ணகி கோயில் சடங்குகள் ஊருக்கு ஊர் வேறு பட்டுக் காணப்படும். செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில் பொறுப்பை ஏற்பவர் குரு சீடர் பரம்பரையில் பயிற்றப்பட்டுப் பின்னரே கோயில் சடங்குகளை நடத்தும் தகுதியைப் பெறுகின்றார். கட்டாடியாரின் பரம்பரையில் உள்ளவரும், ஆசாரசீலரும், கல்வியறிவும், கோயில் சடங்கு விதிமுறைகள் தெரிந்தவரும், பரம்பரை வாரிசுமாக உள்ளவரே கோயில் பொறுப்பை ஏற்கத் தகுதி பெறுகின்றார். இவ்வாறு நியமிக்கப்படுமுன் தனது வம்சத்திலுள்ள பெரியவர்களது ஆலோசனை, அனுமதியுடன், பூசாரியாக நியமிக்கப்படுபவரை தலைமைக் கட்டாடியார் படிகடக்கவைத்து, செட்டிபாளையம் கண்ணகிஅம்மன் கோயிலில் பூசகராகும் தலைமையினை வழங்குவார். கண்ணகி அம்மனுடைய மூலத்தானக் கதவு நிலைக்குரிய படியைக் கடப்பதைப் படிகடத்தல் எனக் குறிப்பிடுவர்.

கோயில் பணிகளைச் செய்யக்கூடிய சகல தகைமைகளும் வாய்ந்தவரைத் தலைமைக் கட்டாடியார், நல்லநாளில் சுபவேளையில் படி கடக்க வைப்பார். படிகடக்க இருப்பவர் விரதமிருந்து, நீராடிப் புத்தாடை புனைந்து, தலைமைக் கட்டாடியாரிடம் சத்தியப்பிரமாணமான வாக்குறுதி கொடுப்பார். அத்தோடு கண்ணகி அம்மனை வழிபட்டு மூலத்தானப் படியில் மடை வைத்துத் தேங்காய் உடைத்து, மூலத்தானத்துக்குள் காலடி வைப்பதே படி கடத்தல் ஆகும். கட்டாடியாருடைய வாரிசுகளுக்கு மட்டுமே செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயிலிலே சடங்கு செய்யும் உரிமையுள்ளது. ஆகம முறைப்படி குருக்கள்மார் ஆசாரி அபிடேகம் செய்வதற்குச் சமமானதாக இச்சடங்கினைக் கொள்ள முடியும். இவ்வாறான சடங்கு வழிபாட்டுமுறையிலிருந்து ஆகமமுறை தழுவிய வழிபாட்டுமுறைக்கு இவ்வாலய நடைமுறைகளை மாற்ற முயற்சிகள் எடுத்தபோதிலும், சிறுதெய்வ வழிபாடான கண்ணகி வழிபாட்டு முறைக்கு, ஆகமமுறை தழுவிய வழிபாட்டு முறை ஏற்றதல்ல என முடிவு செய்யப்பட்டு, சடங்கு முறையே நடைமுறையிலிருந்து வருகின்றது.

இவ்வாலயத்திலே காணப்படும் குளிர்த்திக் குரைச்சிக் காணிக்கை என்பது வேறு ஆலயங்களிலே காணப்படாத வழமையாகும். கண்ணகை அம்மனைக் குளிர்த்தி ஆட்டுவதற்குரிய பானகம் தயாரிக்கப்படும். பால், பழவகைகள், தேன், சர்க்கரை, சீனி, நெய் முதலானவை கொண்டு இப்பானகம் தயாரிக்கப்படும். இப்புனித பானகம் அடியார்களுக்கு வழங்கப்படும். இப்பானகத்தினைப் பெறுவோர் காணிக்கைப்பணத்தைச் சில்லறையாக பானகம் உள்ள பாத்திரத்தினுள் போடுவர். இதனையே குளிர்த்திக் குரைச்சிக் காணிக்கை என அழைப்பர்.

செட்டிபாளையம் கண்ணகை அம்மன் கோவிலுக்குரிய ஆதனங்களாகப் பல காணிகள் காணப்படுகின்றன. அத்தோடு காணி விற்பனை, உண்டியற் காணிக்கை, பிள்ளை விற்பனவு, மடிப்பிச்சைநெல், அடையாளக் காணிக்கை, நேர்த்திக் கடன்பொருட்கள், நேர்த்திக் கடனால் கிடைக்கும் ஆடு, மாடு, கோழி ஆகியவற்றின் பெறுமதி என நிறைந்த வருமானத்தை இக்கோவில் பெறுகின்றது. கண்ணகி அம்மனைத் தாயாகக் கருதி தமது குறைகளைத் தீர்க்கவேண்டியும், குறைகள் தீர்ந்து நிறைவு பெற்றோரும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுமுகமாகப் பல்வேறு அடையாளப் பொருட்களைக் கொடுக்கின்றனர். கண்மணி, கண்மடல், காற்படம், வயிறு, கை, கால், மார்பு, பிள்ளையும் தொட்டிலும், நாகபடம், நாகம், தந்தம் என்பன நேர்க்கடனால் கிடைக்கப்பெறும் பொருட்களாகும். இப்பொருட்கள் செம்பு, வெள்ளி, தங்கம் என்பவற்றால் அமையும்.இவ்வாலயத்திலே காணப்படுகின்ற வெண்கல உடுக்கு அபூர்வமானதும், அற்புத சக்தி கொண்டதாகவும் காணப்படுகின்றது. இவ்வுடுக்கின் குற்றி வெண்கலத்தினால் வார்க்கப்பட்டுள்ளது. அது சுமார் ஒன்றரை அடி உயரமும், 9 அங்குல விட்டமும் கொண்டது. வாய் வளையமாக இரண்டு சிலம்புகள் அமைந்துள்ளன. குற்றியின் நடுவிலும் ஒரு சிலம்பு காணப்படுகின்றது. அத்தோடு பன்னிரண்டு சிறிய சிலம்புகளும் தொங்கவிடப்பட்டுள்ளன. உடுக்கு வைக்கும் யந்திரம் கீறப்பட்ட குற்றியிலே முறைப்படி இவ்வுடுக்கு வைக்கப்பட்ட பின்னர் இதில் எழும் ஓசை அதிசயமானதென்பர். இவ்வுடுக்கு ஆண்டிலே மூன்று தடவைகள் மட்டுமே அடிக்கப்படும். வருடாந்தச் சடங்கு நடக்கும் வேளையில், கலியாணச்சடங்கிலன்று மூன்றாம் மண்டபத்துள்ளும், பூரண கும்பச் சடங்கிலன்றும், திங்கட்கிழமை பகற்சடங்கிலன்றும், 4ஆம் மண்டபத்துள் கலியாணக்காலைச் சுற்றி அடிக்கப்படும். தீரா நோய்களும், பல்வினைகளும் இந்த உடுக்கின் அற்புத சக்தியால் நீங்கியுள்ளதாக அடியவர்கள் கூறுவர்.

செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயிலில் வருடாந்தச் சடங்கு ஆரம்பித்தால், ஊர்க்கட்டுப்பாட்டிற்கு அனைவரும் கட்டுபட்டு நடப்பது பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. கண்ணகி அம்மனுடைய கதவு திறந்தால் மச்சம். மாமிசம் புசிப்பது, மதுபானம் குடிப்பது, மீன் பிடிக்கச் செல்வது முதலானவை நிறுத்தப்படும். அறுவடை, சூடறுப்பு நடைபெறமாட்டாது. மாவிடித்தல், மஞ்சள் அரைத்தல் ஆகியவை நடைபெறாது. திருமணம், பூப்பநீராட்டுவிழா என்பனவும் நடைபெறுவதில்லை. மரணச் சடங்குகள் மிக அமைதியாக, அடக்கமாக இடம்பெறும். ஊரெங்கும் புனிதம் பேணப்படும். இவ்வாறான ஒழுங்கு முறையை இவ்வூர் மக்கள் பயபக்தியுடன் கடைப்பிடிப்பர். செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில், மக்களுடைய ஆன்மீக முன்னேற்றத்திற்கும், கலை கலாச்சார விழிப்பணர்வை ஏற்படுத்துவதிலும் பெரும்பங்கு வகித்து வருகின்றது. மரபுக்கலைகளான கூத்து, வசந்தன், கரகம், காவடியாட்டம் என்பனவும் இக்கோயிலின் செயற்பாடுகள்மூலம் பேணப்படுகின்றது. மடிப்பிச்சை மூலம் கிடைக்கும் நெல்லின் ஒரு பகுதியை மாணவர் இல்லம் மற்றும் அன்னதான சபைகளுக்குக் கொடுத்து உதவுகின்றனர்.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் அறிவிக்கும் நீதிகளுள் ஒன்றாகிய, "கற்புடை மகளிரை உயர்ந்தோர் போற்றிப் புகழ்வது இயல்பு" என்பதற்கிணங்க, கண்ணகியைத் தெய்வமாகப்போற்றி வணங்கும் மரபு காணப்படுகின்றது. வீரபத்தினியாகிய கண்ணகி நிதி கேட்டு நின்ற வேளையிலும், "பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே ஆமாகில் ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும்." என வஞ்சினம் கொண்டு சூளுரைத்த வேளையிலும், தாய்மைக்கே உரிய கனிவோடு, மதுரையை அழிக்க ஓங்கி உயர்ந்த தீச்சுவாலைகளை நோக்கி,

**"பார்ப்பார். அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர்**
**மூத்தோர், குழவி எனும் இவரைக் கைவிட்டு**
**தீத்திறத்தோர் பக்கமே சேர்க"** என்று

வஞ்சினத்திலும் கருணைவடிவமாக, நீதி பேணிய தாயாக விளங்கியவள் கண்ணகி. அத் தாயைப் பல்வேறு இனத்தவர்களும், நாட்டவர்களும் தமக்கே உரிய சடங்குமுறைகளோடு போற்றி வழிபாடியற்றி வருகின்றனர். வீரபத்தினியாகிய கண்ணகி, தனக்குச் சிலைநாட்டிச் சிறப்புச் செய்த மன்னனை, "செங்குட்டுவன் நீடுழி வாழ்க" என்று போற்றிய கருணையுடையவள். இவ்வாறான கருணைத்தெய்வம், தன்னைத் தாயாக எண்ணி வணங்குவோர்க்கு சகல வளங்களையும் நல்குவாள் என்பதில் ஐயமில்லை.

**- வளரும்...**




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இவ்வார ராசிபலன்

**17-03-2023 வெள்ளி தொடக்கம் 23-03-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** பெத்தவங்களோட ஆசி கிடைக்கும் வாரம். வீடு தேடி வெற்றி வரும். மருத்துவச் செலவு உண்டு. பொன் பொருள் சேரும். பணவரவு உயரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி உயர்வு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கல்வியில் ஆர்வம் கூடும். வருமானம் திருப்தி தரும். புதிய நட்பு உருவாகும். பழையக்கடன் தீரும். குதூகலம் சேரும். எதிலும் கவனமாக செயல்பட வேண்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். முயற்சிகள் பலன் தரும். காரிய வெற்றி கிட்டும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். ஆடை, அணிகலன் சேரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு தரும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் நன்மை தரும். வெகுமதி கூடும். குதூகலமான மனநிலை காணப்படும். ஆனந்தம் பெருகும். செயலில் துணிவு கூடும். குடும்ப உறவு பலப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல்தெய்வம், அதிர்ஷ்ட எண்: *6,8,1,2*
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,H




**ரிஷபம்:** அருளும், பொருளும் சேரும் வாரம். வெகுமதி பெருகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் முடிவுகள் உண்டு. அரசியலில் ஆதாயம் உண்டு. நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். நினைத்த செயலை சாதித்துக் காட்டுவீர்கள். பொதுவி'யங்களில் நாட்டம் ஏற்படும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிந்த குடும்பம் ஒன்று சேரும். கடன் சுமையில் இருந்து விடுபடுவீர்கள். நண்பர்கள் உங்களை தேடி வருவார்கள். வாய்ப்புக்கள் பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு உயரும். பழைய கடன் அடையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. பணப்பற்றாக்குறை நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: *1,4,2,5*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**மிதுனம்:** பாசமும், நேசமும் பெருகும் வாரம். மனக்குழப்பங்கள் தீரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம்புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். எதிர்ப்புகள் குறையும். ஆதாயம் பெருகும். உடல்நலம் சிறக்கும். தேக பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். நீண்ட நாளைய நோய் விலகும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தொட்ட காரியம் ஜெயமாகும். பொருளாதார நிலை உயரும். திருமண பேச்சு கைகூடி வரும். மாணவர்களுக்கு சாதகமான காலம். தொழிலாளர்களுக்கு மனநிறைவு ஏற்படும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. தொழில் முயற்சி வெற்றி தரும். குடும்பத்தில் அமைதி உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். பங்குசந்தையில் லாபம் தரும். குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கடன்சுமை குறையும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: *4,3,1,5*
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,P




**கடகம்:** வளமும், ஜெயமும் கிடைக்கும் வாரம். பிரார்த்தனை பலன் கொடுக்கும். கல்வியில் மேன்மை உண்டு. உடல் பொலிவு கூடும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். சுபகாரியம் இல்லத்தில் இனிதே நடந்தேறும். மனதில் மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். வங்கி சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் தேவை. எதிலும் கவனமாக செயல்பட வேண்டும். அலைச்சல் அதிகரிக்கும். ஆரோக்கியம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். வேலை வாய்ப்புக் கூடும். குடும்ப பிரச்சனைகள் தீரும். அற்புத வாய்ப்பு கிட்டும். உடல்வலியிலிருந்து விடுதலை அடைவீர்கள். மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகளிடத்தில் அன்பு அதிகரிக்கும். பொன்னான நேரம் உங்களை வந்து அடையும். நினைத்த காரியங்களில் வெற்றி நிகழும். இனிதான செய்திகள் கூடி வரும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். நாவடக்கம் தேவை. மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். பங்குத்தொழில் பணம் தரும். முற்போக்கு சிந்தனை வரும். சேமிப்பு அதிகமாகும். சீரான வாழ்வு அமையும். தாய்வழி உறவில் கவனம் தேவை. கலைத்தொழிலில் கவனம் தேவை. உணவுத்தொழில் உயர்வு தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். சேமிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: *8,4,3,1*
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Q




**சிம்மம்:** நிதர்சனமான லாபம் கிடைக்கும் வாரம். உன்னதமான காலம். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வணிகத்தொழில் விரிவடையும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். நன்மைகள் பெருகி வரும். பொருளாதார வாய்ப்பு தேடி வரும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். எதிர்மறையான எண்ணங்கள் விலகும். மனஅமைதி உண்டாகும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். மனக்கசப்பு வந்து நீங்கும். சில வாய்ப்புகள் தேடி வரும். தொழிலில் அபிவிருத்தி அடையும். கணவன், மனைவி உறவு



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377

மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. அரசு வழியில் ஆதாயம் உண்டு. துன்பங்கள் அகலும். தீய எண்ணம் விலகும். விளையாட்டில் கவனம் தேவை. மாற்று யோசனை பலன் தரும். பங்குச்சந்தை கவனம் தேவை. கடன் வாங்க நேரிடும். மனநிம்மதி கூடும். மருத்துவச் செலவு குறையும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். காதல் கண்ணியம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்மதேவன், அதிர்ஷ்ட எண்: *9,2,1,4*
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J




**கன்னி:** மரபை மீறி பேசிய உறவு பாராட்டும் வாரம். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். ஆண்களின் அதிகாரம் உயரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. உத்தியோக இடமாற்றம் உண்டு. பயணத்தால் பணவரவு உண்டு. பிள்ளைகள் எண்ணம் பூர்த்தியாகும். உடல்நலத்தில் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். வார்த்தைகளில் கவனம் தேவை. வாய்ப்புகள் சாதகமாக அமையும். தொழில் வளர்ச்சி கூடும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். பருப்பு தானம் பாவம் போக்கும். நிம்மதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் தரும். செய்தொழில் சிறக்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். கொடுக்கல், வாங்கல் சுமூக நிலை ஏற்படும். திருமண பாக்கியம் கைகூடி வரும். புதிய முயற்சியை தள்ளிப் போடுங்கள். தெம்பும், தைரியமும் கூடும். தாராளமான வருமானம் உண்டு. பொதுப்பிரச்சனைகள் விலகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீஹய்கரீவர், அதிர்ஷ்ட எண்: *3,1,9,2*
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,N




**துலாம்:** நியாயமான ஆசைகள் நிறைவேறும் வாரம். கையிருப்பு கரையும். வெகுமதி கூடும். தொழில் வாய்ப்புகள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் ஏற்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். தங்க நகைகள் சேரும். கடன் தொல்லை நீங்கும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். புதிய முயற்சிகள் பலன் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். புகழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். ஞாபக திறன் கூடும். சுபகாரியம் கைகூடும். குடும்பத்தில் அமைதி உண்டு. நண்பர்கள் உதவி கிட்டும். தொழில்முயற்சி வெற்றி தரும். பணவரவு உண்டு. காரியங்களில் வெற்றி காண்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதிதேவி, அதிர்ஷ்ட எண்: *5,1,3,2*
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,W




**விருச்சிகம்:** செல்வமும், புகழும் கிடைக்கும் வாரம். பழையக் கடன் வசூலாகும். உறவினர் வருகை உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல்நலனில் அக்கறை தேவை. அன்னதானம் ஆரோக்கியம் தரும். குதூகலமான காலம். அன்னிய தேச பயணம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். காரியங்கள் வெற்றி முகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். வழிபாடு மாற்றம் தரும். நண்பர்களால் மதிப்பு உயரும். பணியில் இடமாற்றம் தேவை. வாழ்க்கை தரம் உயரும். பேச்சில் கவனம் தேவை. வரவுகள் திருப்தி தரும். நினைத்த விஷயம் நிறைவேறும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். உதவிகள் குவியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: *6,4,2,1*
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**தனுசு:** பொறுப்பும், சிறப்பும் சேரும் வாரம். தொல்லைகள் ஒழியும். கூட்டுப்பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். பணவரவு பெருகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். தொழிலில் கவனம் தேவை. பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். நிம்மதியான காலம். விரயங்கள் கூடும். மருத்துவச் செலவுகள் குறையும். விவேகமான பேச்சுக்களால் தொல்லைகள் அகலும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி கெடும். ஆண்களின் அதிகாரம் உயரும். சாதகமான வாய்ப்பு அமையும். வாகன மாற்றம் ஏற்படும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *9,7,1,5*
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,X

***(தொடர்ச்சி 29 பக்கம்)***




# யார் இவர்?

கடந்த 10-03-2023 வெள்ளிக்கிழமை அன்று கனடாவிலன் ரொறன்ரோ மாநகரிலிருந்து ஒரு இலக்கிய நிகழ்வு உலகின் பல நாடுகளிலும் வாழும் கலை இலக்கிய நண்பர்கள் கலந்து கொண்ட ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் மெய்நிகர் வழி எழுத்தாளர் அரங்கம் -07 இல் கனடாவில் மட்டுமல்ல இணையவழி ஊடாக உலகெங்கும் வெள்ளி தோறும் விரிப்புடன் விரியும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர். நாகமணி லோகேந்திரலிங்கம் (மலையன்பன்) அவர்களின் உரை இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வில் உலகின் பல்வேறு பாகங்களில் இருந்தும் பலர் கலந்துகொண்டு நிகழ்வினைச் சிறப்பித்திருந்தார்கள். நானும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள மிகவும் ஆர்வமாக இருந்தேன். ஆனாலும் காலம் கைகொடுக்காமையினால் கலந்துகொள்ள முடியாமற் போய்விட்டது. எனினும் இணையத்தின் இணையில்லாச் செயற்பாட்டால் அன்றைய தினம் நடந்த அனைத்தையும் பார்ப்பதற்குரிய வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டேன். அப்பதிவினை நான் கேட்டதும் உடனடியாக அனுப்பிவைத்த திரு. லோகேந்திரலிங்கம் அண்ணாவிற்கு எனது மனமார்ந்த நன்றியையும் கூறிக்கொண்டு அன்றைய நிகழ்வின் மூலம் நேற்றுவரை இந்த பத்திரிகை ஆசிரியரைப்பற்றி அறியாது இருந்து இன்று அறிந்து கொண்ட பல விடயங்களில் ஒரு சில விடயங்களை இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

அன்றைய நிகழ்வில் இந்த உதயன் பத்திரிகை ஆசிரியரான லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது சிறுவயது வாழ்க்கையைப் பற்றி குறிப்பிடும் பொழுது மலைநாடான பதுளையில் பிறந்து தனது இளமைக் காலத்தில் 6ம் வகுப்பு வரை இலங்கையின் ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள பதுளை ஊவாக் கல்லூரியில்பயின்று அங்கு சிறுவனாக இருந்த பொழுதே தனது தந்தையாருடன் சேர்ந்து சொற்பொழிவுகளுக்குச் சென்றிருப்பதாகவும் அதன்காரணமாக தமிழ் மொழியிலுள்ள பல நல்ல விடயங்களைக் கேட்கும் வாய்ப்பு அன்றே தனக்குக் கிடைத்ததாகவும் கூறிய அவர் ஏழாம் வகுப்பிற்கு பின்னரான பள்ளிவாழ்க்கை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் தொடர்ந்ததாகவும் அங்கு கல்வியில் குறிப்பாக கணிதம் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி ஆகிய பாடங்களில் நன்கு தேர்ச்சி பெற்றதோடு அல்லாமல் அவருக்கு கலை நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் சிறந்த வாய்ப்புக்கள் பல கிடைத்ததாகவும் கூறினார். அதன் பிற்பாடு தனது கல்விச் செயற்பாடு யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் தொடர்ந்ததாகவும் அங்கும் தமிழ் மொழி மற்றும் ஆங்கிலம் கணிதம் ஆகிய பாடங்களில் தனக்கு மிகுந்த ஆர்வத்தை உண்டாக்கும் வகையில் அங்கிருந்த ஆசிரியர்கள் பலர் பக்க பலமாக இருந்ததாகவும் அதனைத் தொடர்ந்து தொழிலநுட்ப கற்கைக்காக யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூர்ரிக்கும் மொறட்டுவவில் அமைந்துள்ள கட்டுப்பத்தைக்கும் அனுமதி பெற்றுச் சென்றதாகவும் அதனைத் தொடர்ந்து எழுத்துலகில் புகுந்து கொண்டு. புதுக்கவிதையில் அதிக நாட்டம் கொண்டு சிரித்திரன் போன்ற சஞ்சிகைகளில் தொடர்ந்து எழுதி வந்ததாகவும் தெரிவித்தார். தொடர்ந்து கொழும்பிற்குச் சென்று அங்கும் பின்பு கல்முனையில் தனது தொழில் நிமிர்த்தம் சிறிது காலம் வசிக்க நேர்ந்ததாகவும் அங்கெல்லாம் இருந்த காலங்களில் தனக்கு கலை இலக்கிய ஈடுபாடு பல வகையிலும் ஏற்பட்டதாகவும் கூறிய அவர் ஒவ்வொரு இடங்களிலும் தனக்குக் கிடைத்த இலக்கிய அனுபவங்களைப் பற்றியும் தொடர்ந்து கூறிச்சென்றார்.

அவர் கொழும்பில் உயர் கல்வியிலும் பயிற்சியிலும் ஈடுபட்டிருந்த போது. அங்கு இலக்கிய ஆர்வமானது கட்டுப்பெத்தயில் இன்னும் மெருகு ஏறியதாகவும் அதற்கு கவிஞர் ஈழவாணனின் தொடர்பும் அவருடன் சேர்ந்து அவர் வெளியிட்ட "அக்னி" வெளியீட்டுக் குழுவுடன் இணைந்து செயற்பட்டமையும் ஒரு நல்ல எடுத்துக்காட்டு எனவும் கூறியவர் அதனைத்தொடர்ந்து கல்முனையில் பணியாற்றிய போதும் "கீற்று" என்னும் இதழுக்கு கல்லூரான் என்ற பெயரில் எழுதி வந்த கவிஞர் ஒருவரோடு சேரந்து இணை ஆசிரியராக பணியாற்றி இருந்ததையும் குறிப்பிட்ட திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் அன்றைய காலத்தில் ஈழத்தில் மிகப் பிரசித்தி பெற்ற எழுத்தாளர்களாகிய டானியல், டொமினிக் ஜீவா, புதுவை இரத்தினதுரை போன்றோரின் நடப்பிற்கு உரியவராக இருந்ததையும் கூறி அவர்களுடனான நினைவுகளையும் பகிர்ந்து கொண்டார். அத்தோடு தனக்கிருந்த இலக்கிய ஆர்வத்தினால் தானும் கவிதைகள் மற்றும் சிறுகதைகளை எழுதி பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியிட்டதாகவும் குறிப்பிட்டார்.

இந்தவகையில் ஈழத்தில் வாழ்ந்தபொழுது புதுக்கவிதைகளால் ஈர்க்கப்பட்ட இவர் 1973 இல் "செம்மலர்கள்" இலக்கிய வட்டத்தின் பழைய பெரும் எழுத்தாளர்களோடு சேர்ந்து செயற்பட்டதோடு 1974 இல் "போலிகள்" என்னும் தனது புதுக்கவிதைத் தொகுதியை வெளியிட்டதாகவும் "மதிக்கப்படவேண்டிய மீறல்கள்" என்ற சிறுகதைய தனது முதலாவது சிறுகதையாக எழுதி "முரசொலி" பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டிக்கு அனுப்பி பரிசு பெற்றதாகவும் தெரிவிததார்.

மேலும் எமது நாட்டுச் சூழல் காரணமாக 1990களில் கனடா நாட்டிற்கு வந்த இவர் இலக்கியம், நாடகம், பத்திரிகைத்துறை போன்றவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதாகவும் 1993 இல் கனடாவில் தொடக்கப்பட்ட "கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆரம்ப கால உறுப்பினர்களோடு சேர்ந்து செயற்பட்டதோடு இன்று வரை அதன் செயற்பாடுகளில் முக்கியமான ஒருவராக இருந்து செயற்பட்டு வருவதாகவும் கூறினார். இவரது இந்தக் கூற்றினை அங்கு கலந்திருந்த பலரும் கூறி இவரைப் பாராட்டியதோடு கனடாவில் 26 வருடங்களாகத் தொடர்ச்சியாக இயங்கி வரும் உதயன் பத்திரிகையைத் தனி ஒருவராக இருந்து இவர் செயற்பட்டுவரும் திறத்தினையும் அங்கிருந்த பலர் போற்றினர்.

மேலும் இந்தப் பத்திரிகைத் துறைக்குள் தான் செயற்படத் தொடங்கியபின் பத்திரிகையில் தான் எழுதும் தனது எழுத்துக்களாலும் கூட மிகுந்த பல மனவேதனைகளையும், அதேவேளை பல இடர்களையும் சந்தித்ததாகவும் எனினும் அவற்றை எல்லாம் கடந்து தொடர்ந்தும் செவ்வனே செயற்பட்டுவருவதால் மகிழ்ச்சி அடைவதாகவும் கூறினார். இவர் தன்னைப்பற்றி இப்படியாகக் கூறி முடித்த வேளையில், தொடர்ந்தும் பலர் அவரைப் பற்றி அறிந்த பல விடயங்களை எடுத்துச்சொன்னார்கள்.

"பத்திரிகைத்துறையிலோ எழுத்துத்துறையிலோ அவருக்கு இருக்கும் நல்ல பெயரைவிட ஒரு நல்ல உள்ளம் கொண்ட மனிதராக அவர் திகழ்கின்றார்" என்பதையும் பலர் கூறினர்.

மறைந்திருக்கும் கலைஞர்களைவெளிக்கொண்டு வருவதும், அவர்களை ஊக்கிவிப்பதும், இலங்கை இந்திய எழுத்தாளர்களை, கலைஞர்களை இணைக்க ஒரு உறவுப்பாலமாகச் செயற்படுவதும், கலைஞர்களைப் போற்றிக் கௌரவிப்பதும், அவர்களுக்காகத் தனது நேரத்தையும் பொருளையும் தியாகம் செய்வதும், மற்றும் ஈழத்தில் இடர்படுவோருக்கு குறிப்பாக கல்விச் செயற்பாடுகளில் கடினமான சவால்களைச் சந்திக்கும் சிறுவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச்செய்வது அவர்களை ஊக்கிவிப்பது எனப் பல்வேறுபட்ட அவரின் நற்குணங்கள் பற்றி அங்கு பலர் பேசினர். அன்றைய அந்த நிகழ்வில் பல பேராசிரியர்களும், இலக்கிய கர்த்தாக்களும், ஆர்வலர்களும் கலந்து கொண்டனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பத்திரிகைத்துறை என்பது அவ்வளவு சாதாரண துறை அல்ல. ஒருவர் தனது தனிப்பட்ட ஆக்கங்களை எழுதி ஒரு இலக்கிய வடிவமாக வெளியிடுவதற்கும், பத்திரிகைத் துறையில் சமூகத்துடன் சேர்ந்து செயற்படுவதற்கும் இடையில் எவ்வளவு பெரும் வேறுபாடு. இத்துறையில் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது. ஆனாலும்அவற்றை எல்லாம் தாண்டி இவ்வாறாக ஒரு நீண்டகாலத்திற்கு ஒரு பத்திரிகையை நடத்திச் செல்வதற்கு எவ்வளவோ பொறுமையும் அர்ப்பணிப்பும் தேவை அத்தகைய பொறுமையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு இன்று உலகத்தையே இணைக்கும் ஒரு உறவுப்பாலமாகத் திகழும் இந்த உதயன் பத்திரிகை ஆசிரியர் உண்மையில் போற்றப்படவேண்டியவர். இவரின் பணி மென்மேலும் தொடரவும், சிறக்கவும் இவருக்கு இறைவன் நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்க வேண்டும் என வேண்டிக்கொள்வதோடு,

"நன்றி மறப்பது நன்றல்ல"

அன்றைய தினம் என்னால் அந்தநிகழ்வில் கலந்துகொள்ள முடியவில்லை, எனினும் உதயனில் என்னையும் ஒரு அங்கமாக இணைத்து தனது பத்திரிகையில் வாரம்தோறும் எனது "கடந்தவையும் கடப்பவையும்" எனும் ஆக்கத்தை விருப்பமொடு பிரசுரித்துவரும் திரு. லோகேந்திரலிங்கம் அண்ணாவிற்கு எனது மனமார்ந்த நன்றியினையும் இந்தத் தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.



**நன்றியுடன்**
**உமா மோகன்** (Montreal)

# இவ்வார ராசிபலன்

*(28 பக்கத் தொடர்ச்சி)*




**மகரம்:** பெத்தவங்களால் பெருமை சேரும் வாரம். சோம்பல் அதிகரிக்கும். வருமானம் திருப்தி தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். முதலீடுகளில் கவனம் தேவை. சந்தோஷம் குடிகொள்ளும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றியைத் தரும். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். மதிப்புகள்கூடும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். அனுகூலச் செய்தியால் மனம் மகிழும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். மாற்று மருத்துவம் பலன் தரும். வரவுகள் மிகுதியாகும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகள் திருப்பம் ஏற்படும். குடும்பச் சுமை கூடும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிட்டும். எடுத்த முயற்சி வெற்றி தரும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல்நலம் சீராகும். ஆன்மீகத்தில் ஆர்வம் கொள்வீர்கள். காதல் கை கூடும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,2,3
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கும்பம்:** மற்றவர்களால் மரியாதை கிடைக்கும் வாரம். ஆனந்தம் பெருகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். மனைவி, பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். பொது இடங்களில் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குழப்பங்கள் அகலும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். உடல்சோர்வு ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வாழ்த்துக்கள் வந்து சேரும். மனநிம்மதி தரும். அலைச்சல் அதிகரிக்கும். புது முயற்சியில் ஈடுபடலாம். வாகனச் செலவு ஏற்படும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பெண்களுக்கு பெருமை சேரும் விதமாக அமையும். பயணங்களால் பலன் பெறுவீர்கள். பொறாமைகள் விலகும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கை கூடும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 4,3,1,2
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,G




**மீனம்:** நேர்த்தியும், கீர்த்தியும் கிடைக்கும் வாரம். தான தர்மங்கள் பலன் தரும். மனக்கசப்பு வந்து நீங்கும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. கணவன், மனைவி உறவு மேம்படும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். உடல்நலம் மேம்படும். வாகனச்செலவு ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். வீண் குழப்பங்கள் வந்து போகும். காதல் பிரிவை ஏற்படுத்தும். கோதுமை தானம் தாய்நலம் சேர்க்கும். கஷ்டங்கள் மாறும். வீண் வம்பு அகலும். ஆரோக்கியம் சீராகும். விவேகமான பேச்சுக்கள் ஏற்படும். திறமைகள் வெளிப்படும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். மனநெருக்கடிகள் தீரும். நல்லோர்களின் சந்திப்புக் கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வீண் செலவுகளை தவிர்க்கவும். புதிய வாகனங்ள் வாங்க நேரிடும். பெண்களுக்கு பெருமையான நாளாக அமையும். பிரார்த்தனையால் பயன் பெறுவீர்கள். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். புதுமுயற்சி பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கடன் சுமைகள் தீரும். உதவிகள் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 7,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J

# அன்பின் தொனி - 684

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

ஜெபம்

**ஜெபத்தின் வல்லமை**

கடவுள் தாம் படைத்த மனிதன் தம்மோடு உறவாட வேண்டும் என்பதற்காக தேவன்தாமே ஈவாக ஏற்படுத்திய ஜெப வாயிலாக நாம் எந்நேரமும், எவ்வேளையும், எந்நிலையிலும், எங்கிருந்தாலும், எல்லாவற்றிற்காகவும் அவரோடு பேச லாம், உறவாடலாம், சம்பாஷிக்கலாம், எமது தேவைகளைக் குறித்து விண்ணப்பிக்கலாம், வேண்டுதல் செய்யலாம், மன்றாண்டை ஏறெடுக்கலாம், எதையும் பகிர்ந்து கொள்ளலாம்.

ஜெபத்தின் முக்கியத்துவத்தையும், அதன் பிரதிபலன்களையும் நாம் சரியாகப் புரிந்து, தெரிந்து அதை தேவ சத்தி யத்தின்படி பிரகிப்போமாகில், அதனால் கிடைக்கும் பதில்களும் ஆசீர்வாதங்குளும் மனித சிந்தனைக்கு அப்பாற் பட்டதென்றே கூறலாம்.

அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன், ஆபத்தில் நானே அவ னோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன். - **சங்கீதம்** 91: 15-16

**ஜெபத்தின் வல்லமை**

இந்த உலகம் அறிந்ததிலே மிகவும் சக்திவாய்ந்ததும், வரலாற்றையே மாற்றக்கூடியதுமான வல்லமையைச் செயல் படுத்தக் கூடியமானது என்னவெனில், நாம் தேவனோடு ஜெபத்தில் செலவழிக்கும் நேரம்.

பலவகையான ஜெபங்களைப்பற்றி பரிசுத்த வேதாகமம் விபரிக்கிறது. முதலில் தனிப்பட்ட ஜெபத்தைப்பற்றி பார்ப் போமாகில், தேவனோடு நாம் தனப்பட்டவர்களாக எவ்வளவு நேரம் செலவழிக்கிறோமோ, அதைப் பொறுத்தே அது சக்தியுள்ளதாக அமைகிறது. ஆண்டவர்தாமே நாம் அந்தரங்கமாக ஜெபிக்க வேண்டுமென்று நமக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு, அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். - **மத்தேயு** 6: 6

ஜெபத்தில் தேவனோடுள்ள உரையாடலின் மூலம் நாம் நமது உணர்வுகளையும், பாரங்களையும் வெளிப்படுத்தும் போது, அந்த ஜெபம் துதியின்வடிவில் இரக்கலாம் (**சங்கீதம்** 34: 1-4) பாவ அறிக்கையாகவும் (1 **யோவான்** 1: 9), வேண்டுகோளாகவும் (**மத்தேயு** 7: 7) நன்றி கூறுதலாகவும் இருக்கலாம் (**எபேசியர்** 5: 4-20).

**ஜெபத்தைக் குறித்த ஐந்து கட்டளைகள்**

**1. எப்போதும் விழித்திருந்து ஜெபிக்க வேண்டும்.**

ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத் திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்.
- **லூக்கா** 21: 36

அப்படியே நீங்களும் விழித்திருங்கள், ஏனெனில், வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள். நீங்கள் நினையாதவேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள் என்றார்.
- **மாற்கு** 13: 35-37

**2. சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள்.**

நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள், ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்.
- **மத்தேயு** 26: 41

**3. ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்**

அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆகையால் அறுப்புக்கு எஜ மான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.
- **லூக்கா** 10: 2

**4. ஆதிகாரத்திலுள்ளவர்களுக்காக ஜெபம் செய்யுங்கள்**


நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும், நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத் தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். - 1 **தீமோத்தேயு** 2: 1-2

**5. உங்கள் விரோதிகளுக்காக ஜெபம் பண்ணுங்கள்**

உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களை நிந்திக்கிறவருக்காக ஜெபம்பண்ணுங்கள். - **லூக்கா** 6: 28

தொடரும்...





SUBRA
SUBRA MORTGAGE FINANCIAL
MORTGAGE SOLUTIONS
✦ RESIDENTIAL ✦ COMMERCIAL ✦ INDUSTRIAL
✦ VACANT LAND ✦ CONSTRUCTION
Know the basic things on Mortgage to find a better way for your Future!
CONTACT US TODAY
NESAN
416-908-5656
1st & 2nd Mortgages | Purchase | Refinance | Renewal | Switches | Equity lind of Credit
Pre-approvals | Self-employed | Multi-rental properties | New immigrants
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406, Toronto, M1B 2W1
www.subra.com
WE DEAL WITH ALL BANKS
Brokerage #10330
Powered By
MORTGAGE ALLIANCE
Scotiabank
radius financial
EQUITABLE BANK
RMG mortgages
TD Canada Trust
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
MCAP

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas, Broker
Sun Sanmugathas, Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930 5 McMurchy Ave N. Unit 12 Brampton, ON L6X 2R6
905-783-1895 3470 Platinum Drive, Unit 35 Mississauga, ON L5M 2S4

உதயம் 1406 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 17, 2023

# WOMEN'S DAY CELEBRATION HOSTED BY CANADIAN WOMEN COUNCIL




ரொறன்ரோ மாநகரில் சிறப்பாக இயங்கிவரும் கனடிய பெண்கள் கழகத்தினர் நடத்திய சர்வதேச பெண்கள் தினக் கொண்டாட்ட நிகழ்வு கடந்த சனிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது.

ஈற்றொபிக்கோ நகரில் கிப்ளிங் நகர சன சமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்

நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். சிறுவர் சிறுமியர்கள் மற்றும் மூத்தோர்கள் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சிகளும் உரைகளும் இடம்பெற்றன.இங்கு காணப்படும் படத்தில் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பவதாரணியின் பாரதி கலைக்கூடத்தின் நிறுவுனர் மதிவாசன் சீனிவாசகம் அவர்களுக்கு அன்றைய பிரதம விருந்தினரும் ரொறன்ரோ நகர சபையின் ஈற்றோபிக்கோ வட்டாரத்தின் கவுன்சிலருமான வின்சன்ட் கிறிஸாண்டி பாராட்டுப் பத்திரத்தை வழங்குவதையும் காணலாம்.

(உள்ளே 21ம் பக்கத்தில் தொடர்ச்சி)



# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடா செயற்பாட்டாளர் நிமால் விநாயகமூர்த்தியின் தந்தையார் வை. விநாயகமூர்த்தி காலமானார்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடா செயற்பாட்டாளரும் முன்னாள் அமைச்சரும் கணக்காளருமான திரு நிமால் விநாயகமூர்த்தியின் தந்தையார் வை. விநாயகமூர்த்தி அவர்கள் கனடாவில் காலமானார் என்ற செய்தியை நாம் ஆழ்ந்த அனுதாபத்துடன் இங்கு பதிவு செய்கின்றோம்.

யாழ். கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், நவக்கிரி, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட அமரர் வைரமுத்து விநாயகமூர்த்தி அவர்கள் 16-03-2023 வியாழக்கிழமை அன்று காலமானார். இவர் மிக நீண்ட காலமாக தனது குடும்பத்தினருடன் கனடாவில் வாழ்ந்து வந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பத்திரிகையின் உட்பக்கமொன்றில் காணப்பெறுகின்றன.

(உள்ளே அறிவித்தல் 18ம் பக்கத்தில்)

# சென்னையில் இடம்பெற்ற நந்தவனம் பவுண்டேசன் சர்வதேச மகளிர் தினவிழாவில் கனடா இந்திராணி நாகேந்திரத்திற்கும் கௌரவம்



சென்னை, நுங்கம்பாக்கம் நட்சத்திர ஹோட்டலில் தமிழ்நாடு நந்தவனம் பவுண்டேசன் தலைவர் சந்திரசேகரன் தலைமையில், மேற்படி விழா கடந்த வாரம் நடைபெற்றது. லிம்ரா பேக்ஸ் எம். சாதிக் பாட்சா (செயலாளர், நந்தவனம் பவுண்டேசன்) முன்னிலை வகிக்க , சிறப்பு விருந்தினர்களாக இலங்கை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், இலங்கை தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தெ.செந்தில் வேலவர், சென்னை மதுரா டிராவல்ஸ் வி கே டி.பாலன் மற்றும் முதல் உலக மூத்த குடிமக்கள் அமைப்பின் நிறுவனர் அசோக்குமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.அன்றைய விருதுகளில் ஒன்றை கனடா வாழ் சமூக சேவையாளர் இந்திராணி நாகேந்திரம் அவர்களும் பெற்று மகிழ்ந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலவச கனடா விசா ஆலோசனை யாழ்ப்பாணத்தில்
மார்ச் 19 2023
JETWING HOTEL JAFFNA
37, Mahatma Gandhi Road.
நேரம்: காலை 10:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை
STUDENT VISA
SCHOOLING VISA WITH PARENTS
Kids Age 6 to 17 Years | No Interview, No IELTS
VISIT VISA FAMILY / TOURIST BUSINESS
REJECTION VISA APPEAL & MANY MORE . . .
For inquires Call on 0777 761 346
flex Institute
Director - Flex Institute

# இலங்கையில்: "அரசியல் சுனாமியா"? அல்லது "புள்ளடி புரட்சியா"?

## வி.தேவராஜ் - மூத்த ஊடகவியலாளர்



ரணில் - ராஜபக்ச ஆட்சிக்கு தேர்தல் சிவப்பு விளக்கு

• தேர்தல் நடந்தால்? பெரும்பான்மை கேள்விக் குறி?

இலங்கை தற்போது தாச்சியில் இருந்து அடுப்பில் விழுந்த நிலையில் உள்ளது.அடுப்பில் விழுந்த நிலையில் தென்னிலங்கை மக்கள் தமக்கான தலைமையைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்

தந்தை செல்வநாயகம் தமிழ் மக்களின் தலை விதியை நிர்ணயிக்கும் பயணத்தில் நம்பிக்கையிழந்த நிலையில் "தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று தெரிவித்தார். அந்த ஒரு நிலைக்கு தென்னிலங்கை இன்று வந்துள்ளது.

(உள்ளே 13ம் பக்கத்தில் தொடர்ச்சி)

# ஸ்காபுறோவில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் ஆன்மீகக் குரு பங்காரு அடிகளாரின் 83வது பிறந்த தின வைபவம்





கனடா ஸ்காபுறோவில் நடைபெற்ற மேல்மருவத்தூர் திபராசக்தி பீடத்தின் அதிபரும் ஆன்மீகக் குருவுமாகிய பங்காரு அடிகளாரின் 83வது பிறந்த தின வைபவத்தை ஸ்காபுறோ ஆதிபராசக்தி குரு மன்றத்தின் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா அவர்கள் தனது ஆலயத்தின் தொண்டர்கள் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள்

சகிதம் ஏற்பாடு செய்திருந்தார். கடந்த 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற இந்த விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன நிகழ்ச்சிகளை இசைக் கலைஞர் அருட்சோதி அவர்கள் தொகுத்து வழங்கினார்.

இங்கே காணப்படும் படங்களில் நடன ஆசிரியைகள் ஸ்ரீமதி ரேணுகா விக்னேஸ்வரன் மற்றும் ஸ்ரீமதி ஜனனி ரவிசங்கர் ஆகியோரின் மாணவிகள் நடனமாடி அனைவரையும் மகிழ்வித்தனர். படங்கள்

விழாவில் எடுக்கப்பட்டவையாகும்.

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136